@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

ஜூலை 2018

Vol.69, Issue 2 | Price ₹35 | Annual Subscription ₹420

RI தலைவர் பேரி ரஸினுடன் அவரது மனைவி எஸ்தர்

Rotary

இந்த வருடத்தை நடத்திச் செல்ல நாங்கள் தயார்

RID C பாஸ்கருடன் புதிய மாவட்ட ஆளுநர்கள் சென்னை ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சந்திப்பில்.

புகைப்படம்: K. விஸ்வநாதன்

உள்ளே

12 பேரி என்றே கூப்பிடுங்கள்
ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பேரி ரஸ்ஸின் பற்றிய குறிப்பு.

22 பெண்களை மேம்படுத்தும் சுயஉதவி திட்டம்
பெண்களின் பொருளாதார விடுதலைக்கு உதவும் நீதிபதி சுவாதி சவாணுடன் ஒரு நேர்காணல்.

36 பள்ளிப்படிப்பைக் கைவிட்ட சிறுமிகளுக்கு மறுவாய்ப்பு
பள்ளிப் படிப்பை நிறத்திய பெண்கள், சிறுமிகளைக் கண்டறிந்து பொதுத் தேர்வு எழுத ஏற்பாடும் செய்யும் முயற்சியில் உள்ள அங்க்லேஷ்வர் ரோட்டரி சங்கம்

44 பசுமையான 90 ஆண்டுகள்
சென்னை ரோட்டரி சங்கத்தின் 90வது ஆண்டுவிழா. உறுப்பினர்களின் மலரும் நினைவுகள்.

56 பழங்குடி கிராமம் மெழுகுவர்த்தியிலிருந்து சூரிய விளக்குகளுக்கு மாறுகிறது
மின்வசதி இல்லாத கிராமத்தில் சூரிய சக்தி விளக்குகளை ஏற்றி, ஒளியேற்றும் பெங்களூரு ரோட்டரி சங்கத்தினர்

64 பரதநாட்டியம் உடல், மனம் மற்றும் ஆன்மாவின் இணைவு
தென் மாநிலத்தின் பண்டைய, உற்சாகமிக்க பாரம்பரிய நாட்டியத்தின் அழகு.

70 பணியிடத்தில் பூரண ஆரோக்கியம்
பணியில் இருப்போருக்கு சரியான உணவு, வழக்கமான உடற்பயிற்சி அளிக்க உதவும் கையேடு.

அட்டையில்: பகாமாஸ் நாட்டின் நசாவ் நகரில் RI தலைவர் பேரி ரஸ்ஸின் அவரது மனைவி எஸ்தர்.

படங்கள்: அலைஸ் ஹென்ஸன், தி ரோட்டேரியன்

ரோட்டரி நியூஸ் சிறந்த நிலையில் இருக்கிறது

ரோட்டரி நியூஸ் மாதத்திற்கு மாதம் பத்திரிக்கைத் துறையில் சிறந்த நிலையை அடைந்து வருகிறது. ஏப்ரல் மாதத்தில் ரெனூட்டாய், மே மாதத்தில் கௌரவத்துடனான கல்வி, மற்றும் ஜூன் இதழில் அட்டைப் படத்தில் RIPE பாரி ரேசின், சிறந்த புகைப்படங்களும் மற்றும் வெவ்வேறு தலைப்புகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய செய்தித் தொகுப்பும், பத்திரிகையைப் படிக்கத் தூண்டுகிறது. இரண்டு கட்டுரைகள் உண்மையிலேயே மிகவும் சுவாரஸ்யமாக இருந்தன: சக் - ஒரு முழு மனிதன் மற்றும் சிறிய நகரம் பெரிய திட்டங்கள்.

சவுமித்ரா சக்ரபர்த்தி, RC டோலிகுன்ஜ் — D 3291



உங்கள் தலைமையின் கீழ் ரோட்டரி நியூஸ், கண்களைக் கவர்ந்து இழுக்கும் வடிவமைப்புடன், நல்ல தகவல்களுடன் ஒரு சக்தி வாய்ந்த தகவல்தொடர்புக் கருவியாகிவிட்டது. இப்போது நாங்கள் மற்ற தெற்காசிய நாடுகளைப் பற்றிய புள்ளிவிவரங்களையும், மாவட்டங்களின் செய்திகளைப் படிக்க விரும்புகிறோம், அப்போதுதான் இந்தப் பத்திரிகை முழுமையாகத் தெற்காசிய நாடுகளின் பிரதிநிதியாகும். ஜூன் இதழில், ஆட்ரே ட்ருஷ்கே எழுதிய, "அவுரங்கசீப்: த மேன் அண்ட் த மித்" என்ற புத்தகத்தின் விமர்சனத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். பாராட்டுக்கள். TCA ஸ்ரீனிவாச ராகவனின் வழக்கமான எழுத்துக்களை வாசிக்க நான் விரும்புவேன், சென்ற முறை வெளிவந்த கட்டுரையும் விதிவிலக்கல்ல.

PDG லலித் சுர்ஜன் — D 3261

ஒவ்வொரு மாதமும் ரோட்டரி இதழுக்காக காத்திருப்பேன். ஆசிரியரின் தலையங்கம், கட்டுரைகள், சிந்தனையைத் தூண்டும் மற்றும் ஊக்கமளிக்கும் கதைகள், மற்றும் சித்திர காட்சி விளக்கங்கள், அனைவரையும் நன்றாக ஊக்கப்படுத்தும் விதமாக எழுதும் தலையங்கம் மற்றும் பல்வேறு ரோட்டரி நடவடிக்கை பற்றிய கட்டுரைகள் அனைத்தும் பத்திரிகை ஆசிரியரின் கல்வி பின்னணியைப் பற்றி என்னை வெகுவாக ஆச்சரியப்பட வைக்கிறது... ஆசிரியர் குழுவையும் நன்றாக நிர்வகிக்கிறார்; அவருக்கும் அவரது குழுவினருக்கும், குறிப்பாக ஜெய்ஸ்ரீ-க்கு, பாராட்டுகள்.

தீபக் அகர்வால், RC சிலிகுரி மிட்டவுன் — D 3240

ரோட்டரி நியூஸ் பயனுள்ள கட்டுரைகளுடன், எதிர்பார்க்க வைக்கும் பத்திரிக்கையாக மாறி விட்டது. ஜூன் பிரதி, அருமை. PRIP சார்லஸ் சி. கெல்லரின் எழுத்து மற்றும் நேர்மையான அறிக்கைக்காக பாராட்டியுள்ளார். நமது மூத்த தலைவர்கள் உள்ளதை உள்ளபடி சொல்லுவது மிகவும் பாராட்டத்தக்கது. RID C பாஸ்கரின், "கொண்டாட்டம் ஆடம்பரமாக இருக்கத் தேவையில்லை" என்ற கருத்து, வீணான செலவுகளைத் தவிர்க்க அறிவுறுத்துகிறது. RIPE பாரி ரேசினுடன் நேர்காணல் ஈர்க்கத்தக்க விதத்தில் இருந்தது.

K K தீர், PDG — D 3070

சிறிய நகரங்களில் ரோட்டரி

RC ரத்லம், D 3040, சங்கத்தின் அர்ப்பணிப்பு, அசாதாரண முயற்சி பற்றி ஜூன் இதழில் வெளியான கட்டுரை மகிழ்ச்சியளித்தது. நான் 1973 ஆகஸ்ட் மாதம் சங்கத்தில் உறுப்பினர் என்ற அந்தஸ்திலிருந்து ரொட்டேரியனாக மாறுவதற்கு நீண்ட காலம் ஆகவில்லை. உறுப்பினராக 22 ஆண்டுகள் என் வாழ் நாளில் சிறந்த ஆண்டுகள்.

1995ல் நான் தில்லிக்குச் சென்று, RC டெல்லி மிட் டவுனில் சேர்ந்தது முதல், ரோட்டரி சங்கத்தில் உரையாற்றினாலும், உறுப்பினர் வளர்ச்சி, சேவைத் திட்டங்கள் அல்லது பொது இமேஜ், நான் முன்பு இருந்த சங்கத்தில் எப்படி இருந்தது என்பதை பற்றியே அதிகம் பேசினேன். RC ரத்லம் சங்கத்தின் வளர்ச்சிக்கு அதன் உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு, (குறிப்பாக தந்தை-மகன் அன்கெலாரியா இரட்டையர்கள்), அதன் PP (1983–84) மற்றும் PDG (1993–94) சங்கத்தின் வளர்ச்சியைப் பார்த்து பெருமைப்படுகிறேன்.

இந்தியாவில் ரோட்டரி சிறிய நகரங்களில் அதி வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்கும்-சிறிய நகரங்கள், பெரிய திட்டங்கள்-என்ற அற்புதமான கட்டுரைக்கு நன்றி. தனலமற்ற சேவைக்கு இது ஒரு உண்மையான உருவகம்.

PDG ராமன் பாட்டியா RC தில்லி மிட்டவுன் D 3011

'கழுவுவது' சிறந்தது

கழுவுவதா அல்லது துடைப்பதா? என்ற ரமேஷ் பாட்டியாவின் (மார்ச் வெளியீடு) கருத்துகளை ஆதரிக்கிறேன். துடைப்பதை விடக் கழுவுவதே சிறந்தது என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப் பட்டுள்ளது. இந்தியர்கள் பல ஆண்டு

களாகக் கழுவும் முறையைப் பயன்படுத்தி வருகின்றனர், துரதிர்ஷ்டவசமாக, ஐரோப்பிய கலாச்சாரத்தால் நாம் பாதிக்கப்படுகிறோம். இந்தியாவில் பல 5 நட்சத்திர ஹோட்டல்களில் வெளிநாட்டினரை விட இந்திய விருந்தினர்கள் அதிகமாகத் தங்கினாலும் கூட, கழிப்பறைகளில் கழுவும் முறை கடைப்பிடிக்கப் படவில்லை. நாம் கழுவும் முறையைப் பயன்படுத்த பழகி இருக்கிறோம், அது இல்லை என்றல், நமக்கு சுத்தமாகவும் சௌகரியமாகவும் இருப்பதில்லை, கழுவதற்காக நாம் மினரல் வாட்டர் பாட்டில்களைப் பயன்படுத்த வேண்டி இருக்கிறது.

பிரியதர்ஷினி கனோரியா D 3011

இதயத்துக்குப் புத்துயிரளிக்க சரியான வழி

RC கொச்சின் மேற்கு, D 3201, VPS லேக்ஷோர் மருத்துவமனை மற்றும் கொச்சி நகர காவல்துறை ஆகியோரால் நடத்தப்பட்ட சமாரியன் திட்டத்தின் கணக்கு (சிறந்த சமாரியன்களை உருவாக்குதல்) மிகவும் சுவாரஸ்யமானதாக இருந்தது. இதய இரத்தக்குழாய் புத்துயிர்ப்புக்கு குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் அளிக்கப்பட்ட பயிற்சி போற்றக்கூடியதாக இருந்தது. சந்தேகத்துக்குரிய எல்லா இதய நிறுத்தங்களிலும் வாய் சுவாசம் அளிக்கத் தேவையில்லை மற்றும் அது முறையான மார்பு அழுத்தத்துக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடும். நாம் செய்ய வேண்டிய 3 முக்கியமான படிகள் உதவிக்கு அழைப்பது; தொடர்ச்சியாகவும், சரியாகவும் மார்பை அழுத்துதல் - ஒரு நிமிடத்திற்கு 100 முறை - AED (தானியங்கி வெளிப்புற அதிர்வுக்கருவி) மூலம் மின் அதிர்ச்சி கொடுக்கப்படும் வரை, பாதிக்கப்பட்டவரை சரியான நிலையில் வைத்திருத்தல். மூழ்குதல் அல்லது மூச்சுத்திணறலால் இதயச் சுவாச நிறுத்தம் ஏற்பட்டால் மட்டுமே வாய்ச் சுவாசம் அளிக்க வேண்டும்.

மும்பையில், ஹோலி ஃபேமிலி ஹாஸ்பிடலின் "ஐ கேர் புராஜக்டில்" நாங்கள் எண்ணற்ற AEDகளைக் கொடுத்து உதவியிருக்கிறோம் மற்றும் இதய இரத்தக்குழாய் புத்துயிர்ப்பு பற்றி குடிமக்களுக்குப் பயிற்சியளித்திருக்கிறோம். இந்த முயற்சிக்காக கொச்சின் மேற்கு ரோட்டரி சங்கத்துக்கு பாராட்டுகள்.

டாக்டர் அக்ஷய் மேத்தா
RC மும்பை ஏர்போர்ட் D 3141

RIP இயன் ரைஸ்லியின் செய்தி சுவாரஸ்யமாக இருந்தது. ஆனால், இரண்டு நாடுகளில் 22 பேர் போலியோவினால் பாதிக்கப்பட்டு இருப்பதைத் தெரிந்துகொண்டது மிகவும் வருத்தமாக இருக்கிறது. RID மற்றும் டிரஸ்ட்டீ தலைவரின் செய்திகள், சக் - ஒரு முழுமையான மனிதர் என்ற ராஜா சாபுவின் கட்டுரை உட்பட, சிந்தனையைத் தூண்டும்படி இருந்தது. எண்களுக்குப் பின்னால் ஓட வேண்டாம், மற்றும் ரோட்டரி நடவடிக்கைகளைப் பற்றிய பிற விரிவான அறிக்கைகள் மதிப்பு மிக்கதாக இருந்தது.

MT பிலிப், RC திருவனந்தபுரம் சப்அர்பன் D 3211

இள ரத்தம்

"எண்கள் பின்னால் ஓட வேண்டாம்" என்று RID C பாஸ்கர் சொல்வதற்கு நான் முற்றிலும் உடன்படுகிறேன். சுவாரஸ்யமான புள்ளிவிவரங்களை உருவாக்குவதற்கான உறுப்பினர் வளர்ச்சி நாளாவட்டத்தில் ரொட்டேரியன்களின் தரத்தை குறைக்க வழிவகுத்தது. 1990களின் நடுப்பகுதியில், எனது சங்கமான 58 வயதான RC மெட்ராஸ் சவுத், புதிய பிரெசிடன்ட் பதவியேற்ற நாளில் எந்த முயற்சியும் இன்றி எட்டு புதிய உறுப்பினர்கள் சேர்ந்தனர்; 7 பேர் வருடக் கடைசியில் வெளியேறினர். இளைய உறுப்பினர்களை ஈர்க்கத் தவறியதால் எங்கள் சங்கம் ஒரு சிரமமான கட்டத்தை கடந்தது. நாங்கள் ஆப்பரேஷன் நியூ பிளட் என்ற திட்டத்தை துவக்கும் வரை 65 தான் சராசரி உறுப்பினர் வயதாக இருந்தது. 40-50 வயதில் உள்ள புதிய உறுப்பினர்கள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இன்று எங்கள் சங்கத்தின் சராசரி வயது 45 மற்றும் RID 3232ல் இது மிகவும் துடிப்பான சங்கங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

ஆர் வி ராஜன்
RC மெட்ராஸ் சவுத் D 3232

எண்களின் விளையாட்டு

ரோட்டரியில் உறுப்பினர் சேர்ப்பது ஒவ்வொரு ஜூலை மாதமும் புதிய நிர்வாகிகளின் பதவி ஏற்பு வேலைகள் பரபரப்பாக நடைபெறும்.

பெரும்பாலும் புதிய உறுப்பினர்களைக் கண்மூடித்தனமாக சேர்க்கும் உந்துதலில், சங்க நிர்வாகிகள் RI வழங்கியுள்ள புதிய உறுப்பினர் சேர்க்கை நடைமுறையைப் பின்பற்ற மறந்துவிடுகின்றனர். RI பிரெசிடென்ட் இயன் ரைஸ்லி இந்தச் செயல்முறையை ''உறுப்பினர் சேர்க்கையில் கொள்ளை'' எனக் கேலியாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்ன RID C பாஸ்கர், ரோட்டரி சீனியர்களை "எண்களுக்குப் பின்னால் ஓடவேண்டாம்" என்று வலியுறுத்தினார். மனிதகுலத்தைப் பற்றி கவலைப்படும் உறுப்பினர்கள் தான் நமக்குத் தேவை, சங்க நிர்வாகிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

Dr. சுந்தரம் பாஷா
RC புபனேஸ்வர் D 3262

நேர்மையான அறிக்கை பற்றிய ஆசிரியரின் குறிப்பில் PRIP கெல்லர் அவர்கள், பெரும்பாலும் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கும் ரொட்டேரியன்கள் கூடுதல் புகழ் சேர்க்க கூடுதலாக ஒரு அடுக்கு கிரீம் பூசிக்கொள்கிறார்கள் என்கிறார். ஆனால் ரஷீதா பகத்தின் தலைமையின் கீழ், ரோட்டரி நியூஸ் குழு வெளியிடுவதற்கு முன்னர் உண்மைகளைச் சரிபார்க்கிறது. கடந்த ஆண்டு சஞ்சித் பங்கர் ராய்க்கு 4-வே டெஸ்ட் விருது வழங்கப்பட்டபோது, உண்மையைச் சரிபார்ப்பதற்காக அவர்களிடமிருந்து பல தொலைபேசி அழைப்புகள் எனக்கு வந்தது .

பியூஷ் தோஷி, RC பேலூர் D 3291

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org ; rushbhagat@gmail.com

Governors Council

RI Dist 2981	DG	S Piraiyon
RI Dist 2982	DG	Nirmal Prakash A
RI Dist 3000	DG	RVN Kannan
RI Dist 3011	DG	Vinay Bhatia
RI Dist 3012	DG	Subhash Jain
RI Dist 3020	DG	Guddati Viswanadh
RI Dist 3030	DG	Rajiv Sharma
RI Dist 3040	DG	Gustad Anklesaria
RI Dist 3053	DG	Priyesh Bhandari
RI Dist 3054	DG	Neeraj Sogani
RI Dist 3060	DG	Pinky Patel
RI Dist 3070	DG	Barjesh Singhal
RI Dist 3080	DG	Praveen Chander Goyal
RI Dist 3090	DG	Dr Vishwa Bandhu Dixit
RI Dist 3100	DG	Deepak Jain
RI Dist 3110	DG	Arun Kumar Jain
RI Dist 3120	DG	Stuti Agrawal
RI Dist 3131	DG	Dr Shailesh Palekar
RI Dist 3132	DG	Vishnu S Mondhe
RI Dist 3141	DG	Shashi Sharma
RI Dist 3142	DG	Dr Ashes Ganguly
RI Dist 3150	DG	Ramesh Vangala
RI Dist 3160	DG	Konidala Muni Girish
RI Dist 3170	DG	Ravikiran Janradan Kulkarni
RI Dist 3181	DG	Rohinath P
RI Dist 3182	DG	Abhinandan A Shetty
RI Dist 3190	DG	Suresh Hari S
RI Dist 3201	DG	A Venkatachalapathy
RI Dist 3202	DG	Dr E K Ummer
RI Dist 3211	DG	E K Luke
RI Dist 3212	DG	K Raja Gopalan
RI Dist 3231	DG	C R Chandra Bob
RI Dist 3232	DG	Babu Peram
RI Dist 3240	DG	Dr Sayantan Gupta
RI Dist 3250	DG	Kumar Prasad Sinha
RI Dist 3261	DG	Nikhilesh M Trivedi
RI Dist 3262	DG	Bhabani Prasad Chowdhury
RI Dist 3291	DG	Mukul Sinha

Board of Permanent Trustees & Executive Committee

PRIP	Rajendra K Saboo	RI Dist 3080
PRIP	Kalyan Banerjee	RI Dist 3060
PRID	Sudarshan Agarwal	RI Dist 3011
PRID	Panduranga Setty	RI Dist 3190
PRID	Sushil Gupta	RI Dist 3011
PRID	Ashok Mahajan	RI Dist 3141
PRID	Yash Pal Das	RI Dist 3080
PRID	Shekhar Mehta	RI Dist 3291
PRID	P T Prabhakhar	RI Dist 3232
PRID	Dr Manoj D Desai	RI Dist 3060
RID	C Basker	RI Dist 3000
TRF Trustee	Gulam A Vahanvaty	RI Dist 3141
RIDE	Dr. Bharat Pandya	RI Dist 3141
RIDE	Kamal Sanghvi	RI Dist 3250

Executive Committee Members (2018–19)

DG Rajiv Sharma Chair – Governors Council	RI Dist 3030
DG Pinky Patel Secretary – Governors Council	RI Dist 3060
DG Subhash Jain Secretary – Executive Committee	RI Dist 3012
DG A Venkatachalapathy Treasurer – Executive Committee	RI Dist 3201
DG Shashi Sharma Member – Advisory Committee	RI Dist 3141

ROTARY NEWS / ROTARY SAMACHAR / ROTARY NEWS (TAMIL)

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org

Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

ஆண்-பெண் சமத்துவத்தில் முன்னேற்றம்

இது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதல்ல, புதிய மாவட்ட கவர்னர்களின் பேட்டி யதார்த்தமான தேர்வு தான், ஜெய்ஸ்ரீயும், நானும் எங்களுடைய செய்தித் திரட்டில் இந்த மாதத்தின் DGக்களை பேட்டி எடுக்க முடிவு செய்திருந்தோம். பேட்டி எடுத்த ஐந்து DGகளில் நான்கு பேர் மாவட்டத்தின் தலைமை பொறுப்பில் தங்கள் ஆண்டு பணிகாலத்தில் தங்கள் சங்கங்களில் பெண் உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்துவதில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தியுள்ளனர் என்பது இந்த பேட்டிகளின் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். RC அலகாபாத், RID 3120 ஸ்துதி அகர்வால் இரு பெண் கவர்னர்களில் ஒருவர், மற்றொருவர் RC பரோடா, RID 3060 பிங்கி பட்டேல் ஆவார். இந்தியாவில் ஒரே காலத்தில் இரண்டு பெண் கவர்னர்கள் இருப்பது இது தான் முதல் முறை. ஸ்துதி இந்தியாவின் மெட்ரோவிலிருந்தோ அல்லது பெருநகரத்திலிருந்தோ இல்லாமல், குறிப்பாக பெண்கள் அதிகாரத்தில் இல்லாத ஒரு மாநிலமான உத்தரப்பிரதேச த்திலிருந்து வந்திருக்கிறார், அத்துடன் இப்போதைய மக்களவையில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களில் அதிக எண்ணிக்கையை 13-உ.பி., கொண்டிருந்தாலும் கூட, மேலும் ஒரு பெண், ராஷ்டிரிய லோக் தள் கட்சி யைச் சேர்ந்த தபாஸம் ஹசன், கைரானாவில் சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்று மக்களவைக்குச் சென்றுள்ளார். தனது மாவட்டத்தில் ரோட்டரிக்கு பெண்களைக் கொண்டுவர ஸ்துதியின் தீர்வுக்கு மூன்று பாராட்டுக்கள், எண்ணிக்கையை அதிகப்படுத்துவது மட்டுமல்லாது "அவர்கள் பணி செய்வதையும் எங்கள் சேவைத் திட்டப்பணிகளில் முழுமூச்சாக களமிறங்கி பங்கேற்பதையும் உறுதி செய்கிறேன்". ஆடம்பரத்தைக் குறைக்கவும் சமூகத் திட்டப்பணிகளில் கவனம் செலுத்தவும் பெண்களைப் பயன்படுத்துவதற்கு இவான்ஸ்டோன் மற்றும் இந்தியா இரண்டு இடங்களிலிருந்தும் ரோட்டரியின் தலைமையிடமிருந்து வந்த சமீபத்திய வழிகாட்டுதல்களை திறமையான பதிலால் அழகாகத் தொடர்பு படுத்துகிறார்: "பெண்கள் செலவு செய்வதில் சிக்கனமாக இருப்பதால் தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்."

ரோட்டரி நியூஸில், பெண்களின் கல்வி, நல்வாழ்வு மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேற்கூறிய அனைத்திலும் திறன் வளர்க்க கவனம் செலுத்தும் திட்டப்பணிகளை இடம்பெறச் செய்வது மகிழ்ச்சியாக இருக்கிறது. தற்செயலாக ஒரு ரோட்டரி அமைதிப் பேரறிஞராக மாறிய புனே குடும்ப நல நீதிமன்றத்தின் நீதிபதி சுவாதி சாவன் அவர்களால் தொடங்கப்பட்ட, கைவிடப்பட்ட அல்லது நீதிமன்றங்கள் அறிவித்த ஜீவனாம்சத் தொகையைச் செலுத்த மறுக்கும் ஆண்களால் விவாகரத்து செய்யப்பட்ட பெண்களுக்கு சிறப்புப் பயிற்சியளிக்கும் ஸ்வயம் சித்தா என்ற ஒரு சுய - ஆற்றல் வளர்க்கும் முன்னோடித் திட்டம் பற்றி நாங்கள் எழுதியிருந்தோம். RID 3131 Rtn வைஷாலி பாகவத் அவர்கள், குடும்பநல நீதிமன்றம் மற்றும் சில NGOகளுடன் இது போன்ற பல பெண்களுடைய திறன் வளர்க்க கைகோர்த்திருக்கின்றனர். இவர்கள் தாங்களாகவே சுயதொழில் செய்து அதன் மூலம் ஓரளவு வருமானம் ஈட்டிவருகின்றனர். குஜராத்தில் PDG அசோக் பஞ்ச்வாணி மற்றும் அவருடைய மனைவியும் RC அங்லேஷ்வரின் முன்னாள் பிரசிடென்டுமான மீரா ஆகியோரின் முயற்சி காரணமாக, இந்த தொழில்நகரத்தில் பல்வேறு காரணங்களுக்காக படிப்பைக் கைவிட்ட சிறுமிகள் மற்றும் இளம் பெண்களுக்கு 'பிரதம்' ஆசிரியர்கள் மூலம் சிறப்பான பயிற்சியளிக்கப்படுகிறது, இவர்கள் பொதுத் தேர்வு எழுதவும் அவர்கள் விருப்பப்பட்டால் மேற்படிப்பு படிக்கவும் இந்த சங்கம் இவர்களுக்கு கட்டணம் செலுத்துகிறது. புதிய நம்பிக்கை பெற்றுள்ள சிறுமிகளில் சிலர் கம்ப்யூட்டர் வகுப்புகளில் சேர்ந்திருக்கிறார்கள். மேலும் ஒரு கட்டுரையில், RC மண்டி, RID 3070 நடத்தும் ஒரு திட்டப்பணியை உங்களுக்குத் தெரிவிக்கிறோம், ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள மண்டிக்கு அருகில் உள்ள கர்வஸ்ராவில் வசிக்கும் கிராமப்புற பெண்களுக்கு உதவும் நோக்கத்துடன் அந்தக் கிராமத்தில் ஒரு இலைத் தட்டு தயாரிக்கும் சிறு உற்பத்தி மையம் அமைத்து அதன் மூலம் ஒரு நாகரீகமான வாழ்க்கைக்குச் வழி செய்கிறது.

பெண்களுக்கு கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மற்றும் உளவியல் ரீதியாகவும் உதவுவதற்கும், அவர்களின் தன்னம்பிக்கையையும் தன்-மதிப்பின் உணர்வையும் மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு திட்டப்பணியும், அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும், உங்கள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் உதவி செய்வது மட்டுமல்ல, ரோட்டரியை செல்வச் செழிப்பான தாகவும், மதிப்பு மிக்கதாகவும் மாற்றுகிறது.

ரஷீதா பகத்

உலகம் நலம் காக்க உந்துசக்தியாக இருப்போம்

அன்பார்ந்த ரொட்டேரியன்களே,

ஒரு வருடத்திற்கு முன்பு, உங்களுடைய RI இயக்குனர்களில் ஒரு புதிய வாசகத்தை ஏற்றுக்கொண்டது, அது நமது அமைப்பிற்கும், எதிர்காலத்திற்கும் நமக்குள்ள ஆசையைப் பிரதிபலிக்கிறது. "மக்கள் ஒற்றுமையுடன், நீடித்து இருக்கும் மாற்றத்தை - இந்த உலகளவிலும், நமது சமூகத்திலும் மற்றும் நம்மிடமும் ஏற்படுத்த முயற்சி எடுக்கும் ஒரு உலகத்தை ஒன்றிணைந்து காண்போம்," என குறிப்பிடுகிறது.

இந்த எளிமையான வாக்கியம் ரோட்டரிக்கு என்ன தேவை என்பதை மிகச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. நாம் இணைந்திருக்கிறோம், ஏனென்றால் நாம் தனித்து இருந்ததை விட இப்போது மிக வலிமையாக இருக்கிறோம். நாம் முயற்சிகளைச் செய்கிறோம், ஏனென்றால் கனவுகள் மட்டும் காண்பவர்களல்ல நாம், அதைச் செயல்படுத்துபவர்கள். கால காலத்திற்கும் நீடித்து இருக்கும் மாற்றத்தை - இந்த உலகம் முழுவதிலும், நமது சமூகத்திலும் நமது செயல்கள் முடிந்த பின்பும் கூட நிலைத்திருப்பதை உருவாக்கப் பணி செய்கிறோம். மேலும், நம்மிடம் மாற்றத்தை ஏற்படுத்த நாம் பணியாற்ற வேண்டும் - நம்மைச் சுற்றி ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவது மட்டுமல்லாது, சிறந்த மக்களாகவும் நாம் மாற வேண்டும்.

பிரெஞ்சு எழுத்தாளர் ஆண்டோய்ன் டி செயின்ட்- எக்சூபெரி (Antoine de Saint & Exupéry) கூறியுள்ளது போல: "ஒரு படகை கட்ட நீ நினைத்தால், மரங்களைச் சேகரித்தோ, பலகைகளை வெட்டியோ அல்லது பணிகளை மற்றவர்களுக்கு ஒதுக்கியோ ஆரம்பிக்காதே! மாறாக ஒரு விசாலமான எல்லையில்லா கடல் மீதான ஒரு ஏக்கத்திற்காக உங்கள் பணியாளர்களின் ஆன்மாவைத் தூண்டிவிட்டுத் தொடங்க வேண்டும்." அந்த விருப்பம் தான் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கான கனவு, இதை கட்டமைப்பதே நம் பணி, இது தான் ரோட்டரியில் நம்மை வழிநடத்துகிறது; நம்மை உறுப்பினராகச் சேர்த்தது; நம்மை சேவை செய்ய ஊக்கப்படுத்துகிறது, மேலும் இது தான் இந்த ரோட்டரி வருடத்திற்கான நமது மையக்கருத்தான உந்துசக்தியாக இருங்கள் என்பதை தேர்ந்தெடுக்க என்னைத் தூண்டியது.

நம்மை பின்தங்கி இருக்கச் செய்யும் தடைகளைக் களைந்து அதை முன்னேறுவதற்கான நேரம் வந்துவிட்டது. வெவ்வேறு தேவைகளுக்கு பொருத்தமாக நமது சங்கங்களிலேயே சிறு மாற்றங்களை ஏற்படுத்துவதை அல்லது புதிய சங்கங்களை உருவாக்குவதை நாம் மேலும் எளிதாக்குவோம். ரோட்டராக்ட் சங்கத்தை வலிமையானதாக ஆக்கி, ரோட்டராக்ட்டர்களை ரோட்டரிக்குள் வருவதற்கான பணியைத் தொடங்குவோம்.

உண்மையாக நிலைத்திருக்கும் இது போன்ற சேவைக்காகத் தான் ரோட்டரியில் நாம் கடுமையாக உழைக்கிறோம். நாம் கவனம் செலுத்தும் ஆறு துறைகளிலுமே சுற்றுச்சூழல் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது, மேலும் இந்த பங்கு மட்டுமே, பருவ மாற்றத்தின் தாக்கம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மென்மேலும் முக்கியத்துவம் பெறும் அந்த ஆறு துறைகளிலிருந்து ஏதோ ஒரு வழியில் தனித்திருக்கும் சுற்றுச்சூழலை பார்க்க வேண்டிய தருணமிது. ஆரோக்கியமான சமூகத்திற்கும் நாம் வாழ்வதற்கான சிறந்த ஆரோக்கியமான எதிர்காலத்திற்குமாக தேவையாக இருப்பது சுத்தமான காற்று, நீர் மற்றும் நிலம் ஆகும்.

பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்

உந்துசக்தியாக இருங்கள்

அன்புள்ள ரொட்டேரியன்களே,

உங்கள் அனைவருக்கும் ரோட்டரி ஆண்டு 2018-19, மகிழ்ச்சியாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்ற வாழ்த்துகளுடன் ஆரம்பிக்கிறேன்.

இந்த புதிய ஆண்டை, சக உறுப்பினர்கள், மற்ற சமுதாயத் தலைவர்களையும், நமது குறிக்கோளான தன்னலமற்ற சேவை மூலம் ஊக்கப்படுத்த வேண்டும். தலைவர் பேரி ராஸின், "மாற்றத்தை கொண்டு வர, அதிகமாகப் பணியாற்ற, முழுமையானத் திறனை வெளிப்படுத்த, சங்க பிரசிடென்டுகளையும்,மாவட்டத்தில் உள்ள ரொட்டேரியன்களையும் ஊக்குவிக்க ரோட்டரி தலைவர்களிடம் சொல்லியிருக்கிறார். அவர்கள் தங்கள் பாதையைக் கண்டறிந்து, முன்னேறிச் செல்ல அவர்களை ஊக்கப்படுத்தி உதவுவது தான் நம் பணி''. நண்பர்கள், தொழிலதிபர்கள், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அறிமுகப்படுத்தி, ரோட்டரியின் உறுப்பினர் வளர்ச்சிக்கு பணியாற்றுகிறோம் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ரோட்டரியின் வலிமை, அர்பணிப்பு மிக்க உறுப்பினர்களே. இலக்குகளை எட்டவும் நமது உறுப்பினர்கள் மேலும் அதிகமாகப் பணியாற்றவும், நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். நமது சங்கங்களின் முக்கியத் திட்டப்பணிகளில் ஈடுபடுவதும், சமுதாயத்திற்கு நாம் செய்யும் சேவையில் பெருமைப்படுவதும் ஒவ்வொரு ரொட்டேரியனின் கடமை.

பெருந்தலைவர்கள் தங்கள் இலக்குகளை அடையவும் மற்றவர்களை ஈடுபடுத்தவும் எப்படி அவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள்? அவர்களின் வசீகரமிக்க ஆளுமைகளோ அல்லது ஆற்றல் மிக்க ஊக்கப்படுத்தும் பேச்சுக்களோ மட்டும் அல்ல. தங்களுடைய நோக்கங்களை, மற்றவர்களின் நோக்கங்களாக எடுத்துக்கொள்ளும் அளவுக்கு வலுவாகத் தெரிவிக்கிறார்கள்.

அறுபதுகளின் ஆரம்பத்தில், அமெரிக்க விண்வெளித் திட்டம் அதன் ஆரம்ப நிலையில் இருந்தபோது, ஜனாதிபதி கென்னடி சந்திரனுக்கு ஒரு மனிதனை அனுப்பவேண்டும் என்ற தனது தொலைநோக்குப் பார்வையை அமைத்து, அமெரிக்க மக்களிடம் அவர் "நம்மால் அதைச் செய்ய முடியும்!" என்று கூறினார். ஒரு திடமான நம்பிக்கையுடன் சொன்னார். அதில் அமெரிக்கர்களும் நம்பிக்கை வைத்து, நிறைவேற்ற தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். அடுத்த பத்தாண்டிற்குள்ளாக, முதல் மனிதராக - நீல் ஆம்ஸ்ட்ராங் - நிலவில் நடந்தார்.

"இந்த உலகத்தில் நீங்கள் பார்க்க விரும்பும் மாற்றத்தை முதலில் உங்களில் ஏற்படுத்துங்கள்," என்று மகாத்மா காந்தி கூறினார், மகாத்மா காந்தியின் வாழ்வினுடைய ஒவ்வொரு தருணமும் ஊக்கமளிக்கிறது. அவரது இளம் வயதில் அவர் பார்த்த - "ஹரிசந்திரன்" நாடகம் உண்மையைப் பேசுவதற்கு ஊக்கமளித்தது.

மூழ்கும் நிலையில் இருந்த கிரைஸ்லர் கார்பரேஷன் நிறுவனத்தின் CEO ஆக லீ லாகோக்கா பொறுப்பேற்ற போது, தெளிவான இலக்குகள், ஒரு செயல் திட்டம் மற்றும் அவருடைய திடமான நம்பிக்கை மூலமாக, "நாம் இந்த நிறுவனத்தை மாற்றி அமைக்க போகிறோம்!" என்றார். அமெரிக்க அரசாங்கத்துக்குப் போதுமான அளவு நம்பிக்கையால் ஊக்கமளித்து, தனியார் நிறுவனத்திற்கு இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய கடனைப் பெற்றார். அதன்பின்பு, அந்த நிறுவனம் தான் வாங்கிய கடனை உரிய காலத்திற்கு முன்பாகவே திருப்பிச் செலுத்த கிரைஸ்லர் நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர்களை போதுமான அளவு நம்பிக்கையால் ஊக்கபடுத்தினார். இது தான் எந்த ஒரு தலைவருக்கான இலக்கணம் - தெளிவான இலக்குகள், செயல் திட்டம், மற்றும் திடமான நம்பிக்கை.

உங்கள் நம்பிக்கையால் ஊக்கப்படுத்துங்கள்
முண்ணணியில் நின்று ஊக்கப்படுத்துங்கள்
கேட்பதன் முலம் ஊக்கப்படுத்துங்கள்
செயல்முறையை மாற்றத் தைரியம்
கொண்டு ஊக்கப்படுத்துங்கள்
உங்கள் நேர்மையால் ஊக்கப்படுத்துங்கள்
பாராட்டைப் பகிர்ந்து ஊக்கப்படுத்துங்கள்
குழுப்பணியால் ஊக்கப்படுத்துங்கள்
ரோட்டரியின் வெற்றிச் சரித்திரத்தை சொல்லி
ஊக்கப்படுத்துங்கள்
நல்லப் பணிகளை பாராட்டி ஊக்கப்படுத்துங்கள்

உந்துசக்தியாக - ஒன்றாக இணைந்து, நம்மால் முடியும், நாம் செய்வோம் என்று உலகத்தை ஊக்குவிப்போம்.

C. Bascker

C பாஸ்கர்
இயக்குநர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

District Wise TRF Contributions as on May 2018

(in US Dollars)

District Number	APF	PolioPlus	Other Restricted	Endowment Fund	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
			India				
2981	61,156	5,053	0	0	66,209	473	10.9%
2982	89,391	7,758	2,725	0	99,873	528	19.5%
3000	126,435	25,252	402,227	72,677	626,590	2198	43.5%
3011	189,214	1,982	216,298	22,977	430,470	558	18.4%
3012	59,448	6,923	112,590	3,016	181,977	299	8.5%
3020	100,322	25,118	49,950	52,478	227,869	330	7.7%
3030	12,331	22,924	1,050	0	36,305	59	1.2%
3040	16,097	93	54,117	77	70,383	73	3.4%
3053	43,652	78	22,129	25,000	90,859	69	2.4%
3054	109,168	203	315,368	26,000	450,739	70	1.2%
3060	210,031	1,749	263,544	59,538	534,861	1425	37.4%
3070	63,908	198	25,794	1,084	90,985	377	12.7%
3080	158,816	19,351	21,178	92	199,437	240	7.4%
3090	608	0	2,500	0	3,108	3	0.1%
3100*	14,929	0	30	0	14,960	56	3.5%
3110	88,657	3,801	66,931	0	159,388	221	5.8%
3120	98,238	508	50,231	0	148,977	156	5.3%
3131	513,549	11,711	436,773	91,399	1,053,431	1796	35.3%
3132	111,665	1,606	7,875	16,000	137,145	339	7.8%
3141	732,738	28,743	813,300	138,001	1,712,782	1497	29.4%
3142	409,488	18,843	788	(1,000)	428,118	940	34.8%
3150	58,308	12,557	44,750	63,000	178,615	357	10.0%
3160	147,221	1,000	0	16,673	164,894	224	9.6%
3170	84,052	8,300	26,802	0	119,154	440	8.2%
3181	94,449	1,091	0	78	95,618	718	23.7%
3182	82,688	205	40,126	0	123,019	752	23.9%
3190	171,928	59,447	293,717	24,335	549,428	110	2.2%
3201	359,142	18,063	218,827	5,323	601,356	375	7.3%
3202	55,632	16,934	0	2,773	75,339	128	2.6%
3211	200,543	1,100	0	150,392	352,035	223	5.2%
3212	294,123	64,324	32,500	2,000	392,947	656	17.7%
3231	133,393	28,113	188,553	80,914	430,972	96	3.8%
3232	484,681	36,202	163,330	20,300	704,513	545	14.8%
3240	107,706	5,257	0	8,367	121,330	549	18.8%
3250	151,565	214	21,143	11,000	183,922	239	6.8%
3261	64,412	115	46,593	1,000	112,121	174	7.4%
3262	79,521	1,757	28,903	24,864	135,045	298	9.1%
3291	74,282	26,790	109,739	120,794	331,606	123	3.2%
India Total	**5,853,486**	**463,362**	**4,080,381**	**1,039,152**	**11,436,380**	**17714**	**13.0%**
3220 Sri Lanka	126,428	10,452	12,038	1,217	150,135	601	31.5%
3271 Pakistan	39,401	70,957	11,752	0	122,110	83	5.8%
3272 Pakistan	34,009	3,201	0	3,000	40,210	64	2.3%
3281 Bangladesh	421,353	15,206	385,966	87,037	909,562	742	13.2%
3282 Bangladesh	133,039	12,233	0	3,000	148,273	613	16.3%
3292 Nepal	160,267	27,814	704,104	0	892,185	665	15.2%
South Asia Total	**6,767,983**	**603,225**	**5,194,240**	**1,133,406**	**13,698,854**	**20482**	**13.0%**
World Total	**109,910,268**	**31,359,856**	**17,150,234**	**23,050,514**	**181,470,871**		

* Non-districted

Source: RI South Asia Office

TRADITIONAL CRAFT

The german kitchen. Since 1898.

Head Office and Showroom:

A- 248, Mahipalpur Extension, NH-8,
Delhi-Gurgaon Road, New Delhi-110037

[T] +91-11-46102000 [E] info@hacker-kitchens.com

Häcker
kitchen.germanMade.

www.haecker-india.com
www.haecker-kuechen.com

AHMEDABAD	BANGALURU	CHENNAI	COIMBATORE	DELHI
9879538977	9740999350	9442081111	9500210555	9313134488

HYDERABAD	INDORE	JAIPUR	KOCHI	LUDHIANA	MUMBAI	MANGALURU	THRISSUR
9700058285	9425803599	9414058718	9895058285	9815048222	9322987229	7899119955	7025991000

பேரி என்றே கூப்பிடுங்கள்

டயானா ஷோபெர்க்

பஹாமியன் உற்சாகமும் முடிவெடுக்கும் தலைமைப் பண்பும் கச்சிதமாகக் கலந்தவராக விளங்குகிறார் ரோட்டரியின் புதிய பிரசிடென்ட், பேரி ராஸின்.



நாவுவின் கடற்கரையிலிருந்து பல மைல்கள் தொலைவில், 2018-19 ஆண்டின் ரோட்டரி இன்டர்நேஷனலின் பிரசிடென்டான பேரி ராஸின் முழ்கி எழும் ரேட் பேட் படகு தளத்தில் அசையாமல் நிற்கிறார். பிரமாண்டமான பயணிகள் கப்பலோ, வானத்தில் இரைச்சலிடும் ஜெட்டோ கிடையாது, அவ்வப்போது வந்து போகும் படகும், படகின் மீது மோதும் தண்ணீரின் சத்தமும், நீலநிற கடலின் அடியில், இராட்சத ஆமைகள் கடல் தரைப்பகுதியைத் தழுவிச் செல்கிறது.

"என்னைப் பொறுத்தவரை, கடல் சுதந்திரமானது, அமைதியானது" என்கிறார் ராஸின், "தண்ணீரை விட்டு வெளியே நான் இருக்கும்போது, அனைத்தும் களையிழந்து விடுகிறது. இந்த உலகத்தோடு இருப்பதாக நீங்கள் உணரமுடியும், எதுவும் தவறாகப் போகாது."

ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு இங்கே தூறல் போட்டது, இப்போது பலவீனமான டிசம்பர் மாத சூரியன் சுட்டெரிக்க ஆரம்பித்திருக்கிறது. திடீரென கடந்து சென்ற ஒரு கப்பலால் ஏற்பட்ட அலையால் ரேட் பேட் தள்ளாடுகிறது. அசராமல், ராஸின் சரியாக நின்று கொண்டு, அடிவானத்தில் மிதந்துகொண்டிருக்கும் நீலவானத்தை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தார்.

12 ஜனவரி 2010 அன்று மதியநேரத்தில் 550 மைலுக்கு அப்பால் ஹைட்டியில் 7.0 ரிக்டர் நிலநடுக்கம் வந்தபோது, ராஸினும் அவரது மனைவி எஸ்தரும் பஹாமாஸின் தலைநகர் நஸாவுவில் தங்கள் வீட்டில் இருந்தனர். அதன் பின்னர் உடனடியாக ஜமைக்காவிலிருந்து எரோல் அல்பெர்கா, ராஸினைத் தொடர்பு கொண்டார். அதேநேரத்தில், D 7020 கவர்னராக ஆல்பெர்கா இருந்தார், இந்தச் சங்கம் மேற்கு இந்தியத் தீவுகளில் பஹாமாஸ், ஜமைக்கா மற்றும் ஹைட்டி மற்றும் பல இதர தீவுகளை கொண்டிருந்தது.

ஆல்பெர்கா, இந்த மாவட்டத்தின் முன்னாள் கவர்னரும், நஸாவுவில் புகழ்பெற்ற டாக்டர்ஸ் ஹாஸ்பிட்டலின்

பிரசிடென்டான ராஸினிடம் நிலநடுக்கம் பற்றிச் சொல்லி, ரோட்டரியின் மீட்புப் பணிகளை வழிநடத்துமாறு கேட்டுக்கொண்டார். இந்த பிராந்தியத்தில் இருக்கும் மற்ற ரோட்டரித் தலைவர்களை அழைத்திருந்த ராஸின், மாலை நேரத்தில் தனது அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக்க அறையின் மூலையில் இருந்த டிவி, பேரிடர் ஏற்பட்ட ஹைட்டியின் புகைப்படங்களை ஒளிபரப்பிக் கொண்டிருந்தது - மேலும் டிவி திரையில் ஓடிக் கொண்டிருந்த அவசரக்கால எச்சரிக்கை ராஸின் கண்ணில் பட்டது: சுனாமி பஹாமாஸ் நோக்கி வந்துகொண்டிருக்கலாம், ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டதால் உண்டான கடல் அலை பயங்கரமாகவும் இந்த ஒட்டுமொத்த நாட்டையும் அழிக்கக்கூடிய ஆற்றலையும் கொண்டுள்ளது.

ராஸினும் அவரின் மனைவியும் இரண்டாவது தளத்தில் காத்திருந்தனர். "இரவில் கடலை நோக்கி பார்த்தால், தண்ணீரின் முனை வரை உங்களுக்கு வெளிச்சம் தான் தெரியும், பிறகு இருள் சூழ்ந்துவிடும்," என்று ஜனவரி மாதம் சான் டீகோவில் நடைபெற்ற இன்டர்நேஷனல் அசெம்பிளியில் அவரின் ஆற்றல்மிக்க பேச்சை ராஸின் நினைவு கூர்ந்தார். "வெளிச்சம் முடிந்து இருள் தொடங்குகிற இடத்தைப் பார்த்தேன், இருள் எங்களை நோக்கி வந்து, வெளிச்சத்தை விழுங்குவதற்காகக் காத்திருந்தேன்."

அதிர்ஷ்டவசமாக சுனாமி செயலிழந்து போனது, ராஸின் பணிக்குத் திரும்பினார். சில வாரங்களிலும், மற்றொரு முன்னாள் மாவட்ட கவர்னர் ரிச்சர்ட் மெக்கோம்பே ரோட்டரியின் தினசரி நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கினார், ரோட்டரி பவுண்டேஷனுக்கு உலகம் முழுவதிலிருந்தும் ரொட்டேரியன்கள் அளித்த நிதியுதவியால் மேற் கொள்ளப்பட்ட நீண்ட கால மீட்பு நடவடிக்கைகளை ராஸின் ஒருங்கிணைத்தார். எவ்வளவு பணம் இருக்கிறது, செலவழிக்கப்பட்டது, எந்த மீட்பு நடவடிக்கைக்கு எந்த ரோட்டரி சங்கம் பொறுப்பேற்றுள்ளது போன்றவற்றைக் குறிக்க ஒரு 132 பக்கம் கொண்ட எக்ஸல் ஷீட்டை அவர் உருவாக்கினார். "நிலநடுக்கத்திற்கு ஒரு வருடம் கழித்து நடைபெற்ற மாவட்டக் கூட்டத்தில், ஒவ்வொரு தனித் திட்டத்துக்கும் செலவிட்ட டாலர்களை பேரி குறிப்பிட்டார்," என்று ராஸினின் சங்கமான கிழக்கு நாஸிவ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் பிரசிடென்ட் லின்ட்சே கேன்சினோ சொல்கிறார். "இது பேரிடர் மீட்பு கணக்கில் இருந்த நிதியுடன் ஒத்துப்போனது. நான் வியந்துவிட்டேன்."

நிலநடுக்கத்திற்கு பின்பு ராஸின் உடனடியாக ஹைட்டியிலுள்ள மருத்துவரும் ரொட்டேரியனுமான கிளாட் சுரேனா உடன் இணைந்து பணியாற்றினார், போர்ட்-ஓ-பிரின்ஸிக்கு வெளியே இருக்கும் தனது வீட்டின் வெளிப்பகுதியை தற்காலிக கூடாரமாகவும் மருத்துவமனையாகவும் மாற்றினார். அங்கே, 100க்கும் மேற்பட்ட வீடிழந்தவர்களுக்கு சுரேனா பாதுகாப்பு அளித்தார். அந்தத் தீவு எங்கிலும், பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் இறந்தனர், பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். ராஸின் மற்றும் அவரின் குழுவினர் இரவு நேரத்தில் அழைத்தபோதும் கூட சுரேனா அதற்குச் செவிமடுத்தார், இவர் ஹைட்டியின் அப்போதைய பிரசிடென்ட்டான ரேனே பிரேவலின் பரிந்துரையின் பேரில், நாட்டின் தனியார் மற்றும் பொது மருத்துவத் துறையின் சீரமைப்பைக்

கவனித்துக்கொண்டார். என்னென்ன மருந்துகள், மற்ற பொருட்கள் தேவைப்படுகிறது என்பதைக் கூறினார். அதன் பிறகு, ஒவ்வொரு நாள் காலையிலும் அத்தியாவசியப் பொருட்களுடன் தனியார் விமானம் நஸாவுவிலிருந்து பறந்தது.

ராஸின் விமானத்தில் பயணிக்கும் போது வானத்தின் எல்லையில்லா நீல நிறத்தையும், பச்சை வண்ண தீவுகள் புள்ளி புள்ளிகளாகத் தெரிந்த நீலக்கடலையும் வியப்புடன் பார்த்தார். "சொர்க்கம் போலத் தோன்றியது". "பிறகு ஹைட்டிக்கு வந்தடைந்தோம்".

சாலை தரைப்பகுதியில் சேதமடைந்ததையும், இடிந்த வீடுகளையும் பார்த்தார். போர்ட்-ஆ-பிரின்ஸில் தரையிறக்க முடியவில்லை, தலைநகரத்திற்கு வெளியில் ஒரு புல்வெளியில் விமானம் தரையிறங்கியது. சரக்கு களை இறக்கிய விமானம் புறப்பட்டுச் சென்றது. "ஒரு சில நிமிடங்களில் நாங்கள் தண்ணீரிலிருந்து வந்து விட்டோம்," என்று தனது பேச்சில் ராஸின் ஞாபகப்படுத்திச் சொன்னார், "அதே வசீகரமான தோற்றத்தை கீழே பார்த்துக் கொண்டிருந்தோம். ஹைட்டி எங்களுக்குப் பின்னால் மறைந்து போனது, பஹாமாஸ் எங்களுக்கு முன்னால் இருந்தது, இந்த இரண்டிற்கு நடுவில் நாங்கள் இருந்தோம்."

"தண்ணீரையும் அந்த தொடுவானத்தையும் பார்க்கையில், அந்த பகுதிக்கும் இந்த பகுதிக்கும், இடையே எவ்விதமான கோடுகளோ அல்லது எல்லைகளோ இல்லை என்பதை நான் உணர்ந்தேன், பாதிப்பிலிருந்து நாங்கள் தப்பி விட்டோம்; சிலர் தப்பவில்லை. இதுவும் பஹாமாஸ் போலவே இருந்திருக்கலாம்."

மருத்துவம் படிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக பேரி ராஸின் எப்பொழுதுமே நினைத்துக் கொண்டிருந்தார். இது அவரின் குலத்தொழில். அவருடைய அப்பா மேயர், ஒரு எலும்பியல் நிபுணர், இரண்டாம் உலகப்போரின் போது, ராயல் ஏர் ஃபோர்ஸ் படைகளின் மருத்துவ உதவிகளைப் பார்வையிட இங்கிலாந்திலிருந்து பஹாமாஸ் வந்தார். சில நீர் முழ்கி கப்பல்

இடதுபுறத்திலிருந்து: RIPE *பேரி ராஸின் மனைவி எஸ்தர் மற்றும் சங்க உறுப்பினர் ஒருவருடன்.*

வந்து போனதே தவிர, பாஹமாஸ் போரிலிருந்து விலகியே இருந்தது. ஐரோப்பா போரில் ஈடுபடத் தயாராகிக் கொண்டிருக்கிற RAF விமானிகளுக்கு நஸாவுவின் ஓக்ஸ் மற்றும் வின்ட்சர் மைதானங்களில் பறக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இராணுவ மருத்துவத்தில் சிறிது மூழ்கியிருந்தாலும் கூட, டாக்டர் ராஸின் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட தொழுநோயாளிகள், உள்ளூர்வாசிகளுடனும் நேரத்தை செலவிட்டார். இத்தகைய பணி அவருக்கு புகழைத் தந்தது. போர் முடிந்தபின்பு இங்கிலாந்திற்குச் சென்றார், ஆனால் 1947ல் அவருடைய மகன் பேரி பிறந்த சில வாரங்களில், அரசு மருத்துவ மனையில் பணியாற்ற ராஸின் பீரே அவருடைய குடும்பத்துடன் நஸாவுவிற்குத் திரும்பினார். 1955ல், அவரும் அறுவை சிகிச்சை நர்ஸ் அவருடைய மனைவி ரோஸெட்டாவும், நோயாளிகளுக்கு சிறந்த சிகிச்சையளிக்க ராஸின் மருத்துவமனை ஆரம்பித்தனர்.

பேரிக்கு 10 வயதாக இருக்கும் போது, அவருடைய அப்பா தனது அறுவைச் சிகிச்சையை செய்வதை முதலில் பார்க்கவைத்தார். ("அது எனக்கு ஒருவித பயத்தைக் கொடுத்தது," என்று சொல்கிறார்.) இது தான் அவருடைய குலத் தொழிலுக்கான அறிமுகம். அவரின் மூத்த சகோதரர், டேவிட் ஃபார்மக்காலஜியில் Ph.D.,யுடன் தாய்ப்பால் பண்புகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுட்டார்.

நியூயார்க் சிட்டிக்கு வெளியே லாங் ஐலேன்ட் பல்கலைக்கழகத்தில் பேரி மருத்துவ மாணவராக நுழைந்தார் - பிறகு அடுத்த இரு ஆண்டுகளில் நின்றுவிட்டார். "எனக்கு கடினமாக இருந்ததா; ஆர்வம் இல்லையா என்று தெரியாது," என்று விளக்குகிறார். "சிறந்த மாணவனாக எப்போதும் இருந்ததில்லை என்று ஆசிரியர்கள் சொல்வார்கள்."

நஸாவுக்கு ராஸின் திரும்பிச் சென்று பிரிட்டிஷ் காலோனியல் ஹோட்டலில் வரவேற்பாளராக பணியைத் தொடங்கினார் - "அது நான் இல்லை" - சீக்கிரத்தில் அலுவலகப் பொருட்களை விநியோகிக்கும் பணிக்கு கீழிறங்கினார். ஒரு வருடம் கழித்து, முடிவு எடுக்கவேண்டுமென ராஸின் உணர ஆரம்பிக்க: மீதி வாழ்க்கையை ஹோட்டலில் வேலை பார்த்து தனது குடும்பத்துடன் கழிக்கலாம் அல்லது அவர் திரும்பவும் படிப்பதற்குச் செல்லலாம்.

1967ல், மியாமிக்குச் சென்று, கம்யூனிட்டி காலேஜில் சேர்ந்து, அவருடைய இஷ்டப்பட்ட வகுப்புகளில் பங்கேற்றார். தனக்கு எது சிறந்தது என்பதை அவர் கண்டறிய விரும்பினார். "அக்கவுண்டிங்கில் இரண்டே நாளில் நான் சாதித்துக் காட்டினேன்" என அவர் நினைவு கூறுகிறார். "அது ரொம்ப சுலபம், நன்றாகவும் வந்தது."

அவர் வணிகவியல் படிப்பிற்கு மாறினார், தனது தரத்தை உயர்த்திக் கொண்டே மியாமி பல்கலைக்கழகத்தில் ஹானர்ஸ் உடன் அக்கவுண்டிங்கில் பட்டம் பெற்றார். அதன்பிறகு, ஃப்ளோரிடா பல்கலைக்கழகத்தில் உடல்நலம் மற்றும் மருத்துவமனை நிர்வாகவியலில் MBA பட்டம் பெற்றார்.

பல வெற்றிகரமான வருடங்களுக்குப் பிறகு பஹாமாஸுக்குத் திரும்பிய ராஸின் மருத்துவமனை நலிவுற்ற நிலையில் இருந்தது. 1973ல் பஹாமாஸ் சுதந்திரம் பெற்ற பிறகு, மருத்துவமனை நோயாளிகள் உட்பட நிறைய பிரிட்டிஷ்காரர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். ராஸின் தனது அதிகாரத்தின் கீழ் (ஆரம்பத்தில் மியாமியின் மவுன்ட் சினை மெடிக்கல் சென்டரில்) பல ஆண்டுகள் மருத்துவமனையை நிர்வகித்த பிறகு, நஸாவுவிற்கு தனது முதல் மனைவி மற்றும் அவரின் குழந்தைகள் பாஸ்கல், மிச்சேல் மற்றும் ஆண்டனி ஆகியோருடன் மறுபடியும் சென்றார். நாட்டுக்கு நவீன மருத்துவம் சிறப்பான நிலையைக் கொண்டுவருவதே அவரின் இலட்சியம் - மற்றும் அதை நவீனப்படுத்தப்பட்ட ராஸின் மருத்துவமனையில் செயல்படுத்தத் திட்டமிட்டார்.

1980ம் ஆண்டின் பிற்பகுதிகளில் பொது மருத்துவமனையில் தங்கிப் பணியாற்றுகின்ற ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணராக இருந்த போது, இன்றைய டாக்டர்ஸ் ஹாஸ்பிட்டலின் (புனரமைக்கப்பட்ட வசதிகளாக அறியப்பட்டது) பிரசிடென்ட் சார்லஸ் டிக்கிஸ், அவசரகால அறைகளின் பணியையும் சேர்த்துப் பார்த்தார். "பேரி மருத்தவமனையை நடத்தி கொண்டிருந்தார், பொது மருத்துவ மனைக்கு ஒரு பிளாக் தள்ளி இருந்தது," என டிக்கிஸ் சொல்கிறார். "இதை நடத்துவதற்கான துணிவு அவரிடம் இருந்தது. வெற்றிக்கு எந்தவிதமான உத்திரவாதமும் இல்லை, ஆனால் இது ஏமாற்றமளிப்பதாக இருக்கும் என்பதும், ஒவ்வொரு மருத்துவரும் நம்பிக்கையில்லாதவராக இருப்பார் என்பதும் உறுதி.''

தான் சந்தித்த சவால்களை ராஸின் நினைவு கூர்ந்தார்: "இது என்னுடைய பெற்றோர், மனைவி மற்றும் மருத்துவர்களுடன் மேற்கொள்ளும் போராட்டமாகவும் இருந்தது'' அனைத்து அழுத்தங்களும் தனது முதல் திருமணத்தை சிதைத்துவிட்டதாகச் சொல்கிறார். ஆனால் ரோட்டரி மூலமாக அவர் உருவாக்கிய நண்பர்கள், அவரின் தீர்வுகளை நடைமுறைப்படுத்தினர்." இது பஹாமாஸ் குடிமக்களிடமிருந்து உதவியை எனக்குத் தந்தது, இவர்கள் தான் அவசியம் இதைச் செய்ய வேண்டும் என கூறினர்.''

பல வருடங்களுக்கு முன்பு, ஃபுளோரிடா, ஹாலிவுட்டில் உள்ள அமெரிக்கன் மெடிகார்ப் இல் ராஸின் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு மருத்துவர் ரோட்டரியில் சேரச் சொல்லிக்கேட்க, ராஸின் மறுத்துவிட்டார். "எனக்குத் தெரிந்து அவருக்கு குறைந்தபட்சம் 70 வயது இருக்கும். அப்போது எனக்கு 30 வயது. நாம் கேட்காததால் தான் புதிய உறுப்பினர்கள் சேர்வதில்லை என்று மக்கள் சொல்கிறார்கள்.

நஸாவுவிற்குச் செல்லும்போது அவர் ரோட்டரி பற்றிய தனது மனதை மாற்றிக்கொண்டு, மேற்கு நஸாவ் சங்கத்திற்காக நிதி திரட்டுபவராக இருந்த ஜான் ராபர்ட்ஸனை சந்தித்தார். ராபர்ட்சன் உதவி செய்தார், ராஸினின் மகள்களான பாஸ்கல் மற்றும்

பேரி ராஸின் தனது மனைவி எஸ்தருடன் நஸாவுவில் உள்ள சரித்திரம் வாய்ந்த Queen's Staircase சுற்றுலா தளத்தில்...

RIPE *பேரி ராஸின் தன் நண்பர்கள் வேட் கிரிஸ்டி மற்றும் ஃபெலிக்ஸ் ஸ்டப்ஸ் அவர்களுடன்.*

மைக்கேல் ஆகியோரும் அதில் பங்கேற்றனர். இரண்டு பேரும் பேசி, கலந்துரையாடலின் முடிவில், ரோட்டரியில் சேரவேண்டும் என்ற ராபர்ட்சனின் அழைப்பை ராஸின் ஒப்புக்கொண்டார். ஏழு வருடங்கள் கழித்து, 1987ல் இந்த சங்கத்தின் தலைவராக ஆனார். இந்த சங்கத்தின் முதல் பெண் உறுப்பினர் என்ற பெருமையை 2009 ஆண்டில் மைக்கேல் பெற்றார்.

ரோட்டரியின் தரங்களில் ராஸினின் எழுச்சியானது, ராஸின் மருத்துவமனையை மாற்றுவதற்கான அவருடைய திட்டத்தின் உச்ச நிலையுடன் ஒத்திசையக்கூடியதாக அமைந்தது. 1986ல், மருத்துவர்களின் கூட்டமைப்புடன் இணைந்து செயல்பட்டு மேயர் ராஸினிடமிருந்து மருத்துவமனையை வாங்கி, டாக்டர்ஸ் ஹாஸ்பிட்டல் என்ற புதிய பெயரைச் சூட்டினார். 1993ல், ராஸினின் வழிகாட்டுதலில், $8.5 மில்லியன் செலவில் விரிவுபடுத்தப்பட்டு, கரீபியனின் முன்னணி மருத்துவ மனைகளில் ஒன்றாக திகழ்கிறது.

இந்த மாற்றங்களுடன் சேர்ந்து, 1990ல் எஸ்தர் நோவல்ஸ் அவர்களைச் சந்தித்து திருமணம் செய்துகொண்ட போது ராஸினின் சொந்த வாழ்க்கையும் மாற்றமடைந்தது. ஒரு வெற்றிகரமான வங்கி ஊழியரான எஸ்தர் அவருடைய கணவனின் ரோட்டரி வாழ்வில் நுழைந்தார். 1991-92 காலகட்டத்தில் அவர் மாவட்ட கவர்னராக இருந்த போது, ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும், சங்கத்திற்கும் ஆறு மாதகாலம் அவருடன் சுற்றுப்பயணம் சென்றார். நீங்கள் அவர்களை ஒன்றாகப் பார்த்தால் அவர்களுக்கிடையே இருக்கிற பரஸ்பர மரியாதையும் நட்புறவும் புலப்படும். "எஸ்தர் என்னை எப்போதும் உறுதியானவராக வைத்திருக்கிறார்," என்கிறார் ராஸின். "என்னுடைய தற்பெருமை அதிகரிக்கும்போதெல்லாம் அதைத் தட்டி கீழே இறக்கிவிடுகிறார். எங்காவது பேசிய பின்பு, எஸ்தர் இருந்தால், என்னுடைய பேச்சு எப்படி என்று கேட்பேன். எனக்கு தெரிந்து அவர் மட்டுமே தான் என்னிடம் உண்மையைச் சொல்வார்."

2016ல் மருத்துவமனையின் பிரசிடென்டாக ஒய்வு பெற்ற பிறகும் கூட அதன் டைரக்டர்களின் போர்டில் தொடர்ந்து பணியாற்றுகிறார். முந்தைய காலத்தில், அவரின் கனவை நனவாக்க அவர் மேற்கொண்ட நீண்ட போராட்டம் மதிப்புமிக்கது. "இந்த வாழ்க்கையில் சம்பவங்களை நீங்கள் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும்" என அவர் வலியுறுத்துகிறார். மேலும், "அதைச் செய்வதற்காகத் தான் நாங்கள் இங்கே இருக்கிறோம்: மற்றவர்கள் சென்ற பாதையை பின்பற்றாமல் உங்கள் கொடுவாள் கொண்டு புதரை வெட்டி புதிய பாதையை உருவாக்க வேண்டும். மக்களுக்கு நல்ல மருத்துவசதிகள் கிடைப்பதில்லை. அது அவர்களுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது."

"ரோட்டரியில் பங்களிப்பை தொடர்ந்துகொண்டே, எப்படி டாக்டர்ஸ் ஹாஸ்பிட்டலுடன் தன்னை முழுவதுமாக இணைத்துக் கொண்டார் என்பது, அவருடைய பயணத்தில் பாராட்டக்கூடிய விஷயங்களில் முக்கியமானது ஒன்று" என்கிறார் சார்லஸ் சீலே. இவர் ரோட்டரி மூலமாக ராஸினை சந்தித்து, அவருக்குப்பின் அந்த மருத்துவமனையின் CEO ஆக பதவியேற்றவர். "இரண்டிலும் எப்படி ஒருவர் சரிசமமாக பார்க்க முடியும் - சரிசமம் என நான் நினைக்கவில்லை, ஏனென்றால் ஒவ்வொன்றிலும் முழுவதுமாக ஈடுபட்டார்."

மருத்துவமனையிலும் ரோட்டரியில் இருப்பது போல ராஸினை இலட்சியவாதியாகவும், நுணுக்கமான நிர்வாகியாகவும் மக்கள் பார்க்கிறார்கள். அவரை அவர்கள் ஒரு மதிப்புமிக்க குருவாகவும் போற்றுகிறார்கள். "தலைமைப்பண்பு திறமையை கண்டறிவதில் சிறந்தவர்," என்று மருத்துவர்கள் சங்கத்தின் ஒரு உறுப்பினராகிய ஃபெலிக்ஸ் ஸ்டப்ஸ் கூறுகிறார், அவர் 7020 மாவட்ட கவர்னராக தனது பணியை வழிநடத்த வாய்ப்பு உருவாக்கிக் கொடுத்ததற்கு ராஸினுக்கு பாராட்டுத்

தெரிவிக்கிறார். “இப்படிப்பட்ட திறமைகளுடன் ஒருவரை பார்த்தால், ரோட்டரிக்கு நன்மையாக இருக்கலாம் என நினைத்து, அவரை கண்டிப்பாக இழுத்துக் கொள்வார். இதையே தான் டாக்டர்ஸ் ஹாஸ்பிட்டலில் செய்தார். அவர் நல்ல இளம் தலைவர்களைக் கண்டறிந்து, அவர்களை மேலே தூக்கி விட்டார் - அதன் பிறகு ஓய்வு பெற்று தன்னுடைய நேரத்தை ரோட்டரிக்காக அர்ப்பணிக்க முடிந்தது.”

ஒரு தீவு சங்கத்தைப் பொறுத்த வரையில், ஒரு பாய்மரப் படகிலுள்ள மரத்தாலான ஒரு அறைக்குள் கிழக்கு நஸாவுவின் ரோட்டரி சங்கம் சந்திக்கிறது. மிதக்கும் படகுகளின் படங்கள் சுவர்களில் அலங்கரிக்கிறது. உலகில் அதிக வயதுவரை வாழ்ந்த ஒலிம்பிக் வீரரான (படகு விடும் போட்டியில் 1956 மற்றும் 1964 ஆண்டுகளின் முறையே வெண்கலம் மற்றும் தங்கப்பதக்கம் வென்ற) சர்.தர்வார்ட் நோவல்ஸ், இறக்கும் வரை சுறுசுறுப்பான உறுப்பினராக இருந்தார்.

பல விதங்களில், 21ஆம் நூற்றாண்டின் சிறந்த ரோட்டரி சங்கமாக விளங்குகிறது: இதன் அறுபது சதவீத உறுப்பினர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவும், ஒரு உறுப்பினர் இரட்டை ரொட்டேரியன்/ ரோட்டராக்டர் ஆகவும் இருக்கிறார். அக்டோபரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், தலைமை பதவிகளில் நிறைய பெண்கள் இருந்தனர், முதல் அரைமணி நேரம் ஒரு ஆண் கூட நாற்காலிக்கு வரவில்லை. வணிகத்தின் ஒரே உத்தரவு: வருகை விருதுகளை வழங்கியது. 30 வருடங்களுக்கான சிறந்த வருகைக்கான விருதை ராஸின் பெற்றார். அவர் சேர்ந்த 1980ம் ஆண்டிலிருந்து, ஒரே ஒரு கூட்டத்தில் மட்டுமே பங்கேற்காமல் இருந்திருக்கிறார்.

ரோட்டரி ஏறக்குறைய 40 ஆண்டு களாக ராஸினின் வாழ்க்கையின் மையமாக இருந்தாலும் கூட, ரோட்டரி இன்டர்நேஷனலின் பிரசிடென்ட் ஆவது அவருடைய இலட்சியமாக இருந்ததில்லை. தேர்வுக்காக கூட அவருடைய பெயரை கொடுக்கக் விரும்பவில்லை. ஆனால், “இதுவரை பிரசிடென்டாக பஹாமாஸ் மற்றும் கரீபியனிலிருந்து யாரும் வந்ததில்லை, எனது பெயரைக் கொடுத்து அவர்களை பிரதிநிதிப்படுத்த வேண்டுமென அங்கிருக்கும் ரொட்டேரியன்கள் நினைத்தனர். அவர்கள் ரோட்டரியின் பகுதியாக இருக்க விரும்புவதை நான் உணர்ந்தேன், மேலும் அதைச் சாத்தியமாக்கும் நிலையில் அவர்களுக்காக, இதைச் செய்ய வேண்டும் என நான் நினைத்தேன்.”

உகாண்டாவைச் சேர்ந்த, கம்பலா ரோட்டரி சங்க உறுப்பினர் சாம் எஃப். ஒவூரி, ரோட்டரியின் 2018-19 பிரசி டென்டாக பணியாற்ற 2016 ஆண்டில் முன்னிறுத்தப்பட்டார். ஜூலை 2017 ஆண்டில் அறுவைசிகிச்சையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக எதிர்பாராத விதமாக அவர் மறைந்த பிறகு, ராஸின் அவருடைய இடத்தை நிரப்ப தேர்வு செய்யப்பட்டார்.

முதல் நபராக ராஸின் அழைத்தவர் ஃபுளோரிடாவைச் சேர்ந்த ஒரு முன்னாள் ரோட்டரி இன்டர்நேஷனல் டைரக்டர், ஜான் ஸ்மார்க் ஆவார், இவர் ஓவரியின் உதவியாளராக பணியாற்றினார். தன்னுடைய உதவியாளராகவும் பணியுரிய ஸ்மார்கை ராஸின் கேட்டுக்கொண்டார். அவருடைய முதல் வாசகங்களில் ஒன்று, “சாமின் நினைவுகள் தொடர விரும்புகிறேன் அத்துடன் இதைச் செய்ய எனக்கு உங்களுடைய உதவி தேவை,” என்று ஸ்மார்க் நினைவு கூறுகிறார். “பேரி இந்த முறை உள்ளே வர தனித்தன்மையுடன் தகுதி பெற்றுள்ளார். சாமின் ஞாபகங் கள் பளிச்சென மிளிர அவர் அனுமதிப்பார்.”

கடந்த இருபது ஆண்டுகளாக ஸ்மார்க் மற்றும் ராஸின் ஒருவரை ஒருவர் தெரிந்துவைத்துள்ளனர். இவர்கள் ஒரே ரோட்டரி மண்டலத் தைச் சேர்ந்தவர்கள், ஒரே காலத்தில் மாவட்ட கவர்னர்களாக பணியாற்றியவர்கள். ஹைட்டியில் நிலநடுக்கத்திற்குப் பிறகு இவர்கள் ஒன்றிணைந்து பணியாற்றியுள்ளனர்,



கோல்ஃப ராஸினின் பிடித்தமான விளையாட்டு.

ராஸின் தன் மகள் மிஷெல் மற்றும் பேத்தி இஸபெல்லாவுடன்.

மேலும் ஹைட்டி நிலநடுக்க மீட்பு நிதியின் கணக்கு வைத்திருப்பவர்களாக சேவை செய்தனர். ஒரு நன்கொடையாளர் பவுண்டேஷன் மூலமாக நிதி திரட்டுமாறு அறிவுறுத்தினார். இதன் மூலம் மொத்தம் திட்டங்களுக்கு $6.5 மில்லியன் தொகை பெறப்பட்டது. "பேரி ராஸின் ஹைட்டியில் ஒரு ராக் ஸ்டார் - இதை வேறு விதத்தில் சொல்ல முடியாது," என்கிறார் ஸ்மார்க். "அவர் ஒரு ராக் ஸ்டார், ஏனென்றால் நாட்டுக்காக அவர் என்ன செய்திருக்கிறார் என்று அவர்களுக்குத் தெரியும்."

ராஸின் ரோட்டரியின் ராக் ஸ்டாராகவும், கரீபியனின் பெருமையாகவும் இருக்கலாம், ஆனால் அவர் மக்களின் கவனம் பெற்றவராக ஒளிருகிறார் என்று அவருடைய நண்பர் ஃபெலிக்ஸ் ஸ்டப்ஸ் கூறுகிறார், மேலும் தன்னை ஒரு சாதாரணமானவராக நினைத்துக் கொள்கிறார். டாக்டர்ஸ் ஹாஸ்பிட்டலை நடத்தும்போது, கால்களில் செருப்பு அணிந்து கொண்டு கால்சட்டையுடன் அறையில் நடமாடுவதை நாம் காண முடியாது. சமீபத்தில் அவர் சென்றபோது, இந்த முறை வரவேற்பறையில் இருக்கும் ஊழியர் முதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் வரை ஒவ்வொருவரும் நேர்த்தியாக ஆடையணிந்து அவருக்கு வணக்கம் தெரிவித்தனர். ஒரு பெண் வேகமாக வந்து அவரை கட்டியணைத்தார். "நன்றாக இருக்கிறீர்கள், பேரி!" என்று மற்றொருவர் கத்தினார்.

மரியாதைக் குறைவு என்பது அங்கே கிடையாது - நிறுவனத்தின் கொள்கையை மட்டுமே கடைபிடிக்கிறார்கள். 1990களின் ஆரம்பத்தில், மருத்துவமனையில் ஒவ்வொருவரும் தங்கள் சக ஊழியர்களை அவர்களின் முதல் பெயர் கொண்டு கூப்பிட வேண்டுமென ராஸின் (அதாவது பேரி) கேட்டுக்கொண்டார். "ஒரு சுத்தம் செய்யும் பணியாளர் 'உங்களை பேரி என்று நான் கூப்பிடலாமா?' என்று கேட்டார்," கூப்பிடலாம் என்று நான் சொன்னேன்.

"நாம் எல்லாரும் ஒரே நிலையில் தான் இருக்கிறோம்," என்றார். "நாம் வித்தியாசமான தொப்பிகள் தான் அணிந்திருக்கிறோம். இந்த வருடம் பிரசிடென்டின் தொப்பியை அணிய வேண்டியிருக்கிறது, ஆனால் நாம் அனைவரும் ரொட்டேரியன் தொப்பியை அணிந்திருக்கிறோம், நானும் அதை அணிந்துள்ளேன். இந்த விளையாட்டில் நாம் அனைவரும் பங்கெடுத்துள்ளோம். நாம் எந்த தொப்பியை அணிந்திருக்கிறோம் என்பது முக்கியமல்ல. ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றவே நாம் இணைந்துள்ளோம்".

பஹாமாஸ் அதன் நீந்தும் பன்றிகளுக்கு (இது உண்மை, கூகிளில் தேடுங்கள்) பிரபலமானது, ஆனால் பேரியும் எஸ்தர் ராஸினும் இன்னொரு படைப்பு அதிக கவனத்தைப் பெற வேண்டுமென விரும்புகிறார்கள். 20ம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வேட்டையாடுதல் காரணமாக அழிவின் விளிம்பின் இருந்த கரீபியன் ஃபிளமிங்கோ பறவை உலகிலேயே இந்த நாட்டில் தான் வளர்க்கப்படுகிறது. நஸாவுவில் ஆர்தஸ்டிரா கார்டனில், சரணாலயம் மற்றும் பாதுகாப்பு மையத்தில், இந்த பறவைகள் ஒரு நாளில் பலமுறை வளையத்தைச் சுற்றி வருகின்றன, மகிழ்ச்சியான பார்வையாளர்கள் ஒற்றைக்காலில் அமர்ந்து புகைப்படம் எடுக்கும் போது அவை தங்களுடைய புதிய நண்பர்களைப் பார்ப்பது போன்று நின்று செல்கின்றன. குழந்தையாக இருக்கும்போது ராஸின் இங்கே வந்திருக்கிறார், அதன்பின்பு பலமுறை அவருடைய குழந்தைகளுடனும் பேரக் குழந்தைகளுடனும் வந்திருக்கிறார்.

அந்த தினத்தின் கடைசி காட்சி இது, பேரியும், எஸ்தரும் ஃபிளமிங்கோஸ் பறவையுடன் புகைப்படம் எடுக்க நின்றனர். "டிரில் சர்ஜன்ட்" - இந்த கார்டனின் செயல்பாட்டு மேலாளரும் ஒரு ரொட்டேரியன் ஆவார் - எஸ்தர் சில விஷயங்களை நினைவு கூறுகிறார்: எல்லாரையும் போல அவர்கள் ஒற்றைக்காலில் நிற்க முடியவில்லை.

இப்போது ரோட்டரியின் புகழ் பெற்ற தலைவராக உள்ள அவரது கணவரும் வளையத்துக்குள் திரும்பவும் வருகிறார்கள். வேதனைக் குரல் எழுப்பும் பவள நிற பறவைகள் சுற்றி வருகின்றன. பேரியும், எஸ்தரும் ஒரு காலை தரையிலிருந்து உயர்த்தி தங்களின் கைகளை அசைக்கிறார்கள். இமைகள் மூடி, அவர்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை, அப்படியே அமர்ந்திருக்கிறதைப் பார்க்கும்போது எப்போதும் அவர்களால் குறைபாடில்லாத நிதானத்துடன் இருப்பார்கள் எனத் தோன்றுகிறது.■

TRF அறங்காவலர்
தலைவரிடமிருந்து...

நமது முன்னுரிமைகள்

நான் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்து ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு, தொடர்ச்சியாக நான்கு கூட்டங்களில் கலந்துகொள்ளாத காரணத்தால் எனது உறுப்பினர் பொறுப்பை ரத்து செய்து விட்டேன். அப்போது அதுதான் விதிமுறை. எனக்கு எவ்விதமான பொறுப்பும் இல்லை, நான் ஒரு உறுப்பினராக இருக்க எந்த காரணமும் இல்லை, ஒரு உணவுடன் சேர்ந்த கூட்டத் திற்குச் செல்ல நான் விரும்பவில்லை.

எனது புதிய சங்க தலைவர், வரும் வருடத்திற்கு சங்கத்தின் ரோட்டரி பவுண்டேஷன் கமிட்டிக்குத் தலைவராக இருக்க என்னிடம் கேட்டார். எனக்கு அது ஒரு திருப்புமுனையாக அமைந்தது, ரோட்டரியைப் பற்றி சந்தேகங்கள் உள்ள உறுப்பினர்களை, செயலில் ஈடுபடுத்துவதைப் பற்றி நீங்கள் அனைவரும் யோசிக்க வேண்டும். 2018-19 ஆண்டில், உங்களின் ஆதரவு எனக்குத் தேவை. பவுண்டேஷனுக்கான நான்கு அடிப்படை குறிக்கோள்களில் கவனம் செலுத்த என்னுடன் நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

முதலில், நமது ஒட்டுமொத்த அமைப்பின் முதல் முன்னுரிமை போலியோவை ஒழிப்பது. இரண்டாவது, கவனம் செலுத்தும் ஆறு துறைகளில் நமது சேவை முயற்சிகள் நீடிக்க வேண்டும். அப்படியென்றால், தேவைகள் குறித்து மதிப்பீடு செய்ய வேண்டும். அவர்களுடன் கலந்து ரையாடி, உண்மையிலே என்ன தேவை என்பதை அறிந்து, அதை ஏற்கவைக்க வேண்டும். திட்டப்பணியை பொறுப்பில் எடுத்து சிறிது காலத்துக்கு ஒரு முறை தாங்கள் எவ்வளவு அடைந்திருக்கிறோம் என்பதை சுய மதிப்பீடு செய்துகொள்ள வேண்டும்.

நமது மூன்றாவது முன்னுரிமை மாவட்டங்களை அவர்களின் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் அனைத்தையும் பயன்படுத்த ஊக்கப்படுத்துவது. இது மாவட்ட நிதிகள், உலகளாவிய நிதிகள் அல்லது போலியோபிளஸ் என எதுவாகவும் இருக்கலாம், மாற்றத்துக்கானக் கூட்டுறவுகளை உருவாக்கி நிதிகளை சேர்த்து அதைச் செயலாற்ற பல வழிகள் இருக்கிறது.

இறுதியாக, 2025 ஆண்டில் ரோட்டரி பவுண்டேஷன் அறக்கட்டளை நிதியை $2.025 பில்லியனாக உயர்த்த வேண்டும். இந்த வருடம் நாம் திரட்ட வேண்டிய நிதி இலக்கு $380 மில்லியன் ஆகும். ரோட்டரி உறுப்பினர்கள் தினமும் செயல்படுத்தும் வாழ்வை மாற்றும் திட்டங்களைத் தொடர இந்த நிதிகள் நமக்கு உதவும். ஆனால் நாம் ஒவ்வொருவரும் நமது ரோட்டரி மரபைப் பற்றி நினைக்க வேண்டும். இந்த அறக்கட்டளை தான் நமது எதிர்காலம்.

அதனால் என்னுடன் கைகோர்த்து, ரோட்டரிக்கு ஒரு மரபை நிலைநாட்டும் வருடமாக மாற்றுவோம். எதிர்கால உங்கள் நற்பெயர் தான், ரோட்டரியின் வாக்குறுதி.

ரான் டி பர்டன், பவுண்டேஷன்
அறக்கட்டளைத் தலைவர்

ஆங்கிலம் பேசுவதை எளிதாக்கும் செயலி

ரோட்டரி குழுச் செய்திகள்

இனி மொபைல் செயலி உதவியால் ஆங்கிலத்தில் பேசக் கற்றுக்கொள்ளலாம். பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் கிரிஷ் ஸ்ரீகாந்த் அவர்களின் இங்கிலிஷ் ஸ்ட்ரோக்ஸ் உடன் கைகோர்த்து, RC பாம்பே ஏர்போர்ட் D 3141 இதை அறிமுகப்படுத்தியுள்ளது.

இங்கிலீஷ் ஸ்ட்ரோக்ஸ் நிறுவனத்தின் CSR திட்டத்தின் கீழ் ரூ.550 என்ற சலுகை விலையில் பயனபடுத்த முடியும். இதன் அசல் விலை

ரூ.1275, இதில் நான்கு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பாடத்தையும் மூன்று மாதங்கள் வரை பயன்படுத்தலாம். பாடத்தின் முடிவில் நடத்தப்படும் ஆன்லைன் தேர்வில் தேர்ச்சிக்கு பின், பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து ஆன்லைன் சான்றிதழ்கள் கிடைக்கும்.

இந்த செயலி இந்தியா முழுவதும் பயன்படுத்தப்பட இருக்கிறது. DGs, திறன் வளர்ப் புக்கான அவென்யூ தலைவர் ராஜேஷ் அகர்வாலை 98204 45542ல் தொடர்புகொள்ளலாம்.

பெண்களை மேம்படுத்தும் சுய உதவி திட்டம்

ரோட்டரியின் அமைதிக்கானப் பேரறிஞரும் மற்றும் புனே குடும்ப நல நீதிமன்றத்தின் நீதிபதியுமான சுவாதி சவான், தங்கள் கணவரால் கைவிடப்பட்ட அல்லது விவாகரத்துக்காக காத்திருக்கும் பெண்களின் பொருளாதாரத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறார். இந்தப் பெண்கள் தங்கள் கைகளில் ஜீவனாம்சத்திற்கு நீதிமன்ற உத்தரவுகளை வைத்திருந்தாலும், ஆண்கள் பணம் கொடுக்க மறுத்து மேல் முறையீடு செய்கிறார்கள். நீண்ட காலமாக "நீதி மன்ற வாராண்டாக்களில் சிக்கிக் கொண்ட", இத்தகையப் பெண்களுக்காக அவர் ஸ்வயம் சித்தாஸ்வயம் சித்தா என்ற சுய உதவித் திட்டப்பணியைத் தொடங்கி, இதன் மூலம் பெண்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சியளித்து, அவர்கள் சுயமாக பொருளாதார ரீதியில் மேம்பட உதவி செய்கிறார்.

RI மாவட்டம் 3131 நீதிமன்றத்துடன் இணைந்து, RC புனே பல்கலைக் கழகத்தின் ஆதரவுடன், இத்திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. 50க்கும் மேற்பட்ட பெண்கள் தங்கள் பயிற்சியை முடித்து நல்ல வேலையில் அமர்ந்துள்ளனர், இதில் சிலர் மாதம் ரூ.20,000 வரை சம்பாதிக்கின்றனர். புனேயில் உள்ள அவரது அறையில் நீதிபதி சுவாதியிடம் எடுத்தபேட்டியின் சில பகுதிகள்.



ரஷ்தா பகத்

ஸ்வயம் சித்தாவிற்கான யோசனை எப்படி உருவானது?

மும்பை குடும்பநல நீதிமன்றத்தில் நான் நீதிபதியாக இருந்தபோது, ஒரு பெண் உயர் நீதிமன்ற நீதிபதி என்னிடம், ஜீவனாம்சத் தொகைக்காக குடும்பநல நீதிமன்றத்தின் வராண்டாவில் காத்திருக்கும் ஒரு பெண்ணைக் பார்க்கச் சொன்னார். இது போன்ற பெண்கள் அவருடைய வீட்டில் வேலை செய்யவதற்காக... மும்பையில் இவருக்கு வசதியான குடியிருப்பு இருந்ததால், வீட்டு வேலைக்கு ஆள் தேவைப்பட்டது.

நான் இரண்டு பெண்களை நேர்காணலுக்கு அனுப்பினேன். அதில் ஒருவருக்கு இலவச வீடு மற்றும் ரூ.15,000 சம்பளத்துடன் வேலை கிடைத்தது, புனே குடும்பநல நீதிமன்றத்தில் எனக்கு வேலை கிடைத்தபோது, கைவிடப்பட்ட விவாகரத்து கோரும் பெண்கள், இங்கே அலையாமல் இருக்கவும் அபாயகரமான வேலையைச் செய்யக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு நீதிபதிகள், பெண்களுக்கு மிக விரைவாக நிவாரணம் அளிப்பதை நான் பார்த்தேன். குறைந்தபட்சம் அவர்களது அடிப்படை தேவைகளையாவது அவர்களது கணவர்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

நாங்கள் விரைவாக உத்தரவுகளை வழங்கினாலும் கூட, பெரும்பாலும் கணவன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றாலும், உத்தரைவைப் பெற்றாலும், பணம் பெறாததால் அந்த பெண்ணின் ஏமாற்றம் இரட்டிப்பாகிறது. வழக்கு மீண்டும் வருகிறது, சம்மன் வழங்கப்படுவது, தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. உண்மை என்னவென்றால் அவர்களுக்கு உத்தரவு மட்டுமே கிடைக்கிறது பணம் கிடைப்பதில்லை. அத்தகைய உத்தரவுகளைச் செயல்படுத்துவதில் நீதித் துறை ஈடுபட வேண்டும் என்று நான் நினைத்தேன், இதற்கிடையில் பெண்கள் தங்களின் சொந்த உழைப்பு மூலம் சிறிது வருமானம் ஈட்டுகிறார்கள். NGOக்கள், குடும்ப ஆலோசகர்கள், பயிற்சியாளர்களுடன், நீதிமன்றம் பங்கெடுத்துக் கொள்ளும் பணியை பற்றி நான் யோசித்தேன்.

பெண்களிடமிருந்து வரவேற்பு எப்படி இருக்கிறது?

ஆரம்பத்தில் நாங்கள் ஏன் பயிற்சி பெற வேண்டும், வேலை செய்ய வேண்டும் என பெண்கள் தயங்கினார்கள்; நாம் அப்படி செய்தால், பராமரிப்புக்காக ரூ.2,000 கூட தரம்மாட்டார்ககள். அவரிடமிருந்து எனக்கு அந்தப் பணம் வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். எனவே, இது ஒரு மனத்தடையாக இருந்தது. நாங்கள் இதிலிருந்து அவர்களை வெளியேற்ற வேண்டியிருந்தது. வெறும் ரூ.2,000க்கு ஆசைப்பட்டு உங்கள் வாழ்க்கையை வீணாக்காதீர்கள், ஒருவேளை இது தவணை முறையில் ரூ 500 கூட கிடைக்கலாம், இதைவிட நீங்கள் வேலை செய்தால் ரூ.20,000 சம்பாதிக்க முடியும் என்று ஆலோசனை கூறினோம். நீதிமன்ற வராண்டாவைத் தாண்டி உங்கள் வாழ்வை வாழுங்கள். பல காலம் இங்கேயே உட்கார்ந்து வீணாக்காதீர்கள். இது போன்ற நோக்கத்திற்காக தான் இத்திட்டம் நடத்தப்பட்டது. மேலும் அவர்களுக்கு அனைத்து அடிப்படை மற்றும் அரசியலமைப்பு உரிமைகள் இருப்பதை புரிந்து கொள்ளவைக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர்களுடைய மற்றும் அவர்களின் குழந்தைகளின் வாழ்க்கையும் எதிர்காலமும் முக்கியம். அத்தகைய நோக்குநிலைப் திட்டத்தில்: ஓ, நான் வேலைக்குப் போகணும் ஆனால் வோபைட் கே காயேங்கா (அவர் உட்கார்ந்து சாப்பிடுவாரா)? என்று ஒரு பெண் கேட்டார்.

ஓ, அதற்கும் வாய்ப்பிருக்கிறதா?

இந்துமதச் சட்டத்தின் கீழ், பொருளாதார ரீதியில் கணவன், மனைவி இருவரில் யார் வலுவாக இருக்கிறார்களோ, அவர்கள் மற்றவருக்கு பராமரிப்புத் தொகை வழங்க வேண்டும். எனவே நான், கணவரால் கைவிடப்பட்ட ஒரு பெண் வாழ்வதற்காக வேலை செய்தால், அவனால் அவளிடமிருந்து பராமரிப்புத் தொகையைக் கோர முடியாது என்ற ஒரு தீர்ப்பைக் கொண்டு வந்தேன்.. நான் இந்த மேற்கோள்களை என் தீர்ப்பில் மேற்கோள் காட்டி நீங்கள் சம்பாதிப்பது உங்களுடனே இருக்கும் என்று இந்தப் பெண்களுக்கு விளக்கினேன். இறுதியாக, அவர்கள் ஊக்கம் பெற்றார்கள். இது போல நிறைய சவால்கள் இருந்தது - அதில் ஒன்று யார் அவர்களுக்கு பயிற்சி அளிப்பது என்பது தான். எங்கள் ஆலோசகர்கள் NGOs ஒர் சந்திப்பிற்கு அழைத்தனர், பயிற்சி துவங்கியது, ஆனால் அது முறைபடுத்தப்பட்டோ அல்லது நிலையானதாகவோ இல்லை... நீதிமன்றத் திடம் நிதி இல்லை, நாம் உத்தரவுகளை மட்டுமே போட முடியும்.

இதற்கிடையில், ஸ்வயம் சித்தா இல் ஒரு கட்டுரை வெளியிடப்பட்ட பின்னர், ரோட்டரி, இந்தப் பயிற்சிக்கு நிதியளிக்கும் என்று வழக்கறிஞர் வைஷாலி பகவத் கூறி எங்களை அணுகினார். இது ஒரு நல்ல விஷயம்; இன்றைய சந்திப்பிலே அதனுடைய முடிவை உங்களால் பார்க்க முடிந்தது!

நீதிபதி ஸ்வாதி சவான்

இந்த பெண்களில் என்ன மாதிரியான மாற்றங்களை நீங்கள் பார்க்கிறீர்கள்?

ஓ, மிகப்பெரிய மாற்றங்கள்! நீதிமன்ற வராண்டாவில் அவர்கள் எப்படி உட்கார்ந்திருந்தார்கள் என்பதை நீங்கள் பார்த்திருக்க வேண்டும்... அவர்கள் இப்போது அதிக வலிமையும் நம்பிக்கையும் பெற்றுவிட்டார்கள், நன்றாக ஆடை அணியத் தொடங்கினர். மேலும் யாராவது சேர்ந்திருக்கும் போது, மற்றவர்களுக்கு இவர்கள் ஆறுதல்படுத்துகிறார்கள். இவர்கள் சுயமாகவே தங்களை உயர்த்திக்கொண்டுள்ளனர். பணம் மட்டுமல்ல, வலிமையும் பெண்களை மேம்படுத்தும். இந்த 50 பெண்களுக்கு இன்று எந்த சவாலையும் எதிர்கொள்ளும் மனோதிடம் உள்ளது.

நீங்கள் எப்படி ஒரு நீதிபதி ஆனீர்கள்? சிறு வயதிலேயே இது திட்டமிடப்பட்டதா?

இல்லை, நான் சட்டத்துறைக்குச் செல்வதோ அல்லது ஒரு நீதிபதி ஆகவோ நினைத்ததில்லை. ஆனால் பள்ளி நாட்களில் இருந்து, மற்றவர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க அவர்களுக்கு உதவும் எண்ணம் இருந்தது மற்றும் அதற்கு நல்ல முடிவும் கிடைத்தது.

மகாராஷ்டிராவில் (1989-90) நந்தேட் சட்டக் கல்லூரியில் LLB முடித்தேன், அதன்பிறகு பெண்களும் நீதியும் என்ற தலைப்பில் LLM மற்றும் M.Phil செய்தேன். அடுத்து நான் ரோட்டரி சமாதான பேரறிஞராக (2013-14) பிராட்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் இருந்து சர்வதேச அமைதி மற்றும் போர் சமரசத்தில் முதுநிலை பட்டம் பெற்றேன்.

இந்த ரோட்டரி படிப்பு பற்றி நீங்கள் எப்படிக் தெரிந்துகொண்டீர்கள்?

என் நீதிமன்றத்தில் ஒரு மிக முக்கியமான கடத்தல் வழக்கை பார்த்து அவ்வாறு ஒரு ஸ்காலர்ஷிப் கிடைத்த ஒரு போலீஸ் அதிகாரி, அது பற்றி என்னிடம் கூறினார். ஆனால் நான் அப்போது விண்ணப்பிக்கவில்லை. பின்னர், 2011 ஆம் ஆண்டில் மும்பையில் ஒரு சிறப்பு நீதிமன்றத்தில் என் கடத்தல் எதிர்ப்புப் பணிக்காக மாகாண அரசுத் துறையிலிருந்து எனக்கு ஒரு விருது கிடைத்தது. ஒரு ரோட்டரி சங்கம் என்னைப் பேச அழைத்தது, பின்னர் அந்த சங்கத்தின் மூலம் நான் விண்ணப்பித்தேன்.

இந்த படிப்பு அது எப்படி உங்களைக் கவர்ந்தது அல்லது எந்த விதத்தில் உங்கள் சிந்தனையை வடிவமைக்கவோ அல்லது மாற்றவோ செய்தது?

அடிப்படையான கட்டமைப்பு இருந்தது, ஆனால் இப்போது நான் பல விதத்தில் பார்த்து, ஆழமாகச் சிந்தித்து, சிறப்பாகவும் வித்தியாசமாகவும் பகுப்பாய்வு செய்ய முடிகிறது.

குடும்ப நீதிமன்றத்தை நீங்கள் தேர்ந்தெடுத்தீர்களா? ஆம் என்றால் ஏன்?

(சிரிக்கிறார்) நான் தேர்ந்தெடுத்தேன்; ஏன் என்று சொல்வது ரொம்ப கஷ்டம்! நான் சிவில் மற்றும் குற்றவியல் நீதி அமைப்புகளுக்காகவும், சிறப்பு நீதிமன்றத்திலும் ஆள்கடத்தல் விவகாரத்திலும் பணிபுரிந்தேன், மேலும் மாநில நுகர்வோர் ஆணைக்குழுவில் பதிவாளராக ஒரு அசெயின்மெண்ட் முடித்தேன். சர்வதேச அமைதியைப் பற்றி நாம் பேசுகிறோம், ஆனால் அமைதியின் சிறிய பங்கு வீட்டு உறவுகளிலிருந்தும் பின்னர் சமுதாயத்திலிருந்தும் தொடங்குகிறது. உங்கள் உறவு அமைதியானது என்றால், குடும்பம் அமைதியாகும், சமூகம் அமைதியாகும், நகரம், பின்னர் நாடே அமைதியாக இருக்கும்.

நீங்கள் 2011ல் குடும்பநல நீதிமன்றத்திற்கு வந்தீர்கள்; 2011 மற்றும் 2018க்கு இடையில் குடும்பநல நீதிமன்றங்களில் எழும் பிரச்சினைகளில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?

ஒவ்வொரு நாளும் மாறி வருகிறது;

உதாரணமாக சேர்ந்து வாழும் (live-in) உறவுகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஆரம்பத்தில் மக்கள் தவறான ஒன்றாக பார்த்தார்கள், இப்போது யாரும் கேள்வி எழுப்புவதில்லை, அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மக்களின் தேவைகளும், கோரிக்கைகளும் வெளித் தோற்றமும் மாறிவருகிறது. ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கு இடையேயான உறவுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக இல்லை. எனவே, ஒட்டுமொத்தப் பார்வையும் மாறுகிறது.

திருமணங்கள் அல்லது உறவுகள் முறிய முக்கிய காரணம் என்ன?

பெண் எப்போதும் சகிப்புத் தன்மையுடன் இருக்கிறாள், இன்றும் கூட அவள் தொடர்ந்து சகிப்புத்தன்மையுடன் இருக்கிறாள். ஆனால் இன்று அவளுக்கு அவள் உரிமைகள் தெரியும். அவள் இப்போதும் விட்டுக்கொடுக்கிறாள், ஆனால் விட்டுக்கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று ஒரு காலம் இருந்தது. இன்றும் கூட ஒரு குறிப்பிட்ட நிலை வரை அவள் விட்டுக்கொடுக்கிறாள், ஆனால் தாங்க முடியாததாகவும் சகித்துக்கொள்ள முடியாததாகவும் இருக்கும் போது, அவள் (திருமணத்தை விட்டு) வெளியே வருகிறாள்.ஆரம்பத் தில், பெண்களுக்கு கேள்விகளைக் கேட்கவும் திருமணம் போன்ற உறவை விட்டு வெளியேறவும் வாய்ப்பு இல்லை. இப்போது பெண்கள் ஆண்களுக்கு சமமாக இருக்கிறார்கள், நிச்சயமாக ஆண்கள் ஏற்றுக்கொள்ள இன்னும் சில காலம் ஆகும்.

பெண்கள் மத்தியில் விழிப்புணர்விற்கு சிறந்த கல்வி தான்காரணமாக இருக்கிறதா?

கண்டிப்பாக. கல்வி தான் அவள் நம்பிக்கையுடன் இருக்கவும், எது சரி எது தவறு என்று அறிந்து, முடிவுகளை எடுக்கவும், இது போன்றவற்றிற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. இப்போது வரை ஆண் தான் அவளுக்காக முடிவுகளை எடுத்தான்.

விவாகரத்து மீதான களங்கம் போய்விட்டதா; ஒரு பெண் விவாகரத்து கேட்கும் போது குடும்பங்கள் இப்போது புரிந்துகொள்கிறதா?

ஆமாம், பெரிய நகரங்களில் களங்கம் போய்விட்டது ஆனால் கிராமப்புறங்களில் விவாகரத்திற்கு இன்னும் தடை உள்ளது. நகரங்களில் மற்றும் மேல்தட்டு மத்தியில், இது மிகவும் இயற்கையானது மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்று. குடும்பத்தில் ஒரு மரணம் போல, மிக துரதிருஷ்டமானது ஆனால் அதை ஏற்றுக்கொள்வதை விட வேறு எந்த வழியும் இல்லை. அந்த நபர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார், வாழ்க்கை முடிவடைந்துவிட்டது என்று நாம் ஏற்றுக்கொள்கிறோம். உறவுகளும் அப்படி தான்.... தினசரி சண்டை, குழந்தைகள் பாதிப்பு மற்றும் குழ்ந்தைகள் சண்டையினால் பாதிப்படைகிறார்கள்.

உறவுகள் முறிந்த வீடுகளில் குழந்தைகளுக்கு என்ன நடக்கிறது?

இப்போது என்ன நடந்தது என்பதை நீங்கள் பார்த்தீர்கள் (அவருடைய அறையில்); அந்தப் குழந்தையை சந்திப்பதில் அந்த ஆண் ஆர்வம் காட்டவில்லை. நிச்சயமாக எல்லா ஆண்களும் அப்படி இல்லை, ஆனால் பலர் பொறுப்பு எடுத்துக்கொள்ள விரும்புவதில்லை.

உடைந்த திருமணத்தில் துரோகத்தின் பங்கு என்ன?

சமூக ஊடகங்களின் தாக்கத்திற்குப் பின், அதன் பங்கு அதிகரித்துள்ளது.

ஒருவர் பிடிபட்டபின் அவர்கள் விவாகரத்துக்காக வருகிறார்களா?

(சிரிக்கிறார்) சில சமயங்களில், பரஸ்பர ஒப்புதலுடன் அவர்கள் விவாகரத்துக்கு வரும்போது இருவருக்கும் திருமண த்திற்கு வெளியே உறவு உள்ளது. இருவருக்குமே மற்றவருடைய தகாத உறவு தெரிந்திருக்கும். மேலும் அவர்கள் அதை பகிங்கரப்படுத்த விரும்பாமல் நீ உன் வழியிலும் நான் என் வழியிலும் செல்லலாம் என முடிவு செய்கின்றனர்! நான் உன்னை மன்னிக்கிறேன், நீ என்னை மன்னிக்க வேண்டும். 'இளைய தம்பதிகளுக்கு, பிரிவு எளிதானது; ஆனால் 40-50 வயதுள்ளவர்கள், அல்லது 10 முதல் 20 ஆண்டுகளாக திருமணம் பந்தத்தில் உள்ள ஜோடிகளுக்கு, பந்தத்தை உடைப்பது மிகவும் கடினமாக உள்ளது. அவர்கள் இன்னும் பாரம்பரியத்தை பின்பற்றி, திருமணம் என்பது வாழ்நாள் பந்தம் என வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் இளைய தலைமுறையினர் அப்படி நினைக்கவில்லை.

குடும்ப வன்முறை திருமண முறிவுகளில் என்ன பங்கு வகிக்கிறது? அது நிறைய நடப்பதை நீங்கள் பார்க்கிறீர்களா?

ஆமாம். குடும்ப வன்முறைச் சட்டங்கள் திருமணங்களை முறிக்கத்தான் என்ற தவறான கருத்து மக்களிடம் இருக்கிறது. ஆனால் வீட்டிற்கு உள்ளேயே வன்முறையை நிறுத்தி உறவு காப்பாற்றப்பட வேண்டும் என்பது தான் குறிக்கோள். எப்போதும் பாதிக்கப்படும் நபர் பெண் தான், அதனால் நான் இந்த மனிதன் என் கணவராக இருக்க வேண்டும் அடிக்க அல்லது துன்புறுத்தவோ கூடாது என்று சொல்ல நீதிமன்றம் செல்கிறாள். ஒரு பெண் வீட்டு வன்முறைச் சட்டத்தின் கீழ் ஒரு விண்ணப்பத்தைப் பதிவு செய்தால், கணவர் நினைக்கிறார்: 'சரி, இப்போது இவள் விவாகரத்துக்குச் செல்கிறாள்'. இது தான் அதிலுள்ள குறை. அவள் பந்தத்தை விரும்புகிறாள் ஆனால் வன்முறையை நிறுத்தச்சொல்கிறாள். கணவர்: 'நீ நீதிமன்றத்திற்கு சென்று விட்டாய் அதனால் விவாகரத்துக்கு தயாராகு' என்று கூறுகிறார்.

இந்த பெண்களுக்கு பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடைய இந்தத் திட்டப்பணியை நாட்டில் செய்யும் முதல் மற்றும் ஒரே குடும்ப நீதிமன்றம் உங்களது மட்டும் தானா?

ஆமாம், அவ்வாறு சொல்வதில் பெருமையாக இருக்கிறது. இந்த முயற்சிக்கு மற்ற ரோட்டரி சங்கங்கள் இணைய முன்வந்தால், இந்த முயற்சி நாடு முழுவதும் பரவிவிடும். நீங்கள் தேவையுள்ள மற்றும் ஒதுக்கப்பட்ட பெண்களைத் தேட வேண்டிய அவசியம் இல்லை. அனைத்து இடங்களிலும் நீங்கள் பார்க்கலாம். அவர்களுக்கு உதவ உங்கள் கையை நீட்டினாலே போதும்.■

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

விவாகரத்தான பெண்களுக்கு புதுமையான திட்டப்பணி

ரஷிதா பகத்

DG அபே காட்கில் மற்றும் மாவட்ட எழுத்தறிவுக் குழுத் தலைவராகவும் வழக்கறிஞருமாகவும் இருக்கும் வைஷாலி பாகவத்தின் தலைமையில், கைவிடப்பட்ட மனைவி களுக்கும் விவாகரத்தான பெண்களுக்கும் திறன் வளர்ச்சிக்காகவும் பொருளாதார மேம்பாடு அடையவும் புனேவில் உள்ள குடும்ப நல நீதி மன்றத்துடன் D3131 இணைந்துள்ளது.

இது குடும்ப நல நீதிமன்ற நீதிபதி சுவாதி சாவனின் திட்டமாகும், இவர் 2013-14 ஆண்டில் பிராட்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் சர்வதேச அமைதி மற்றும் போர் சமரசத்திற் கான பட்ட மேற்படிப்பு படித்திருக்கிறார், ரோட்டரி அமைதிக்கான பேரறிஞராக சேவை செய்கிறார். பெரும்பாலும் கைவிடப்பட்ட பெண்கள் அல்லது விவாகரத்தான வர்களுக்கு பராமரிப்புக்கு நஷ்டஈடு வழங்குமாறு நீதிமன்றங்கள் உடனடியாக உத்தரவிடுகின்றன, ஆண்கள் பணம் கொடுக்க சுலபமாக மறுத்து விடுகிறார்கள் என்று விளக்குகிறார். இதனால் நம்பிக்கை இழந்த பெண்கள் சட்டபூர்வமாக அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட பணத்தைப் பெறுவதற்கு நீதிமன்றங்களில் பலமணி நேரம் காத்திருக்கிறார்கள்.

தங்களுடைய மண வாழ்க்கை முடிவதற்கு முன்பாக அனுபவித்த சௌ கரியமான நிலை அல்லது வாழ்க்கை முறையைத் தொடருவதற்கு பெண்ணின் அல்லது ஒரு குழந்தையின் உரிமையை இந்த நீதி மன்றங்கள் தொடர்ச்சியாக உறுதிசெய்து வந்துள்ளன என்பதை வைஷாலி விளக்கினார். "கணவனின் வருமானத்தை நிரூபிக்க வேண்டியது பெண்ணின் பொறுப்பு, ஆண்கள் அவர்களின் வருமானத்தை மறைக்க பலவித உத்திகளை பயன்படுத்தி, முடிந்தளவு

குறைவாகக் கொடுக்க விரும்புகிறார்கள்.”

நீதிமன்றம் ஜீவனாம்சத் தொகையை குறிப்பிட்ட பின்பு, ஆண் அதை ஏற்காமல் மேல் நீதிமன்றத்துக்குச் செல்கிறான், ஒன்று அல்லது அதிகமான குழந்தைகளை வைத்திருக்கும் பெண்களை கவனிக்க யாருமில்லாமல், ஒட்டு மொத்தமாக உடன் பிறந்தோரையோ, பெற்றோரையோ சார்ந்திருக்கிறார்கள். “இது போன்ற சந்தர்ப்பங்களில் பெண் தன் வாழ்க்கையில் மூன்றிலிருந்து அதிக பட்சமாக 20 வருடங்கள் வரை வழக்கிற்காக செல வழிக்கும் படி நேரலாம்” என்கிறார் வைஷாலி.

தகுதிபெற்ற பெண்களுக்கு சான்றிதழ்களை வழங்க ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், இது மாதிரியான பாதிக்கப்பட்ட பெண்கள் கஷ்டப்படுவதைக் காணும்போது பெண்களின் திறன்களை வளர்க்க ஸ்வயம் சித்தா என்ற திட்டத்தை நீதிமன்ற ஆலோசகர் ஸ்மிதா ஜோஷியுடன் இணைந்து ஆரம்பிக்க முடிவெடுத்தார். இதன் மூலம் ஜீவனாம்சத் தொகை வந்தாலும் வராவிட்டாலும் அதை எதிர்பார்ப்பதற்குப் பதிலாக பெண்களே பொருளாதார ரீதியாக மேம்படுத்த முடியும். “இல்லையென்றால்

புனே குடும்ப நல நீதிமன்ற நீதிபதி சுவாதி சாவன்.

ஜீவனாம்சத் தொகையை சொல்வது நீதிமன்றங்களுக்கு ரொம்ப சுலபம், ஆனால் அதை செயல்படுத்துவது தான் மிகக் கடினம்.
நீதிபதி ஷைலஜா சாவந்த்

பல வருடங்கள் அவர்களின் வாழ்க்கை நீதிமன்றங்களிலேயே முடிந்துவிடும்.” என்று நீதிபதி சுவாதி விளக்கினார். இந்தப் பெண்களுக்கு தையல், ஆடையலங்காரம், பேக்கிங், அழகுபடுத்துதல், நகை செய்தல் போன்றவற்றில் பயிற்சியளிக்க NGOகள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

ஆனால் ஒரு உள்ளூர் செய்திதாளில் இந்த முயற்சியைப் பற்றி வைஷாலி படிக்கும் வரை, இந்தத் திட்டப்பணி ஒரு “முறைப்படியான ஏற்பாடு இல்லாத சூழலில்” நடத்தப்பட்டது. “மாவட்டம் 3131 DG அபே காட்கில் உடன் இணைந்த எங்களுடைய TEACH திட்டப்பணியில், திறன் மேம்பாடு என்பது கூடுதல் பிரிவாக உள்ளது, அதிக பெண்களுக்கு பயனளிக்கவும், திட்டப்பணிக்கு வலிமை சேர்க்கவும் குடும்ப நலநீதிமன்றத்துடன் இணைய நாங்கள் முடிவெடுத்துள்ளோம்” என்றார். பயனாளர்கள் பொருளாதார நிலை, கல்வித் தகுதிகள் மற்றும் இதர சில அளவீடுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

நீதிமன்ற அறையில், பல பயிற்சி வகுப்புகளை முடித்த பெண்கள் தங்களின் சான்றிதழ்களை உயர் அலுவலர்களிடமிருந்து பெற நிற்கிறார்கள். நீதிமன்ற அறையின் கொண்டாட்டத்துக்கு சிறப்பான ஆற்றலையும் அர்த்தத்தையும் தருகிறது. PRIP கல்யான் பானர்ஜி, நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார், “நீதிமன்ற அறை இவ்வளவு சுத்தமாக இருப்பதை இந்தியாவில் எங்கேயும் பார்த்ததில்லை,” என்று நீதிபதிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார். பயிற்சிக்குப் பின்பு இந்த பெண்களின் நம்பிக்கையில் ஒரு கடலளவு மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பது பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகள் நிலவின.

இடதுபுறத்திலிருந்து: DLCC *வைஷாலி பாகவத்*, DG *அபய் காட்கில்*, *நீதிபதி சுவாதி சாவன்*, PRIP *கல்யாண் பானர்ஜி மற்றும் நீதிபதி ஷைலஜா சாவந்த்.*

உங்களைப் போன்ற அமைதிப் பேரறிஞரைக் காணும்போது, எங்களுடைய கருத்தாக்கத்தை நடைமுறைக்கு ஏற்றாற்போல் அமைக்கும்போது உண்மையில் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுகிறது.

PRIP *கல்யாண் பானர்ஜி*

திட்டப்பணிக்கு முழு ஆதரவு வழங்கியதற்காக நீதிபதி சுவாதி சாவனுக்கு வைஷாலி நன்றி தெரிவித்தார், பெண்களை மேற்பார்வையிடுவதிலும் ஊக்கப் படுத்துவதிலும் நாங்கள் பங்கேற்றோம், இது போன்ற பயிற்சிக்கு விண்ணப் பிக்க தயங்கினர். ஆனால், பங்கேற் பாளர்கள் ஒவ்வொருவரின் பிரச்ச னைகளைத் தீர்ப்பதற்கும் நாங்கள் கைகொடுப்போம் என்று வலியுறுத்திய பின்புதான் வந்தார்கள்,'' என்றார்.

பெண்களுக்கு உதவ நீதிமன்றத் துடன் இணைந்ததற்கு குடும்ப நல நீதிமன்ற தலைமை நீதிபதி ஷைலஜா சாவந்த், ரோட்டரிக்கு நன்றி தெரிவித்தார். கடந்த வருடம் அவருடன் பணியாற்றுபவர் (சுவாதி சாவன்) இந்த யோசனையை சொன்னபோது, ''ஆரம்பத்தில் சந்தேகத்துடன் இருந்தேன். ஆனால் திட்டப்பணியைச் செயல்படுத்துவதற் கான திட்டங்களை அவர் வகுத்த பின்பு என்னுடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். எந்தவொரு திட்டப்பணிக்கும் நிதி முக்கியமானது, இல்லையென்றால் வெறும் யோசனைகளாகவே இருக்கும். ரோட்டரி உதவ முன்வந்த போது, இது நிஜமாகிவிட்டது,'' என்றார்.

ஜீவனாம்சத் தொகையை சொல்வது நீதிமன்றங்களுக்கு ரொம்ப சுலபம், ''ஆனால் அதை செயல்படுத்துவது தான் மிகக் கடினம். ஆண்கள் ஜெயிலுக்குக் கூட போகத் தயாராக இருப்பார்கள் ஆனால் பணம் கொடுக்க விரும்ப மாட்டார்கள். பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சம்பாதிக்க உதவி செய்யவதே இந்த யோசனை. இதன் மூலம் 50 பெண்கள் பயனடைந்திருக்கிறார்கள். இந்த திட்டம் மகாராஷ்டிரா முழுவதும் செயல்படுத்தப்படும் என்று நம்புகிறேன்,'' என்றார்.

திட்டப்பணியைச் செய்ய குடும்ப நல நீதிமன்றத்துடன் இணைந்ததற்கு மாவட்டம் 3131ஐ PRIP பானர்ஜி பாராட்டினார். ''பயனாளர்களின் முகத்தில் நம்பிக்கையையும், சிரிப்பையும் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த அற்புதமான திட்டப்பணியை இந்தியா முழுவதும் ரோட்டரி சங்கங்கள் செயல்படுத்தும் என நம்புகிறேன்.''

ரோட்டரி அமைதிப் பேரறிஞர் நீதிபதி சுவாதியைச் சந்தித்ததே மகிழ்ச்சி என்றார். ''ஏனென்றால் TRF முன்னாள் அறங்காவலராக பல ஆண்டுகளுக்கு முன்பு நான் பங்கேற்ற யோசனைகளில் ஒன்று இந்த அமைதித் திட்டப்பணி. உங்களைப் போன்ற அமைதிப் பேரறிஞரைக் காணும்போது, எங்களுடைய கருத்தாக்க த்தை நடைமுறைக்கு ஏற்றாற்போல் அமைக்கும்போது உண்மையில் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுகிறது.

இரண்டு பயனாளர்களை இந்தத் திட்டப்பணி, ஒரு கொடுமையான, வாழ்க்கையிலிருந்து வெளிக்கொணர்ந்து கௌரவமான வருமானத்தை உருவாக்கி தங்களின் குழந்தைகளைக் கவனிக்க எப்படி உதவியது என்பதை நினைவு கூர்ந்தனர். ரோட்டரியை பார்ட்னராகத் தேர்ந் தெடுத்ததற்கு நீதிபதிகளுக்கு DG அபே காட்கில் நன்றி தெரிவித்தார் மற்றும் இந்தத் திட்டத்துக்கு உதவிய RC புனே பல்கலைக்கழகத்தின் பிரசிடென்ட் பல்லவி தேஷ்பாண்டே, பார்வையாளர்களை வரவேற்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

Ergo Bed

Smart. Adjustable.Technology.

EQUIPPED WITH 5 ZONE 5 ZONE PIN CORE LATEX MATTRESS

feast | surf the net | read a book | watch TV | massage

AMERICA'S #1 Mattress Brand NOW IN INDIA

80 YEARS OF EXPERIENCE

With advanced and improved technology, the sleek European design Ergo bed will let you choose your own style of comfort. With an easy push of a button, this bed will freely adjust to any position of activity you desire: you can dine on your bed, use your laptop, read comfortably, lie down while watching TV, or simply relax and enjoy different intensities of noiseless vibration massages. The mattress is made of superior 100% natural pin core latex with high-grade specifications for optimal body support and comfort. Further, it also provides health benefits with the use of the Zero G position which optimizes blood circulation.

ADJUSTABLE ERGO BASE WARRANTY 20 YEARS LIMITED

LATEX MATTRESS WARRANTY 10 YEARS LIMITED

Company Showrooms: Mumbai – 022-49739066 , Bangalore – 080-41654425, Chennai - 044-48516188
Authorised Franchisees: Décor World – Hyderabad – 040-66746622, Adinath Furnitures – Surat – 0261-2634567, Impex United – Cochin - 9746471257, Dimensions Furniture & Lifestyle – Indore – 0731- 2552855, Foam Home – Mumbai – 022-23514135, Galaxy Impex – Pune – 9823815169, ND Enterprises – Navi Mumbai – 022-65111155, Diya Enterprises – Coimbatore – 9500806444, Naaz Mattress Gallery – Gurgaon – 9871170247/8700309691
Authorised Dealers: Shangar Furnishing – Vadodara – 0265-2321775, The Handloom Emporium – New Delhi – 011-22443311, Jain Foam Palace – New Delhi -011-41554162, Rajwada Décor – New Delhi - 011-45508926, Luxe Furnishing – Hyderabad – 040-23002977, Trisul Foams – Vijayawada – 0866-2489122/2579122

Serta®

WE MAKE THE WORLD'S BEST MATTRESS.™

Manufactured & Marketed by: Emirates Sleep Systems Pvt. Ltd. (Under license from Serta Inc, USA.)

EMIRATES Sleep Systems Pvt. Ltd.

Sales & Marketing Office: Office No # 0955 L-9, Raheja Towers, East Wing, No.26/27 MG Road, Bangalore 560001, India. Email: admin@sleepsystems.in

/sertaindia @sertaindia /sertaindia

www.sertaindia.com

இவான்ஸ்டனில் பத்திரிகையாசிரியர்கள்

அனைத்து 33 பிராந்திய பத்திரிக்கைகளும், அட்டைப்படங்களில் ஒரே மாதிரியான தோற்றமும் உணர்வும் கொடுக்க வேண்டும் என இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் உலக பத்திரிக்கையாசிரியர்கள் சந்திப்பில் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

இவான்ஸ்டனில் உள்ள RI தலைமையகத்தில் நடந்த சந்திப்பில் பல்வேறு பிராந்திய இதழ்களின் பத்திரிக்கையாசிரியர்களும் ஆசிரியர் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு, முன்னெடுத்துச் செல்லும் பாதையில் அவர்கள் குறிப்புகளை பரிமாறிக்கொண்டனர்.

"உலகம் முழுவதும் இருக்கும் 1.2 மில்லியனுக்கு அதிகமான உறுப்பினர்களுக்கு ரோட்டரி நிகழ்வுகளை தெரிவிக்க பத்திரிக்கை இருப்பது மிகவும் முக்கிய மானது. இந்த பத்திரிக்கைக்கு ரொட்டேரியன்கள் பணம் செலுத்துவதால், அதன் உயர்தரத்தை தக்கவைப்பதும் பணத்திற்கேற்ற மதிப்பைத் தருவதும் தான் மிக முக்கியம்" என்று RI பிரசிடென்ட் இயான் ரைஸ்லி தனது வீடியோ செய்தியில் கூறினார்.

"பத்திரிக்கைகளின் தரத்தை நன்றாகக் கொண்டுவந்திருப்பதாக" பிராந்திய ஆசிரியர்களைப் பாராட்டிப் பேசுகையில், ஒவ்வொரு மாதமும் பல பிராந்திய பத்திரிக்கைகளை படிப்பதாகவும், "ஒவ்வொரு வருடமும் அதன் தரம் உயர்ந்திருக்கிறது என நிறைய ரொட்டேரியன்கள் நம்புவது போல நானும் நம்புகிறேன்" என்றார்.

ரோட்டரி இல்லா உலகிற்கு ரோட்டரியை அறிமுகப்படுத்தும் பணியை தரமான பத்திரிக்கைகள் செய்கிறது என்றும், "ஒரு சிறந்த பொது அபிப்ராயமும் நல்ல மதிப்பான பிராண்டும் நம்மிடம் இருக்கிறது" என்று ரைஸ்லி கூறினார்.

கடந்த வருடங்களில் பத்திரிக்கைகளின் எண்ணிக்கை விரிவடைந்துள்ளது, "மேலும் உறுப்பினர்களில் பாதிக்கு மேற் பட்டோர் உங்கள் பிராந்திய பத்திரிக்கையை பெறுகிறார்கள் என புரிந்துகொள்கிறேன். நமது பத்திரிக்கைகள் உறுப்பினர்களுக்கு மிகவும் பொருத்தமாக இருப்பதை உறுதிசெய்கிறது".

வருங்காலங்களில் காகிதப் பதிப்பிற்கு மாற்றாக, டிஜிட்டல் பதிப்பாக இருக்கும் வாய்ப்புகளைப்

ரஷீதா பகத்

பற்றி மாநாட்டில் விவாதிக்கப்பட்டது, காகிதப் பதிப்பிற்கு RI தகவல் தொடர்புக் குழு துணைத்தலைவரும், இந்த மாநாட்டின் நெறியாளருமான ஜான் பெர்னாடன் உட்பட பலர் பலத்த ஆதரவைத் தெரிவித்தனர். வட அமெரிக்காவில் மட்டுமே கடந்த ஆண்டு 700 புதிய காகிதப்பதிப்பு பத்திரிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக தெரிவித்தார். இரண்டு ஆண்டு களுக்கு முன்பு, அவருடைய நண்பர் ஒருவர் சிகாகோவிற்கு வெளியே ஒரு பத்திரிக்கையை ஆரம்பித்தார்; "இது மல்டி-மில்லியன் டாலர் வீடு களுக்குச் செல்கிறது, ஆனால் மக்கள் வாசிப்பார்கள் என்று தோன்றவில்லை என்று என்னிடம் கூறினார். இந்தப் பத்திரிக்கையை நீங்கள் வைத்திருந் தால் செல்வச்செழிப்புடன் நீங்கள் இருப்பதாக மக்கள் நினைத்துக்கொள்வார்கள்!".

ஆசிரியர்களிடம் பேசும்போது, 130 நாடுகளில் 22 மொழிகளில், 33 பத்திரிக்கைகள், 700,000 ரொட் டேரியன்களை சென்றடைகிறது என்று RI ஜெனரல் செக்ரட்டரி ஜான் ஹூயுகோ கூறினார். "சந்தா கட்டாயமாக இருந்தாலும் கூட, உறுப்பினர்கள் ஆர்வமாகவும் இந்தப் பத்திரிக்கையை வாங்கக் கூடிய அளவுக்கு பத்திரிக்கையின் செய்தி புதுமையாகவும், உயர்தரமாகவும்" உருவாக்க வேண்டும் என ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார்.

இது போன்ற நெகிழ்வுத்தன்மையை CoL அனுமதித்திருந்தாலும், ரோட்டரி சங்கங்கள் உண்மையிலே நெகிழ்வுத்தன்மையின் உட்பொருளையோ அல்லது இது எப்படி நடைமுறையில் வேலை செய்யும் என்பதையோ புரிந்து கொள்ளவில்லை. சங்கங்கள் நெகிழ்வுத் தன்மை என்றால் சிக்கனமாக இருப்பது என்றும் இதை கூட்டங்கள் நடத்தும் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் செய்யலாம் எனவும் நினைக்கின்றனர்! மற்றவர்களுக்கு நெகிழ்வுத்தன்மை ஏற்றுக்கொள்ள என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி எவ்வித யோசனையும் இல்லை. ஆனால் இன்னொரு விதத்தில், நிறையச் சங்கங்கள் நெகிழ்வுத்தன்மை ஏற்றுக்கொள்வதில் புதுமையான அணுகுமுறைகளை கையாள்கின்றன இவற்றை பத்திரிக்கைகள் எழுத வேண்டும்.

ரொட்டேரியன்களுக்கு விஷயங்களைப் புரிய வைப்பது தான் இந்த பத்திரிக்கைகளின் பொறுப்பு, தங்கள் சங்க கூட்டங்களில் என்ன செய்கிறார்கள் அல்லது எப்படி இதைச் செய்கிறார்கள் என்பதைப் பார்க்க "ரோட்டரி போலீஸ்" எதுவும் இல்லை,

கதை சொல்வதில் வல்லவராக இருங்கள்

ஒரு முன்னணி பத்திரிக்கை வல்லுநரும் இதழியல் ஆய்வாளருமான, "மிஸ்டர் மேகஸின்' என்ற பெயருக்குச் சொந்தக்காரரான சமிர் ஹுஸ்னி, காகிதப் பதிப்பிற்கு ஆதரவாகப் பேசினார். சமூக ஊடகங்கள், பொய்யான செய்திகள் வெளிப்படுகிற தவிர்க்க முடியாத காலத்தில் நாம் வாழ்ந்தோம், "டிவிட்டர் மூலமாக ஜனாதிபதி செய்தி பதிவிடுகிறார். ஜனாதிபதி ட்வீட் செய்யும் போது, அது நேரடியாக மக்களைச் சென்றடை கிறது. பத்திரிக்கையாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் சமூக ஊடகம் மூலம் இணைந்திருக்க நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? நீங்கள் எப்படி இருப்பீர்கள்?'

இந்தத் துறையில் ஒரு பத்திரிக்கை யாளராகவும், ஆசிரியராகவும் இருப்பது ஒரு சவாலானது, ஏனெனில் "எனக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், CNN மற்றும் ஃபாக்ஸ் நியூஸில் ஒளிபரப்பாகும் இதே நிகழ்வைப் பார்த்த பிறகு சில சமயம் எப்படி ஒரே செய்தி பலவிதங்களில் இருக்கிறது என்று ஆச்சரியப்படுவேன்!'

காகித ஊடகம் அழிந்துவிடும் என்று சொல்லப்பட்டது தவிடுபொடியாகி விட்டது. ஒரு காலத்தில் ஐபேட் தான் செய்திகளுக்கான விமோசனமாக இருந்தது. பிறகு ஸ்மார்ட் ஃபோன்களின் அதிக வசதியான வெர்ஷன்கள் வர வர, காகிதப் பதிப்பு விரைவில் அழிந்துவிடும் என்று அனைவரும் கூறினர். ஆனால் நடந்தது என்ன? "ஹர்ஸ்ட் மற்றும் மெரிடித் (இது சமீபத்தில் டைம் இன்க் நிறுவனத்தை வாங்கியது) என்ற இரு பதிப்பீட்டு ஜாம்பவான்களின் 90 சதவீத வருமானம் இன்றும் கூட காகிதப் பதிப்பு மூலமாகவே வருகிறது. பெட்டர் ஹோம்ஸ் அண்ட் கார்டன்ஸ் என்ற பத்திரிக்கை 7.6 மில்லியன் பதிப்புகளைக் கொண்டுள்ளது. நான் சொல்வதை நம்புங்கள், விற்பனை இந்த அளவுக்கு அதிகமாக இருந்ததால், அதிகப் பணம் சம்பாதிக்க முடியும்."

மிக வேகமாக தகவல்களைப் பரப்புகின்ற இணைய உலகம் மற்றும் சமூக ஊடகத்துடன் போட்டியிடும்

சுமீர் ஹுஸ்னி

போது, "நீங்கள் சமயோசிதமாகவும் விரைவாகவும் இருக்கவேண்டும், அதில் நிறைய சவால்கள் இருக்கின்றன. முக்கியமாக மனிதனின் கவனக் குவிப்பு நேரம் சுருங்குவது. "நமது கவனக் குவிப்பு நேரம் எவ்வளவு குறைவாக உள்ளது என்பதைப் பார்க்கும்போது ஆச்சர்யமாக இருக்கிறது. அமெரிக்கர்களின் கவனக் குவிப்பு நேரம் 12லிருந்து 8 நொடிகளாக குறைந்திருக்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது; அதாவது 8 நொடிகளில் உங்கள் கவனத்தை நான் கவர்ந்துவிட்டால் உங்களை என் வசமாக்கிவிட்டேன் என்று அர்த்தம். அதனால் தான் சில விளம்பரதாரர்கள் சமூக ஊடகத்தில் 3, 4 அல்லது 5 நொடிகள் கொண்ட வீடியோக்களை உருவாக்குகிறார்கள். அதேநேரம், ஒரு தங்கமீனின் கவனக் குவிப்பு நேரம் 10 நொடிகள் ஆகும்."

குறுகிய கவனக் குவிப்பு நேரத்திலும், "நிறைய பேர் நமது கவனத்தை எதிர்பார்க்கிறார்கள். யாரோ ஒருவர் எல்லா நேரமும் உங்களை ஈர்க்கவே முயற்சிக்கிறார்...

"நீங்கள் யூ-டியூபில் ஒரு நாளில் பதிவேற்றியது தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் காண்பிக்கப்படும் என்று ஒரு சில புள்ளிவிவரங்களைக் கூறினார். அதேபோல, நெட்ஃப்லிக்ஸ்-இல் ஒரு நிமிடத்தில் 87,000 மணிநேர வீடியோ பார்க்கப்படுகிறது. இதனுடன் ஃபேஸ்புக், ஸ்னாப்ஷாட் மற்றும் இதர பல ஆப்களை சேர்க்கும் போது, இந்த விஷயங்கள் நம்மைத் தலைசுற்ற வைக்கிறது. சமூக ஊடகத்தில் சிவப்பு விளக்கு என்பதே கிடையாது.... பச்சை விளக்குகள் மட்டும் தான், மேலும் தகவல்கள் வந்துகொண்டேயிருக்கிறது."

அனைத்து விதமான எலக்ட்ரானிக் தக வல்களுக்கிடையே காகிதப்பதிப்பு நல்ல நிலையில் இருந்தது. சமீபத்தில் நடந்த அரச திருமணம் "அமெரிக்க இளவரசி' (மேகன் மார்க்கில்) ஐ வெளியிட காகிதப் பத்திரிக்கைகள் ஒன்றுக்கொன்று

ரஷ்தா பகத்

போட்டி போட்டன. டைம் பத்திரிக்கை, முதலில் வெளியிட விரும்பியதன் காரணமாக தனது வெளியிடும் தினத்தை வெள்ளிக்கிழமையிலிருந்து புதன் கிழமைக்கு மாற்றியது. பத்திரிக்கைகள் தங்களின் அட்டைப்பக்க விலைகளை உயர்த்தியது. "அமெரிக்க இளவரசி உட்பட ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் இதைக் கொண்டாட விரும்பினர்."

"காகிதப் பதிப்பில் இருக்கும் புத்தகங்களோ அல்லது இதழ்களோ வாசகர்களுடன் ஒரு உறவைக் கொண்டிருக்கிறது.... நீங்கள் இந்த உறவு சார்ந்த வியாபாரத்தில் இருக்கிறீர்கள், மேலும் காகிதப் பதிப்பு மற்றும் டிஜிட்டல் இடையேயான வித்தியாசம் என்பது ஒரு இரவு அல்லது ஒரு காதல் ஈர்ப்பிற்கும் காலம் முழுவதும் இருக்கும் திருமணத்திற்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தைப் போன்றது!' என்பதை ஆசிரியர்கள் மறக்கக்கூடாது என்று வலியுறுத்தினார்.

காகிதப் பதிப்பு எப்போதும் சரியாகவே இருக்கும் என்றார் ஹுஸ்னி, ஆனால் ஒரு எச்சரிக்கை; "நல்ல செய்தி நீண்ட நாள் தாக்குப் பிடிக்காது. ஒரு அனுபவத்தை நீங்கள் தர வேண்டும்." அமெரிக்காவில் இன்றைய நாள்களில் பத்திரிக்கையின் சராசரி விலை $13, தகவலுக்கும் அனுபவத்திற்குமே மக்கள் பணம் செலுத்த விரும்புகிறார்கள்.

காகிதப் பதிப்பு மற்றும் டிஜிட்டல் ஊடகம் இரண்டுமே நீண்ட காலத்திற்கு ஒன்றிணைந்தே செயல்படும் என்று கணிக்கிறார், டிஜிட்டல் பதிப்புகளுக்கு விளம்பரங்கள் சிறிதளவே வருகிறது என்றார். "கூகிள் மற்றும் ஃபேஸ்புக் இரண்டும் டிஜிட்டல் டாலர்களில் 85 சதவீதத்திற்கு அதிகமானப் பணத்தைப் பெறுகின்றன. இதர ஒட்டுமொத்த டிஜிட்டல் ஊடகம் மீதமுள்ள 15 சதவிகிதத்திற்கு போட்டியிடுகிறது."

"டிஜிட்டல் என்பது ஒரு சொர்க்க மாகவோ அல்லது ஒரு மோசமான காகிதப் பதிப்பிற்கு பதிலாகவோ என்று நினைக்க வேண்டாம்." என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும் என ஹுஸ்னி எச்சரிக்கை செய்கிறார்.

காகிதப் பதிப்பு மற்றும் டிஜிட்டல் இரண்டு முறைகளிலும் கலந்து கொடுப்பதற்கு அவர் அறிவுறுத்துகிறார். "ஒரு விமானத்தில் தி எகனாமிஸ்ட் அல்லது வார் அண்ட் பீஸ் நாவலை நான் படித்தால், அது எனது கைகளில் இருக்கவேண்டும் என நான் விரும்புவேன், ஏனெனில் இந்த காகிதப் புத்தகத்தை மக்கள் பார்த்து: "இவர் ரொம்ப ஸ்மார்ட்டான ஆள்" என சொல்ல வேண்டும் என நான் விரும்புகிறேன். ஆனால் பிளேபாய் பத்திரிக்கையை நான் வாசிக்க விரும்பினால், அதை எனது ஐபேடில் படிக்க விரும்புகிறேன்!"

அவர் கடைசியாகச் சொன்னது ஈர்க்கக்கூடியதாகவும் பொருத்தமாகவும் இருந்தது: "கதை சொல்வதில் வல்லவராக இருங்கள்... ஈர்க்கக்கூடிய விதத்தில் தூய நீர் கிடைக்காமல் இருக்கும் குழந்தையின் கதையைச் சொல்லுங்கள், அப்படிச் செய்தால் தான் மக்கள் நாற்காலியை விட்டு எழுந்து, தங்கள் ஒயின் கிளாஸை தள்ளி வைத்துவிட்டு, செயலில் இறங்குவார்கள்..."

சங்கங்கள் எந்தளவுக்கு உயருகிறதோ அந்தளவுக்கு அவர்களின் சமூகத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும். நெகிழ்வுத்தன்மையைக் காட்டியிருக்கும் வெவ்வேறு நாடுகளில் உள்ள மாதிரி சங்கங்களை தேர்வு செய்து, அதைப் பற்றி எழுதுவது ஒரு நல்ல யோசனையாக இருக்கும். இந்த மாதிரிகள் போன்று மற்ற சங்கங்களை உருவாக்கலாம், என்றார் ஹூயுகோ.

உலகம் முழுவதும் ரோட்டரி என்ன செய்கிறது என்பதன் பிரதானக் குரலாக பிராந்திய பத்திரிக்கைகள் இருக்கிறது என்று RI தகவல் தொடர்பு குழுத்தலைவரும் மாநாட்டின் இணை-நெறியாளருமான பிராட் ஹோவார்ட் கூறினார். இதற்காக ஒரு பிராண்ட் என்பது மிக அவசியமானது, மேலும் தகவல்தொடர்புத் துறை யினர் "நமது பிராண்ட் பயிற்சி யை ஆரம்பித்துள்ளனர் மற்றும் நமது பிராண்ட் அவசியத்தின் அடிப் படையைப் புரிந்து கொள்வதற்காக அவர்கள் சந்தைக்களத்தில் இறங்கி யுள்ளனர்." இதன் விளைவு தான் 'செயல் வீரர்கள்' (People of action) பிரச்ச ாரம். "இது நமது முக்கிய சாராம் சமாகவும் உண்மையில் நாம் யார் என்பதைத் தெரிவிப்பதாகவும் உள்ளது." ஆனால் "நாம் யார், என்ன செய்கிறோம் என்பதையும்" ரொட்டேரியன்களுக்கும், ரொட்டேரி யன் அல்லாதவர்களுக்கும் சொல்ல பிராந்திய பத்திரிக்கைகளையே RI பெரிதும் நம்பியிருக்கிறது" என்றார்.

ஒரு தனித்துவமான அமைப்பாக பிராந்திய பத்திரிக்கைகள் இருக்கின்றன, இது புதுமையான செய்திகளுடன் வருவதற்கான வாய்ப்பினைக் கொண்டிருக்கிறது. இந்த கருத்தரங்கின் முக்கிய அம்சங்களைப் பற்றி முதன்மை தகவல்தொடர்பு அதிகாரி டேவிட் அலெக்ஸ்சாண்டர் பேசுகையில்: தரத்தையும், செய்தி யையும் உயர்த்துவது, தகவல் தொடர்புக்கு முழுமையான அணுகு முறையை உருவாக்குவது, நமது வாசகர்களை நெருக்கமாகவும் ஒருங்கிணைத்து வைக்க கருவிகளை வடிவமைத்துப் பயன்படுத்துவது, ரொட்டேரியன்களுக்கு தேவையான ஒரு தகவல்தொடர்புக் கருவியை வழங்கும் திசையில் தொடர்ந்து நகருவது போன்றவற்றை விளக்கினார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

Our Esteemed Guest

Rtn Barry Rassin & Ann Esther
RI President 2018–19

Rotary

PASSION TO SERVE

Rotary Institute 2018
Chennai | 5-7th October
Zone 4, 5 & 6A

Convener's Message

RID Basker Chockalingam
Ann Malathi

Dear Rotary Leaders,

Rotary Zone Institutes give opportunity to Rotary leaders, past, present and future, to meet and greet each other, exchange ideas and debate on how to take Rotary forward. **Malathi & I** deem it a privilege and pleasure, to invite you and your spouse, to Rotary Institute 2018, to be held during October 5–7, 2018, at **Hotel Leela Palace, Chennai**. With a set of wonderful speakers and world class entertainment, this will be truly an Institute with a difference. We will have the rare opportunity of having with us the Rotary senior leadership, who will make the event a memorable one for us. The dynamic Institute Chairman PDG ISAK Nazar and his wonderful team are making every effort, to ensure that, we all have a grand Rotary Institute 2018 — **Passion To Serve —** at Chennai.

With warm regards,
RID Basker Chockalingam, RI Director (2017–19)

Chairman's Message

Ann Afzalunnisa
PDG ISAK Nazar

Dear Rotary Leaders,

Greetings from Team — Rotary Institute 2018.

It's a great opportunity given by Director / Convener Rtn C Basker to have our **Rotary Institute 2018** at Chennai, at the grand venue — **Hotel Leela Palace,** Chennai — on 5th, 6th and 7th October 2018. Please be ready to witness one of the most memorable Rotary Institute at Chennai. We are all set to deliver an outstanding and memorable Institute. With a galaxy of eminent speakers, a new experience in entertainment and all that a successful Rotary Institute can be remembered for, awaits you. On behalf of Rotary Institute 2018 Team, I welcome you to **Passion to Serve, Rotary Institute 2018.** Please register immediately.

PDG ISAK Nazar
Chairman — Rotary Institute 2018

Please send this form duly filled by post / courier to:

Rtn PDG ISAK Nazar, Chairman, Rotary Institute 2018
Manna Foods, 129, Z Block, 6th Avenue, Anna Nagar, Chennai – 600 040, Phone: 044 2683991, Mobile: 94449 76846
e-mail: rotaryinstitute.chennai2018@gmail.com, nazarisak@gmail.com

REGISTRATION DATA SHEET

Name: Rtn. ..... Call / Badge Name:.....

Classification: .....

Address: .....

City: ..... Pin ..... Country .....

Mobile: ..... e-Mail: .....

(Note: Include country and area code for Telephone / Fax Number)

☐ PDG ☐ IPDG ☐ DG ☐ DGE ☐ DGN ☐ DRFC ☐ DMC ☐ DRC

Home Club: ..... RI District: .....

Name of Spouse: ..... Call Name: .....

Food Preference			Collar size
	Rotarian	Spouse	
Veg	☐	☐	☐ 38 ☐ 40 ☐ 42 ☐ 44 ☐ 46
Non Veg	☐	☐	

REGISTRATION			Couple	Single	Amount
Institute Registration	**Couple**	**Single**			
Upto 30th June 2018	INR 25000	INR 15000			
After 30th June 2018	INR 26000	INR 17000			
GETS (Couple)	2,3,4 October 2018	INR 60000			
DGs Training Seminar	4th October 2018	INR 5000 per Person			
DGN Training Seminar	4th October 2018	INR 5000 per Person			
Dist Trainers Seminar	4th October 2018	INR 5000 per Person			
COL Seminar	4th October 2018	INR 5000 per Person			
TRF Dinner	4th October 2018	INR 5000 per Couple INR 3000 per Single			
TRF Seminar	5th October 2018	INR 5000 per Couple INR 3000 per Single			
HOTEL ACCOMODATION					
The Leela Palace	Double Executive	INR 10000 Per Nite			
	Single Executive	INR 9000 Per Nite			
Ramada Plaza	Double Deluxe	INR 8000 Per Nite			
	Single Deluxe	INR 7000 Per Nite			
The Savera Hotel	Double Deluxe	INR 7000 Per Nite			
	Single Deluxe	INR 6000 Per Nite			
			Total		

**Kindly tick whichever is applicable.*

*Please note that the Accomodation is purely on first come first serve basis.

The cheque and draft shall be in favour of **"Rotary Institute 2018"** payable at Chennai.	*Online payment details:* **Account Name:** Rotary Institute 2018 **Bank:** Karur Vysya Bank **Branch:** Saidapet, Chennai - 15 **Account No.:** 1651155000067299 **IFSC Code:** KVBL0001651

The Institute registration covers the following:

a) Inaugural plenary on Friday, Oct 5, 2018 followed by dinner.

b) Lunch and dinner on Saturday, Oct 6, 2018.

c) Lunch on Sunday, Oct 7, 2018.

The other events such as GETS (Couple), DG Seminar, Membership Seminar, DGN Seminar, COL, TRF Seminar, Foundation Dinner have additional registration as mentioned above.

Date: ..... Signature: .....

பள்ளிப்படிப்பைக் கைவிட்ட சிறுமிகளுக்கு மறுவாய்ப்பு

ரஷிதா பகத்

மீரா பஞ்வானி 'மறு வாய்ப்பு' திட்டத்தின் பயனாலிகளுடன்.

மனதிற்கு இதமான திட்டப்பணி, பல காரணங்களுக் காக பள்ளி படிப்பைக் கைவிட்ட சிறுமிகளையும் இளம் பெண்களையும் அடையாளங்கண்டு, அவர்கள் 10ம் வகுப்பு முடிப்பதற்கும் பொதுத் தேர்வு எழுதுவதற்கும் RID 3060 RC அங்களேஷ்வர் வழிநடத்துகிறது.

PDG அசோக் பஞ்வானியின் சிந்தனையில் உருவான இத்திட்டப்பணியை, சங்கத்தின் முன்னாள் தலைவரும், அவரது மனைவியுமான மீரா பஞ்சவானியின் தலைமையில் செயல்படுத்தப்படுகிறது. "பண வசதி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக, இளம் பெண்கள் பள்ளிப் படிப்பைக் கைவிட்டு, 10ம் வகுப்பு படிப்பை கூட முடிக்க முடியாமல் இருக்கிறார்கள்" என்கிறார் மீரா. பலருக்கு பள்ளிபடிப்பையாவது முடிக்கவேண்டும் என்பது நீண்ட நாள் கனவு, எனவே இந்தத் திட்டப்பணிக்கு "மறு வாய்ப்பு", என்று பெயரிடப்பட்டதுக்கு ஏற்ப ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறது.

இந்தத் திட்டப்பணி தனது மூன்றாம் ஆண்டில், ஒரு நிலையான பாதையை அடைந்திருப்பதாக கூறுகிறார். சிறுமிகள்/பெண்கள் எப்படி கண்டுபிடிக்கப்படுகிறார்கள் என்ற கேள்விக்கு, "அங்களேஷ்வரைச் சுற்றியுள்ள கிராமங்களில் சிறுமிகளைக் கண்டறிய, பிராதம் என்ற NGOவைச் சேர்ந்த ஊழியர் களைப் பணியில் அமர்த்துகிறோம். அதன்பின், சிறுமிகளுக்குப் பயிற்சியளித்து 10ம் வகுப்பு பொதுத் தேர்வுக்குத் தயார்படுத்த பிராதமின் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கிறோம். படிப்பைக் கைவிட்டு பயிற்சி பெறும் பெண்கள் சுமார் 15 முதல் 30 வயதுக்குள் இருக்கிறார்கள்."

முதல் ஆண்டில், படிப்பைக் கைவிட்டவர்களில் 106 பேரைக் கண்டுபிடித்து, கிராமங்களில் ஆறு வெவ்வேறு மையங்களில் பயிற்சியளிக்கப்பட்டது, இந்த மையங்களுக்கான வாடகையை சங்கம் கட்டியது. அவர்களின் முதல் முயற்சியிலேயே 106 பெண்களில் 80 பேர் தேர்ச்சி பெற்றனர், பின்னர் 30 சிறுமிகள் வெற்றி பெற்றனர். அடுத்த வருடம் 56 மாணவிகளில் 48 பேர் தேர்ச்சி பெற்றனர், மூன்று பேர் தேர்வு எழுதவில்லை.

"ஆறு வெவ்வேறு இடங்களின் நடக்கும் பயிற்சி மையங்களுக்கு வாடகை அதிகமாக இருந்ததால், சொந்தமாக இடம் வாங்க முடிவு செய்தோம், இப்போது சொந்த வளாகத்தில் இயங்கிக்கொண்டு இருக்கும் பெண்களின் மேம்பாட்டு மையத்திற்கு அடுத்துள்ள கட்டிடத்தை வாங்கியுள்ளோம்." ரூ.27 லட்சம், சங்கத்தின் ரொட்டேரியன்கள், ONGC மற்றும் PDG பஞ்சவாணி பிரசிடென்டாக இருக்கும் ஜகாடியா இன்டஸ்ட்ரீஸ் அசோஸியேஷன் முலமாகத் திரட்டப்பட்டது.

திட்டப்பணியானது, சங்கம் மற்றும் உலகளாவிய மானியத்தின் மூலம் திரட்டப்பட்ட நிதியின் மூலமாகச் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டப்பணிக்கு அதிக பணம் செலவாகிறது, இப்போது மூன்றாம் ஆண்டில் இருக்கிறோம், இதுவரை ரூ.36 லட்சம் செலவு செய்து, சிறுமிகளுக்கும் இளம் பெண்களுக்கும் புதிய நம்பிக்கை, கௌரவம் மற்றும் எதிர்காலத்தை கொடுக்கிறோம் என்பதால், நாங்கள் இதைத் தொடர்ந்து செய்ய வேண்டும், என்கிறார் மீரா.

பள்ளியை விட்டு வெளியேறுவதற்கான காரணங்களைப் பற்றி கேட்கையில், "வீட்டு வேலைகள் செய்யவும், சில சமயங்களில் வீட்டு வேலை செய்யும் தாய்மார்கள், சொந்த சுமைகளை குறைக்க உடன் அழைத்துச் செல்லவும்", இதைவிடக் கொடுமை பால்ய வயது திருமணத்திற்காக நிறைய பெற்றோர்கள் அவர்களின் படிப்பை பாதியிலே நிறுத்தி விடுகிறார்கள். "5, 7 அல்லது 9வது வகுப்பிலிருந்து நின்றுவிட்ட சிறுமிகள் எங்களிடம் இருந்தார்கள். "சில பெற்றோர்கள் சிறுமிகளை பயிற்சிக்கு அனுப்பத் தயங்கினார்கள், சிறுமிகள் ஆர்வமாக இருந்ததால், பயிற்சி மையத்திற்கு வருவதற்கான ஆட்டோ கட்டணத்தைக் கூட நாங்களே கொடுத்தோம்," என்றார் மீரா.

இந்த பயிற்சியினால் ஏற்பட்ட மாற்றங்கள் பாராட்டுக்குரியது. இந்தச் சிறுமிகளில் பலர் மேலும் தொடர்ந்து படிப்பதில் ஆர்வத்தைக் காட்டியதால், இப்போது 11 மற்றும் 12ம் வகுப்பிற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது, மேலும் ஐந்து சிறுமிகள் கணிப்பொறி வகுப்புகளுக்கும் செல்கிறார்கள்.

சிறுமிகளின் முகத்தில் தெரியும் புன்னகை, உற்சாகம், மற்றும் மகிழ்ச்சியைத் தவிர, உங்களை எது ஊக்கப்படுத்துவதாக இருக்கிறது என்று கேட்டதற்கு, முடியும் என்கிற அவர்களின் மனப்பான்மையும், "தேர்வில் தோல்வியுற்ற சிறுமிகள், கவலைப் படவேண்டாம், நாங்கள் மீண்டும் முயற்சிக்கிறோம் என்று சொல்வதும் தான்" என்கிறார்.■

விருது வழங்கும் விழாவில் PDG அஷோக் பஞ்சாவனி மற்றும் PRID மனோஜ் தேசாய்.

ரோட்டரியுடன் டாடா டெக்னாலஜிஸ்

ஜெயஸ்ரீ ஜெயராமன்

இடதுபுறத்திலிருந்து : D 3131 DG *அபய் காட்கில்,* TRF *அறங்காவலர் சுஷில் குப்தா, டாடா டெக்னாலஜீஸிலிருந்து அனுபவ் கபூர்,* DGSRC *ராகேஷ் பார்கவா,* RISAO TRF *மேலாளர் சஞ்சய் பர்மார் மற்றும்* PDG *வினோத் பன்சால்.*

புனே பகுதியில் உள்ள பள்ளிகளில் மின்வழிக்கல்விக் கான திட்டத்தைச் செயல் படுத்துவதில் டாடா டெக்னாலஜீஸ் நிறுவனம் ரோட்டரி 3131வது மாவட்டத்துடன், வடக்கு புனே ரோட்டரி சங்கத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறது. ரோட்டரியுடன் கூட்டாண்மையை விரிவு படுத்தவும் நாடு முழுவதும் அடிப்படைக் கல்வி, எழுத்தறிவுக்காக இணைந்து செயல்படவும் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனம் ஆர்வம் காட்டி வருகிறது.

டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் விவாதிப் பதற்காக, மே 1, 2018 ரோட்டரி மாவட்ட ஆளுநர் அபய் காட்கில், முன்னாள் ஆளுநர் விநய் குல்கர்னி, ராகேஷ் பார்கவா ஆகியோர் கூட்டாண்மை குறித்த விவாதங்களை ஆரம்பித்தனர்.

RI அமைப்பின் தெற்காசிய அலுவலகத்தில் (RISAO) டாடா டெக்னாலஜி யுடன் நடத்தப்பட்ட விவாதங்களை அடுத்து, ஒருங்கிணைந்த புரிந் துணர்வு ஒப்பந்தம் ஜூன் 8ம் தேதி கையெழுத் தானது. ரூ.1 கோடியில் நாடு முழுவதும் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படும்.

TRF அறங்காவலர் சுசீல் குப்தா, டாடா டெக்னாலஜிஸ் கார்ப்பரேட் சமூக பொறுப்பு அமைப் பின் (CSR) குழுவினரும் கையெழுத்திட்டனர். நிகழ்ச்சியில் 3011, 3012 மற்றும் 3131 மாவட்ட பிரதி நிதிகள், GHCL சமூகப் பொறுப்பு பிரிவினர் கலந்துகொண்டனர். கார்ப்ப ரேட் சமூகப் பொறுப்புக் கான நிதி (CSR fund) TRF உலக அளவிலான மானியத்திற்கு உதவும்.

அடிப்படை எழுத்தறிவு, கல்வி திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு ரோட்டரி சங்கங்களையும், மாவட்ட அமைப்புகளையும் அடை யாளம் கண்டறிவதற்காக RI அமைப்பின் தெற்காசிய அலுவலகத்தில் (RISAO) டாடா டெக்னாலஜிஸ் நிறுவனமும் அதன் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புக் குழுவும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும்.

(கட்டுரை ஆசிரியர் TRF கார்ப்பரேட் சமூகப் பொறுப்புப் பிரிவு மற்றும் பள்ளித் தூய்மைப் பிரிவின் மேலாளர்)

ஏழைகளுக்கான கேத் லேப்:

RC ஆக்ரா கிராண்ட் நன்கொடை

ரோட்டரி செய்திக் குழு

RC ஆக்ரா கிராண்ட் (D 3110) உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஃபெரோஸாபாத் என்ற சிறிய நகரில் ஏழைகளுக்கு உதவும் வகையில் இதய சிகிச்சைக் கான கேதரஸைசேஷன் ஆய்வகத்தை அமைக்க முடிவு செய்தது. பல மருத்துவ உதவிகளை, குறிப்பாக இதய நோய் சம்பந்தமான சிகிச்சை யைப் பெறுவதில் ஏழை எளியவர்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு உதவும் வகையில் இந்த கேத் லேப் அமைக்கப்படுகிறது.

மிக உயர்ந்த தரமான மருத்துவம், கிராமங்களிலும் வசிக்கும் நலிந்தவர்களுக் கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக கேத் லேப் அமைக்கப்படுகிறது. சேவார்த் சன்ஸ்தான் சேத் பிமல் குமார் ஜெயின் அவசர சிகிச்சை தர்ம சம்ரிதி மையம் *(Sevarth Sansthan Seth Bimal Kumar Jain Trauma and Physiotherapy Dharmarth Samiti Centre)* என்ற சேவை மருத்துவ நிலையம் தற்போது 225 கி.மீ. தொலைவில் உள்ள கான்பூர் பகுதி வரை மருத்துவ சேவையை மேற்கொண்டு வருகிறது. அந்த மருத்துவ நிலையத்திற்கு உதவும் வகையில் இந்த கேதரஸைசேஷன் ஆய்வகத்தை அமைக்கப் படுகிறது.

இதையடுத்து, RC ஆக்ரா கிராண்ட் எடுத்த முயற்சியால் கேத் ஆய்வகம் (Cath Lab) அமைப்பதற்கு 63,750 டாலர் (சுமார் ரூ. 2.43 கோடி) உலகளாவிய மானிய உதவி கிடைத்துள்ளது. இதன்மூலம் தர்ம சம்ரிதி மையத்திற்கு கேத் லேப் ஆய்வகத்தின் திட்ட தலைவராக ரோட்டரி மாவட்ட முன்னாள் தலைவர் சரத் சந்திரா இருக்கிறார்.

ஆய்வகம் அமைப் பதற்கான திட்டத்திற்கு மதன்லால் கோயல் தாராளமான நிதியுதவி அளித்துள்ளார். அவரது குடும்பத்தினர் நடத்தும் ஆர்டிஎஸ் புராஜக்ட் லிமிடெட் நிறுவனத்தின் கார்ப்பரேட் சமூகப் பணி பங்களிப்பாக 1,75,000 டாலர் (சுமார் ரூ. 1.19 கோடி) அளிக்கப்பட்டது என்றார் சரத் சந்திரா.

நன்கொடையின் போது ரோட்டரியின் உறுப்பினராக இல்லை. ஆனால், ரோட்டரி சங்கம் அணுகியபோது தாராள மனத்துடன் அள்ளிக் கொடுத்திருக்கிறார். அவரை யடுத்து, ஆக்ரா கிராண்ட் ரோட்டரி சங்கத்தின் இதர உறுப்பினர்களும் தாராளமாக நன்கொடை அளித்தனர். அவ்வாறு திரட்டப்பட்ட நன்கொடைக்கு இணையாக தி ரோட்டரி ஃபவுண்டேஷன் உலக நிதியும் கிடைத்தது என்றார் சரத் சந்திரா.

நாட்டில் பலருக்கு புகைப் பழக்கம், உளவியல் தாக்கங்கள், சர்க்கரை

நோய், ரத்த அழுத்தம் ஆகியவை காரணமாக இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் அதிகமாக வருகிறது. கேத் ஆய்வகம் இத்தகைய நோய்களையெல்லாம் கண்டறிய உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கேத் ஆய்வகத்தை (Cath Lab) தி ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் சுசீல் குப்தா திறந்துவைத்தார். நோய்களைக் கண்டறிவதற்கான வசதிகள், சிகிச்சைகள் ஆகியவற்றை தனியார் மருத்துவமனைகளுக்கு இணையான தரத்துடன் மலிவான கட்டணத்தில் அளிப்பதற்கு சேவார்த் சன்ஸ்தான் சேத் பிமல் குமார் ஜெயின் தர்ம சம்ரிதி மையம் உறுதியளித்தது. இதையெல்லாம் விட, பணமில்லை என்பதற்காக ஏழைகளுக்குச் சிகிச்சை இல்லை என்று கை விரிக்க

இடதுபுறத்திலிருந்து: *மருத்துவமனை தலைவர் P K ஜிந்தால், PDG சரத் சந்திரா, TRF அறங்காவலர் சுஷில் குப்தா, GHCL MD R S ஜலான், RISAOவிலிருந்து ஜெயஸ்ரீ ஜெயராமன், சஞ்சய் பர்மார் மற்றும் பாவ்னா வர்னா.*

மாட்டோம் என்ற உறுதி மன நிறைவு தருகிறது என்றார்.

ஃபவுண்டேஷனின் அறங்காவலர் குப்தா ஆய்வகத்தின் திறப்பு விழாவுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. மருத்துச் சேவையை தொடங்கி ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். அவருக்கும் ஃபவுண்டேஷனுக்கும் மனமார்ந்த நன்றி, அதைப் போல் முனைப்போடு கேத் லேப் அமைப்பதற்குப் பாடுபட்டு உழைத்த RC ஆக்ரா கிராண்ட்க்கு நன்றி என்றார் சந்திரா.

குஜராத் வேதியியல் நிறுவனத்தின் (Gujarat Heavy Chemicals Ltd) மேலாண் இயக்குநர் RS ஜலான் தன் பங்காக ரூ.2 கோடியை அளித்ததுடன் கேத் லேப் நிகழ்ச்சியிலும் பங்கேற்றார். ரோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநர் ராஜீவ் டாண்டன், மாவட்ட ஆளுநராக நியமனம் பெற்ற தினேஷ் சந்த் சுக்லா, ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மன்மோகன் சலுஜா, சிவ் ராஜ் பார்கவா, ரவி பிரகாஷ் அகர்வால், லக்ஷ்மிகாந்த் பன்சால் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

வடிவமைப்பு: L குணசேகரன்

சென்னையில் ப

K விஸ்வநாதன்

ஜெய ஸ்ரீ

DGs *பிரவீன் கோயல்* (3080), *பாபு பேரம்* (3232), *சுபாஷ் ஜெயின்* (3012) *ராஜீவ் சர்மா* (3030) *மற்றும் சசி சர்மா* (3141) *பால் ஹேரிஸ் சிலையுடன்.*

திய ஆளுநர்கள்

ரஸ்தா பகத்

இடதுபுறத்திலிருந்து: PRIDs *அசோக் மகாஜன்*, YP *தாஸ்*, RID C *பாஸ்கர்*, PRID PT *பிரபாகர்*, DG *விஷ்ணு மோன்டே மற்றும்* RIDE *பரத் பாண்டியாவுடன்.*

மேலே: IPDG *விவேக்குமார்*, DGs *ராஜீவ் சர்மா மற்றும் பிங்கி பட்டேலுடன் செல்ஃபி எடுக்கும் போது.*

ஜெய ஸ்ரீ

RNT *செயல்குழு உறுப்பினர் — சசி சர்மா*, AV *பதி, ராஜீவ் சர்மா, சுபாஷ் ஜெயின் மற்றும் பிங்கி பட்டேல்,* RID C *பாஸ்கருடன்.*

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

பசுமையான 90 ஆண்டுகள்

வி. முத்துக்குமரன்

மெட்ராஸ் ரோட்டரி சங்கம் தனது 90வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதால், உறுப்பினர்கள் பழைய நினைவுகளில் முழ்கி வலம் வந்து, இந்த சங்கத்தை தனது சுயநலமற்ற சேவைகளின் மூலம் கட்டமைத்தவர்களை நினைவு கூறுகிறார்கள்.

Rtns அருள்மொழி வர்மன், கபில் சிட்டலே, S குணசேகர், ரவி கட்டாரி, MC சங்கர், DG R ஸ்ரீனிவாசன், நந்திதா கிருஷ்ணன், VK சந்திரக்குமார் சங்கத்தலைவர் PN மோகன், NK கோபிநாத், விஜயா பாரதி, நிகில் ராஜ், விவேக் ஹரிநாராயன், PDG S கிருஷ்ணஸ்வாமி மற்றும் கிருஸ்டோஃபர் தேவப்பிரகாசம்.

அடுத்த 10 ஆண்டுகளில் தனது நூற்றாண்டை நெருங்கிக்கொண்டிக்கும், மெட்ராஸ் ரோட்டரி சங்கத்துக்கு (RCM), D 3232, திறமையான தலைவர்கள் கிடைத்தால், மகிழ்ச்சியான தோழமைகளும், பரஸ்பரத் தொடர்பும், மனித குலத்துக்கான சேவையும் கிடைக்கும் என்று இந்த சங்கத்தின் 90வது தொடக்க விழாவை நினைவு கூறும் சிறப்பு நிகழ்ச்சியில் DG R ஸ்ரீனிவாசன் சுருக்கமாகச் சொன்னார்.

அரசு, மற்றும் NGOகள் மருத்துவமனைகளுடன் இணைந்து போலியோ ஒழிப்பதில் RCM அளித்த சேவை நினைவு கூறத்தக்கது, "1980களில் போலியோவை ஒழிக்க உறுதியான போராட்டத்தை நிலைநிறுத்த S L சித்தாலே குழுவினர், ஆய்வகங்கள் மற்றும் மருத்துவ அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றினர். RCM தலைவர்கள் பெரிய திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதால் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதும் ஒருங்கிணைப்பதும் DGகளுக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது," என்றார். அவரின் வருகையின் போது, உறுப்பினர்களிடமிருந்து TRFக்கு திரளான பங்களிப்பும் நேர் மறையான அறிகுறியும், 'நட்புக்கு கோட்டையாகவும், சேவைக்கு ஆலயமாகவும்' இந்தியாவின் மூன்றாவது பழைமையான சங்கத்தின் மீது பாராட்டுக்கள் குவிகிறது. TRFன் போலியோ பிளஸ் கமிட்டியிலிருந்து ஒரு போலியோ இல்லா உலகத்துக்

கான சர்வதேச சேவை விருதினை பெற தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு இந்தியர்களில் (உலகளவில் ஏழு ரொட்டேரியன்களில்) இருவர் இந்த சங்கத்தின் முன்னாள் பிரசிடென்ட் களான N K கோபிநாத் மற்றும் S N ஸ்ரீகாந்த். டொராண்டோவில் நடைபெறும் ரோட்டரி மாநாட்டில் விருதினைப் பெறுவார்கள்.

செழிப்பான வரலாறு

முதல் கூட்டம், கன்னிமாரா ஹோட்டலில் மே 10, 1929ல் 30 நிரந்திர உறுப்பினர்களுடன் (27 பிரிட்டிஷ்காரர்கள், 2 சுவிஸ், 1 அமெரிக்கர்) நடைபெற்றது. ஜூலை 19, 1929 அன்று சங்கம் நிறுவப்பட்டது. மெட்ராஸ் போர்ட் டிரஸ்ட்டின் தலைவரான C G ஆர்ம்ஸ்ட்ராங் சங்கத்தின் முதல் தலைவராகவும், முதல் இந்தியராக தொழிலதிபர் ராஜா சர் M A முத்தையா செட்டியார் ஆவார். நீதிக்கட்சியைச் சேர்ந்த மெட்ராஸ் பிரசிடென்சியின் உள்துறை அமைச்சர் சர் முகமது உஸ்மான் தான் 1935-36ல் முதல் தலைவரான இந்தியர்.

இந்தியாவில் ரோட்டரி வளர்ச்சியை ஜேம்ஸ் வீலர் டேவிட்சனின் வருகை தொட்டு முன்னாள் தலைவர் கோபிநாத் நினைவு கூர்ந்தார். கனடா கேல்கரியைச் சேர்ந்த ரோட்டரியின் கமிஷனரான இவர் ஐரோப்பா, ஆசியா மற்றும் தூரக் கிழக்குப் பகுதிகளில் சங்கங்களை உருவாக்கும் பணியில் வந்தார். இந்த கடினமான பணிக்கு டேவிட்சனுக்கு $8,000 பணம் கொடுக்கப்பட்டது. "இருந்தாலும், இரண்டு வருட (1929-30) காலத்தில் ஐரோப்பா, மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் தூரக் கிழக்கு நாடுகளில் 23 சங்கங்களை அமைக்க தன்னுடைய பணத்தில் $250,000 செலவழித்தார்" என்றார். ரோட்டரியின் மார்க்கோ போலோ என அழைக்கப்படும் டேவிட்சன் வகித்த பங்கை இந்தியா விலுள்ள ரொட்டேரியன்கள் எல்லோரா லும் கொண்டாடப்பட வேண்டும். ஏராளமான தடைகளையும் மீறி தென் இந்தியாவில் ரோட்டரியை நிறுவினார். அதாவது "அவர் பல நேரங்களில் மெட்ராஸ் கோடைகால வெயிலால் கடுமையாக பாதிக்கப்பட்டார்." 1920களில் மெட்ராஸ் பிராந்தியத்தின் அமைப்பின் எண்ணத்தை பரப்பிய ஆரம்பகால ரொட்டேரியன் இவர், என நினைவு கூர்ந்தார்.

RC *மெட்ராஸ் தலைவர்* (2019–20) *விஜயபாரதி* $10,000*க்கான காசோலையை* DG *ஸ்ரீனிவாசனிடம் கொடுக்கிறார். சங்கத் தலைவர்* PN*மோகன்,* Rtn *நிகில் ராஜ் அவர்களும் உடன் உள்ளனர்.*

1932ல் மத்திய ஆசிய பிராந்தியத் தில் RIக்கான கவுரவ கமிஷனராக, UPASIயின் வைஸ்-பிரசிடென்ட் சர் ஃபிரிடெரிக் D ஜேம்ஸ் என்பவரை பரிந்துரை செய்தார் டேவிட்சன். அதே ஆண்டில் கல்கத்தாவில் முதல் ரோட்டரி மாநாடு நடத்தப்பட்டது. RCMயின் முதல் உறுப்பினரான சர் ஜேம்ஸ் (1941 ஆம் ஆண்டு வீரப்பெருந்தகை பட்டம் பெற்றவர்), 1933-34ம் ஆண்டில் இந்தியாவைச் சேர்ந்த முதல் RI டைரக்டராகப் பணியாற்றினார். 1936-37ம் ஆண்டில் D 89ல் முதல் கவர்னராகவும் இருந்தார். அப்போது தான் முதல் மாவட்ட மாநாடு மெட்ராலில் நடந்தது. 1938-39ம் ஆண்டில் இரண்டாவது முறையாகவும் அவர் கவர்னர் பதவி வகித்தார்.

சங்கத் தலைவர் P N மோகன், "சேவையில் 90வது ஆண்டு அடியெடுத்து வைப்பதால், நாம் ஒரு மைல்கல் வருடத்தில் இருக்கிறோம். ரோட்டரி போல பெரிய NGOக்கள் மூலமாக சேவை செய்வதற்கு இச்சங்கம் ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்றை கொண்டுள்ளது," என்றார்.

உலகத்தில் 'மிகப்பெரிய போதைமருந்து விழிப் புணர்வு வகுப்பை' நடத்தியதற்காக கின்னஸ் சான்றிதழை சங்கம் பெறும் என்பதை உறுதிசெய்தார். மேலும் இந்த சாதனைக்காக இளைஞர் சேவை தலைவர் M சேஷாசாய்க்கு நன்றியைத் தெரிவித்தார்.

பவுண்டேஷனுக்கு, ரோட்டரி வருடத்தில் (2017-18), $82,000 திரட்டப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள $18,000 தொகையை ஜூன் 30க்குள் சேர்த்து இலக்கை அடையப்போவதாக நம்பிக்கை தெரிவித்தார். போலியோ நிதிக்கு தாராளமாக பங்களிக்க வேண்டும் என உறுப்பினர்களை வலியுறுத்தினார். TRF தலைவர் பால் நெட்ஸெல் அடுத்த மூன்று ஆண்டு களில் $1.5 பில்லியன் நிதிதிரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளார். "School into Smiles" மற்றும் மருத்துவ மையங்கள் போன்ற சில உலகளாவிய மானியத் திட்டப்பணிகளுக்கு விண்ணப்பிக்கப் போகிறோம். எனவே ரோட்டரியை வளர வைக்க தயவுசெய்து பங்களிக்கவும்" என்று உறுப்பினர்களை அறிவுறுத்தினார்.

முன்னதாக, RCM பிரசிடென்ட் - நியமனம் செய்யப்பட டாக்டர் விஜயபாரதி $10,000க்கான காசோலையை DG ஸ்ரீனிவாச னிடம் TRFக்கு வழங்கினார். DG ஸ்ரீனிவாசன், PDGகள் மற்றும் மூத்த ரொட்டேரியன்களின் முன்னிலையில், சங்கத்தின் 90வது வருட சேவையை குறிக்கும் கேக்கை மோகன் வெட்டினார்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

சமூக மற்றும் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும்

MS சுவாமிநாதன்

ரோட்டரி செய்தி குழு

*பேராசிரியர் **M S** சுவாமிநாதன் பட்டமளிப்பு விழாவில் நன்றியுரை ஆற்றுகிறார்.*

சென்னையைச் சேர்ந்த M S சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிறுவனரும் புகழ்பெற்ற விவசாய விஞ்ஞானியுமான பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு குவாலியர், ITM பல்கலைக்கழகம் டாக்டர் ஆஃப் லெட்டர்ஸ் (DLit) பட்டம் அளித்துக் கௌரவித்தது. சென்னையில் உள்ள அறக்கட்டளையில் நடைபெற்ற சிறப்பு பட்டமளிப்பு விழாவில், 'மனித குலத்துக்கான அவரது ஒப்பற்ற பங்களிப்பு'க்காக இது வழங்கப்பட்டது. பேராசிரியர் M S சுவாமிநாதன் அவர்களுக்கு அந்தப் பட்டத்தை குவாலியர் ITM பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் கமல் கண்த் த்விவேதி ஒரு சமஸ்கிருதப் பத்தியை மேற்கோள்காட்டி குறிப்பிடுகிறார், அதன் தமிழ் மொழி பெயர்ப்பு: "மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் தன்னலமற்ற தியாகத்தை விடச் சிறந்த சேவை வேறு எதுவும் இல்லை. இதுவே பேராசிரியர் சுவாமிநாதனின் வாழ்க்கை மற்றும் வேலைக்கான சரியான விளக்கம்."

RC மெட்ராஸ் கிழக்கு சங்கத்தின் கௌரவ உறுப்பினரான வேளாண் விஞ்ஞானி, அவருக்கும், அவரது அறக்கட்டளைக்கும் வழங்கிய கௌரவத்திற்காக பல்கலைக்கழகத்திற்கு நன்றி தெரிவித்ததோடு, நீடித்த நிலையான வேளாண்மையின் மூலம் மட்டுமே நிலையான வளர்ச்சி இலக்கு 2 (சீரோ பசியின்மை)-ஐ அடைய முடியும் என்றார். ITM பல்கலைக்கழகம் 1,000 வேளாண்மைப் பட்டதாரிகளை உருவாக்கியதற்கு வாழ்த்துத் தெரிவித்தார். விவசாயத்தில் உயர் கல்வி, சமூக மற்றும் பாலின சமத்துவத்தின் பரிமாணங்களையும், பொருளாதாரம் மற்றும் நெறிமுறை களில் உள்ள அறிவையும் பாடத்திட்டமாகச் சேர்க்க வேண்டியது முக்கியமானது என்றார்.

புதிய காப்புரிமை தொடர்பாக வலியுறுத்திய அவர், சமத்துவத்தை உறுதிப்படுத்து வதற்காக நிறுவனங்களை அமைக்க வேண்டும் என்றார். சுவிஸ் அரசாங்கத்தைச் சுட்டி காட்டினார், கோல்டன் ரைஸ் வகைக்குக் காப்புரிமையை வாங்கியதோடு இல்லாமல், அதை இலவசமாக அல்லது மிகக் குறைந்த கட்டணம் பெற்றுக்கொண்டு எல்லா வளரும் நாடுகளுக்கும் கிடைக்க வழி செய்தார்கள். இது எல்லோரும் பின்பற்ற வேண்டிய முன்மாதிரி என்று அவர் வலியுறுத்தினார்.

"பல்லுயிர் பாதுகாப்பு என்பது நிலையான விவசாயத்தில் ஒரு முக்கிய படியாகும்," எனப் பேராசிரியர் சுவாமிநாதன் கூறினார். இப்போது கிடைக்கிற ஆயிரக்கணக்கான அரிசி வகைகளின் நுண்ணுயிரிகளை விவசாயிகளுக்கே அர்ப்பணிக்க வேண்டும், ஏனென்றால் அவர்கள் தான் அதை முதல் முதலில் கண்டுபிடித்தார்கள். "பெண்கள்தான் முதல் அரிசி விவசாயிகள்," என்று குறிப்பிட்டார்.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் செயலாளர் டாக்டர் T ராமசாமி, பேராசிரியர் சுவாமிநாதனுக்கு வாழ்த்து தெரிவித்து உரையாற்றிய போது, உண்மைக்கும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கும் இடையேயான தொடர்பு துண்டிக் கப்படாமல் இருக்க விவசாய ஆராய்ச்சிக்கான மறுபரிசீலனைக்கு அழைப்பு விடுத்தார்.■

கிராமத்தைப் பசுமையாக்கி, இடம்பெயர்வை மாற்றுகிறார்கள்

கிரண் ஜெஹரா

மகாராஷ்ட்ராவின் புனே அருகே உள்ள பிங்கோரி கிராம விவசாயிகள், 6 முதல் 8 மாதங்கள் வரை விவசாயம் செய்து, சோளம் மற்றும் கம்பின் விளைச்சலை மட்டுமே நம்பி, மாதம் ரூ.1300 குறைவாகச் சம்பாதித்த காலம் போய்விட்டது. வேறு வழி ஏதும் இல்லாததால் அவர்கள் தங்களது குடும்பத்தைக் காப்பாற்ற சாதாரண வேலைகளைச் செய்ய நகரங்களுக்கு இடம் பெயர்ந்தனர். "மற்ற விவசாயிகள் தங்கள் நிலங்களை விட்டுப் போவதைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருந்தது" என்கிறார் விவசாயி கணேஷ். அவருக்கு சொந்தமாக பிங்கோரியில் 1 .5 ஏக்கர் விவசாய நிலம் இருக்கிறது. ரோட்டரி சங்கம் (RC புனே ஹில்ஸ், D 3131) உதவ ஆரம்பித்த சில மாதத்திற்குள் அவரது வருமானம் ரூ.7000மாக உயர்ந்திருக்கிறது. "எனது கிராமத்தில் வசதியாக வாழ இது போதுமானது" என்றார். முன்பு மழைக்காலம் தவறியதாலும் தண்ணீர் பஞ்சத்தாலும் சிறுதானியங்களை மட்டும் விளைவித்த காலம் போய் இப்போது நான்கு வகையான பயிர்களை அவரது நிலத்தில் விளைவிக்க முடிகிறது.

இளைஞர்கள் புனே, மும்பை போன்ற பெரிய நகரங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டனர் மற்றும் "இங்கு RC புனே ஹில்சைடு சங்கத்தைச் சேர்ந்த பொராட்டே மேடம் மற்றும் பாபா ஷிண்டே எங்களைப் பார்க்க வந்த போது, இங்கு கிராமத்திலேயே தங்க முடிவெடுத்த முதியவர்கள் மட்டுமே இருந்தோம்" என்று கணேஷ் கூறினார். ஆரம்பத்தில் வறண்டக் கிணற்றை தூர் வாரவும், சேமிப்புக் குளங்கள் அமைக்கவும் அவர்களின் நேரத்தையும் பணத்தையும் செலவழிக்கத் தயங்கியதாகச் சொல்லிவிட்டு, 'எங்கள் கிராமத்தை நன்றாக உருவாக்க அவர்களின் நோக்கத்தில் எப்படி ஆர்வமாக இருந்தார்கள். அதனால் நாங்கள் எங்களது பணத்தையும் உழைப்பையும் இந்தத் திட்டத்தில் முதலீடு செய்ய முடிவு செய்தோம்" என்று கூறினார்.

மருத்துவராக இருக்கும் மீனாட்சி பொராட்டே D 3131ல் 16 தண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டப்பணிகளுக்கு நிதியுதவி செய்துள்ளார், "நான் பார்வையிட்ட ஒரு சில கிராமங்களின் ஊராட்சியின் அணுகுமுறை மிகவும் அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக இருந்தது. 'இதனால் எனக்கு என்ன பயன்?' என்று அவர்கள் வெளிப்படையாகக் கேட்பார்கள். ஏனென்றால், ரொட்டேரியன்கள் தங்கள் கிராமத்தில் இருந்து பணத்தை பெறுவதற்காகவே இந்தத் திட்டப்பணிகளைச் செய்வதாக அவர்கள் சந்தேகிக்கிறார்கள்" என்று கூறினார். ஆனால் பிங்கோரியில், "அவர்கள் தயங்கினாலும் கூட, கிராமவாசிகள் முன்வந்து, நாங்கள் அவர்களுக்கு உதவ எங்களுடன் ஒத்துழைத்தார்கள்."

பாபா ஷிண்டே, நீர் தேங்கும் குளங்கள் மண் மூடி ஆழமில்லாமலும், கிராமத்தின் வழியே செல்லும் ஒரு கால்வாய் குச்சிகளால் அடைத்தும், கால்வாய்களில் சேறு அடைத்தும் இருந்ததைக் கவனித்தார். குளங்களை ஆழமாக்கவும் தூர்வாரிச் சுத்தம் செய்யவும் அதிக நிதிகளை ஒதுக்க அரசாங்க அதிகாரிகளை வலியுறுத்தினர். புனேயைச் சேர்ந்த ஒரு NGO தக்துஷேத் ஹல்வை கணபதி அறக்கட்டளையின் உதவியுடன் ஒரு குளம் தூர்வாரப்பட்டதோடு, 'மழை பெய்யும் என்ற நம்பிக்கையில்' கிராமவாசிகள் தாங்களாகவே தரிசு நிலத்தை சுத்தப்படுத்தி, குளங்களில் தண்ணீரைத் தேக்குவதற்காக, கற்களை கொண்டு தற்காலிக அணைக்கட்டுகளை அமைத்தனர் என்று கணேஷ் கூறுகிறார்.

அமெரிக்காவில் உள்ள மஸ்கேடைன் ரோட்டரி சங்கம், D 3131 ஐச் சேர்ந்த ஆறு ரோட்டரி சங்கங்கள் மற்றும் TRF இணைந்த, ஒரு உலகளாவிய மானிய மூலம் மீனாட்சி 60 இலட்ச ரூபாய் நிதி திரட்டினார். விஷேசமான பாலிமர் பேப்பர் கொண்டு பூசப்பட்ட, பாதுகாப்புக்காக

காம்பவுண்ட் சுவர்களுடன், இரண்டு சேமிப்புக் குளங்களும் உருவாக்கப்பட்டன. பெரிய சேமிப்புக் குளத்தின் கொள்ளளவு 37.5 மில்லியன் லிட்டர் மற்றும் சிறியதில் 35 மில்லியன் லிட்டர்களை சேமிக்க முடியும். நீர்ப்பாசனத்தை அதிகரிக்க நிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியான பாத்திகள் தோண்டப்பட்டன. பம்புகள் நிறுவப்பட்டு, குழாய்கள் அமைக்கப்பட்டு, விவசாய நிலங்களுக்கு சொட்டு நீர்ப்பாசன குழாய்கள் வழங்கப்பட்டது. நீர் சேமிப்பைப் பற்றி கருத்து தெரிவிக்கையில், நீண்ட நேரம் மெதுவாக செயல்படும் இந்த நீர்ப்பாசன முறையால் நீரின் பயன்பாடு 60% குறைக்கிறது. நேரடியாக தாவரப்பகுதிக்கு மட்டுமே நீர் செலுத்தப்படுவதால், களை குறைவாக உருவாகிறது என்று கூறுகிறார்.

புதுமையான விவசாயம்:

இஸ்ரேல் நாடு தான் இந்தவகை வேலைகளுக்கு, எப்பொழுதும் ஒரு முன் மாதிரியாக இருக்கிறது. "இயற்கையாகவே இஸ்ரேலின் நிலப்பரப்பு விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லை, இருந்தாலும்கூட, அவர்கள் தான் உலகில் உணவு பொருட்களை அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள். இது எப்படி சாத்தியம் என்று நாங்கள் வியந்தோம், சரியான விவசாய தொழில்நுட்பத்தை மேற்கொண்டால் நாமும் அதே போல் செய்ய முடியும் என்பதை உணர்ந்தோம்," என்று அவர் மேலும் கூறினார். பாபா ஷிண்டேயின் உதவியுடன், விவசாயிகள், மண்ணின் ஊட்டச்சத்து மேலாண்மை, வெப்ப வலைகளின் உபயோகம், தாவரங்களைக் கிளைப்படுத்துதல் மற்றும் சேர்த்தல், பயிர் முறைகள் மற்றும் சுழற்சி ஆகியவற்றைக் கற்றார்கள்.

"ஒரு காலத்தில் தரிசாக இருந்த நிலம், இப்போது 3,500 சீத்தாப்பழங்கள் மரங்களில் விளைவிக்கிறது" என்றார். நீர்ப்பாசனம், குழாய்களின் வழியாக நிலங்களுக்கு பிரிக்கப்படவில்லை. "மாறாக, சொட்டு நீர்ப்பாசன குழாயானது குளங்களிலிருந்து நேரடியாக அந்தந்த நிலங்களுக்கு செல்கிறது. இதன் மூலம் வேளாண்மைக்கும், குடிநீருக்குமான நீர் ஆதாரம் தனித்தனியாகவே உள்ளது" என்கிறார். ஒவ்வொரு விவசாயியும், வெண்டைக்காய் அல்லது கொத்தவரங்காய் போன்ற பல்வேறு விதமான பயிர்களை தங்களது நிலத்தில் விளைவிக்கிறார்கள். இதன் விளைவாக விளைச்சலுக்கு 22 முதல் 24 வகையான காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இயற்கை வேளாண் விளைபொருட்கள்

காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள் இயற்கை வேளாண் முறையில் உற்பத்தி செய்தாலும், விவசாயிகள் குறைந்த விலையே பெற்று வந்தனர். "இடைத் தரகர்கள் ஒரு கிலோ காய்கறிக்கு எங்களுக்கு 2 ரூபாயைக் கொடுத்து விட்டு, அவர்கள் அதனை கிலோ ரூ.40க்கு விற்கிறார்கள், ஆனால் எங்கள் வருமானம் அப்படியே தான் இருந்தது" என்கிறார் ஒரு விவசாயி. ஆனால் விவசாயி கள் புனேயில் உள்ள ஒரு பெரிய குடியிருப்பில் வசிப்பவர்களை தங்கள் நிலங்களில் ஒரு நாள் பார்வையிட அவர்களை அழைக்க முடிவு செய்தனர், அதன்பின்பு சூழ்நிலை மாறியது. அவர்கள் நிலத்தைப் பார்வையிட்ட பிறகு, "எங்களுக்குள் ஒரு வாட்ஸ்அப் குழுவை உருவாக்கி, எங்களிடம் உள்ள காய்கறிகளைப் பற்றி குடியிருப்பு வாசிகளுக்கு தகவல் தெரிவிக்கச் சொன்னார்கள், அத்துடன் அவர்கள் வாட்ஸ்அப் மூலமாக எங்களுக்கு ஆர்டர் கொடுக்க ஆரம்பித்தார்கள்."

இப்படியே செய்தி மெதுவாக பரவி, அதன் மூலம் விவசாயிகள் மொத்தமாக விநியோகிக்க ஆரம்பித்தனர், கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய்க்கு பதிலாக விவசாயிகளுக்கு காய்கறிகளுக்கான முழு விலையும் கிடைத்தது." தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கான போக்குவரத்து செலவையும் அவர்கள் பகிர்ந்துகொண்டனர். இரண்டாவது அறுவடை முடிந்தபின், விவசாயிகள் பொருளாதார ரீதியாக பயனடைந்தனர் மற்றும் கால்நடைகளில் முதலீடு செய்ய முடிவு செய்தனர். கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் கால்நடைகளை மாறி மாறிப் பார்த்துக் கொள்ள முடிவு செய்தனர். அதிக விளைச்சல் தரும் தக்காளி அறுவடை செய்யப்பட்டபோது, கிராமத்தில் உள்ள பெண்கள் கெட்ச்அப் செய்யும் பயிற்சி மேற்கொண்டனர். பெண்கள் தண்ணீர் தொட்டியிலிருந்து குடிநீரை கொண்டுவர நெடுஞ்சாலைக்கு ஆறு கிலோமீட்டர் வரை மலையேற வேண்டிய அவசியம் இப்போது இல்லை, ஏனென்றால் அவர்களுக்கு இங்கேயே போதிய குடிநீர் கிடைக்கிறது. கிராமத்து பள்ளியில் இப்போது சொந்தமாக நீர்த் தொட்டி உள்ளது மற்றும் குழந்தைகள் கழிவறைகளைச் சுத்தம் செய்வதற்கும் சுத்தமான குடிநீரும் கிடைக்கிறது. நீர்சேகரிப்பு இந்த கிராமத்திற்கு பாராட்டுக்களைப் பெற்றுத் தந்ததோடு, முதலமைச்சரும் இங்கு வந்து பார்வையிட்டார்.

ஆனால் கொண்டாட்டத்திற்கான மிகப்பெரிய காரணம் என்னவென்றால், "இப்பொழுது எங்கள் இளைஞர்கள் மீண்டும் கிராமத்துக்கு திரும்புகிறார்கள், ஏனென்றால் இப்போது அவர்களுக்கு இங்கேயே நல்ல வருமானம் கிடைக்கிறது. ரோட்டரியில்லாமல் நடந்திருக்காது" என்றார் கணேஷ்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

சமூக விருதுகளை ரோட்டரி கல்கத்தா வழங்கியது

ரோட்டரி செய்திக் குழு

இந்தியாவின் மிகப் பழமையான ரோட்டரி சங்கமான RC கல்கத்தா D 3291, தனது வருடாந்திர அறக்கட்டளை விருதுகளை, மாற்றுத்திறனாளிகள், மரபியல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் அல்லது நலிவுற்றவர்களுக்கு பணியாற்றிய NGOகள் உட்பட 100க்கும் மேற்பட்டோருக்கு வழங்கியது. விருது பெற்ற ஒவ்வொருவரையும் ரொட்டேரியன்கள் உற்சாகப்படுத்தினர்.

RC கல்கத்தா பிரசிடென்ட் சாமென் ரே தனது அறிமுக உரையில், 1990ம் ஆண்டில் PP கோபிந்த லால் சரோகி வழங்கிய ரூ.1 லட்சம் தொகையில் அறக்கட்டளை விருதுகள் ஆரம்பித்ததையும், கடந்து வந்த பாதையையும் விளக்கினார். 2018ம் ஆண்டு வரை சேமிப்பு நிதி ரூ.2.01 கோடியாக உயர்ந்துள்ளது, அனைத்து ரொட்டேரியன்களும் தாராளமாக நிதியளித்தால், அடுத்த வருடம் சங்கத்தின் நூற்றாண்டு இலக்கான ரூ.2.5 கோடியை எட்ட முடியும் என்று ரே கோரிக்கை விடுத்துள்ளார். சிறப்பு விருந்தினரான முன்னாள் கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி ரோனோஜித் குமார் மித்ரா, 'அதிகாரப்பூர்வ தலைமை அதிகாரியாக' இருந்து விண்ணப்பித்தவர்களின் தகுதியறிதல், தேர்வு செய்யப்பட்ட முறையை விளக்கினார். விழாவில் பார்வை குன்றிய மாணவர்களுக்காக புதிய அறக்கட்டளையை உருவாக்க ரூ.2 லட்சத்தை நன்கொடையாக வழங்கினார்.

சங்க நல்வாழ்வு அறக்கட்டளை சேர்மன் நிலிமா ஜோஷி இந்த அறக்கட்டளைத் திட்டங்கள் நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் என்று கூறினார். உன்னதமான நோக்கத்திற்கு நன்கொடையளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கையில், "பழமையைப் பாதுகாக்கவும், நிகழ்காலத்தை பெருமைப்படுத்தவும் நமது சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்குமான முயற்சி தான் விருது வழங்கும் நிகழ்ச்சி" என்றார்.

கலகத்தா ரோட்டரி சங்கத்தலைவர் சாமென் ரே மற்றும் டெக்னோ இந்தியா குழுமம் MD, சத்யம் ராய் சவுத்ரி ஒரு குழந்தைக்கு சான்றிதழ் வழங்குகின்றனர்.

முக்கிய விருந்தினர் மித்ராவும், கவுரவ விருந்தினரான டெக்னோ இந்தியா குழுமத்தின் MD, சத்யம் ராய்சவுத்ரியும் பயனாளர்களுக்கு சான்றிதழ்களுடன் விருதுகளை வழங்கினர். முக்கியஸ்தர்களுடன் இணைந்து DG ப்ரோஜோ கோபால் குந்து விருதுகளை வழங்கினார்.

"ஒரு உயிர்பிழைப்பதற்கும் சிறந்த வாழ்க்கையை அமைக்கவும் தைரியமாகப் போராடி விருது பெற்றவர்களின் முகங்களில் சந்தோஷம், சாதித்த உணர்வு தெரிகிறது. விருது வழங்குவதற்கு சேர்த்த தொகையில் சுமார் ரூ.15 லட்சம் செலவிடப்பட்டுள்ளது" என்று சங்கப் பொருளாளர் அமித் கோஷ் கூறினார்.

ராய்சவுத்தரி இச்சங்கத்தின் பல்வேறு சமூக திட்டப்பணிகளுக்கு உதவி செய்வதாக உறுதியளித்தார், அத்துடன் 'சிஸ்டர் நிவேதிதா ஸ்காலர்ஷிப்' எனப் பெயரிடப்பட்ட புதிய அறக்கட்டளைக்கு ரூ.5 லட்சம் அளித்து தொடங்கிவைத்தார். தனது முடிவுரையில், DG குந்து நல்வாழ்வு அறக்கட்டளையின் நன்கொடைச் செயல்பாட்டைப் பாராட்டிப் பேசும்போது, 'சமூக சேவைக்கான' ஒரு அடையாளமாக இந்தத் துவக்கவிழா உள்ளதாகக் குறிப்பிட்டார். ■

தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

- முக்கியமான தகவல்கள், உடனுக்குடன் கிடைக்கும் வகையில் எல்லா ரோட்டரி சங்கங்கள், மாவட்ட அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் தங்களது சமீபத்திய மின்னஞ்சல்கள் விவரங்களை My Rotary மூலம் தெரிவிக்க வேண்டும்.
- ரோட்டரி சங்கங்கள், மாவட்ட அமைப்புகளின் நிர்வாகிகள் https://my.rotary.org/en/manage/club&district&administration/club&administration என்ற இணைய தளத்தில் தங்களைப் பதிவிடவேண்டும். இதன் மூலம் ரோட்டரி விண்ணப்பங்கள், படிவங்கள், ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ரோட்டரி சங்கங்கள், மாவட்ட ரோட்டரி களின் பணிகள், விவரங்களைப் புதுப்பித்தல், நிர்வாகிகள், உறுப்பினர்களின் பெயர் விவரங்களைப் பதிவிடுவது, செய்திகளைப் பதிவேற்றுவது, நிலுவைகள் குறித்த விவரங்கள், நன்கொடை விவரங்கள், சங்க நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பதிவேற்றம் செய்வதற்காக இணையதளத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

- **செய்தி மடல்**

  ரோட்டரி உறுப்பினர்களுக்கு Membership Minute என்ற செய்தி மடல் மின்னஞ்ல் வழியாக அனுப்பப்படுகிறது. இதில், ஆதாரங்கள் குறித்த விவரங்கள், மேம்பாடு குறித்த உறுப்பினர்களின் யோசனைகள் உள்ளிட்டவை இடம்பெறுகின்றன. மேலும் இடம்பெறும் அம்சங்கள்:

  - ரோட்டரி உறுப்பினர்கள் குறித்த அண்மைக்கால ஆய்வு
  - திறமையான ரோட்டரி உறுப்பினர்களை கண்டறிந்து சேர்ப்பது என்பது குறித்த யோசனைகள்..
  - புதிய உறுப்பினர்களுக்கான புத்தாக்கப் பயிற்சித் திட்டங் களை நடத்துவது குறித்தும் அவற்றை மேம்படுத்துவது குறித்தும் யோசனைகள்
  - உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கான யோசனைக் குறிப்புகள்.

  இந்தச் செய்தி மடலுக்கு மின்னஞ்சல் வழியாகவும் சந்தா செலுத்தலாம். அதற்கான இணைய தளம் : https://my.rotary.org/en/newsfeatures/newsletters

- ரோட்டரி ஃபவுண்டேஷன் (இந்தியா) தகவல் பதிவிடுவதற்குக் காலக்கெடு:

  ரோட்டரி சங்கங்களும் மாவட்ட அமைப்புகளும் தங்களது இடைக்கால அறிக்கையையும் இறுதி அறிக்கையையும் இணையம் வழியாகப் பதிவேற்றுவதாகத் தெரிகிறது. ஆனால், உரிய ஆவணங்கள் இணைக்கப்படுவதில்லை. அறிக்கைகளை ஆய்வு செய்யவும் ஏற்கவும் ரோட்டரி சங்கங்களும், மாவட்ட அமைப்புகளும் உரிய ஆவணங்களுடன் இணைத்து ஃபவுண்டேஷனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

  எல்லா மானிய உதவிகளும் தி ரோட்டரி ஃபவுண்டேஷன் (இந்தியா) அமைப்பு மூலமாக வழங்கப்படுகின்றன. அதற்கு மார்ச் 31ம் தேதி வரையிலான நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்காதவர்கள் உடனடியாக தனது அறிக்கையை சமர்பிக்க வேண்டும். இறுதி அறிக்கையை சம்பந்தப்பட்ட திட்டம் நிறைவேற்றப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் அனுப்பிவிட வேண்டும்.

ஆவணங்கள்	இடைக்கால அறிக்கை	இறுதி அறிக்கை
இணையம் வழியாக அனுப்புதல்	ஆம்	ஆம்
தேவையான அனைத்து மூல தாள்வடிவ பிரதிகள்		
மூலப் பயன்பாட்டுச் சான்றிதழ் வரப்பெற்றது/செலுத்துதல் அறிக்கை	ஆம்	ஆம்
வங்கியின் மூல அறிக்கை அல்லது சான்றளிக்கப்பட்ட உண்மை நகல்)	ஆம்	ஆம்
பில்கள்/ விலைப் பட்டியல்/ரசீதுகள் (மூலம்)	பொருந்தாது	ஆம்
எடுத்துக் கொண்ட பணி (பில்களின் பிரதி சமர்ப்பிக்கப்பட்டிரு'நதால்)	பொருந்தாது	ஆம்
பலனாளிகள் குறித்த தகவல்	பொருந்தாது	ஆம்
திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை	பொருந்தாது	ஆம்

- **சமுதாய மதிப்பீடுகள் வெற்றிக்கு வழிகாட்டும்**

பல்வேறு சமூக, மனிதாபிமானப் பணிகளுக்காகவும் தொழில் பயிற்சி அளிப்பதற்காகவும் உலகளாவிய மானிய உதவி கோரி விண்ணப்பிக்கும் ரோட்டரி சங்கங்கள், ரோட்டரி மாவட்ட அமைப்புகள் முதலில் ஜூலை 1ம் தேதி முதல் சமுதாயத்தில் அதற்கான மதிப்பீட்டை மேற்கொள்ளவேண்டும், அத்துடன் இதுவரை கிடைத்த உதவிகளால் பலனாளிகள் பெற்ற நன்மை குறித்த விவரங்களையும் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

பெர்ஹாம்பூரில் ரோட்டரி தினத்தை முன்னிட்டு மணலில் கண் சிற்பம்

ரோட்டரி செய்தி குழு

பிப்ரவரி 23 ஆம் தேதி, ரோட்டரி அமைப்பின் 113 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, D 3262, பெர்ஹம்பூர் ரோட்டரி சங்கம் மணல் சிற்பத்தில், மிகப் பெரிய கண் செதுக்கி, இந்திய சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றது. உலக போலியோ தினத்தன்று 'மிகப் பெரிய கால் சிற்பம் செதுக்கியது' இச்சங்கத்தின் முந்தைய சாதனையாகும்.

''நங்கள் எப்போழுதும் ரோட்டரியின் உருவப் படத்தை, பல விதமான பின்னணியில் பிரகாசமாக வெளிப்படுத்திக் காட்டுவோம். இந்த முறை, ரோட்டரியின் பார்வையில் உலகம் என்ற தலைப்பில் இந்த மிகப் பெரிய மணல் சிற்பத்தால் மனிதக் கண்ணை செதுக்க முடிவு செய்தோம்,'' என்று திட்ட ஒருங்கி ணைப்பாளர் ரொட்டேரியன் பிஜய் பகாரியா விவரித்தார்.

முன்னேற்பாட்டு வேலை

90 முதல் 100 அடி நீளம் உள்ள ஒரு சிற்பம் செதுக்க, சுமார் 120 முதல் 150 டன் மணலை சங்கம் சேகரிக்க வேண்டியிருந்தது. பின்னர் சங்கம் கண் சிற்பத்தை செதுக்க மணல் சிற்பக் கலைஞர் சுபோல் மோஹரானாவை தேர்வு செய்தது. அவரது மூன்று பேர் குழுவுடன் சேர்ந்து, இந்த மாபெரும் மனித கண்ணை உருவாக்க ஒப்புக்கொண்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்கு லாரிகள் மூலம் மணல் மற்றும் இதர பொருட்களைக் கொண்டு வருவது பிப்ரவரி 20ம் தேதி முதல் தொடங்கப்பட்டது. அடுத்தபடியாக, சிற்பம் செதுக்க வகைசெய்யும் பொருட்டு, தண்ணீர் ஊற்றி மணல் முற்றிலுமாக ஈரப்படுத்தப்பட்டது. ''மணலை சேகரிக்கவும் தண்ணீர் ஊற்றவும் ஆட்களை வேலைக்கு அமர்த்தி இருந்தோம். பிப்ரவரி 22 அன்று, மோஹரானா மற்றும் அவரது குழுவினர் சிற்பத்தை செதுக்க ஆரம்பித்தனர். மணல் சிற்பத்தை செதுக்கி முடிப்பதற்குள் அன்றைய இரவு முழுமையாக கடந்து விட்டது,'' என்று பகாரியா விவரித்தார். ரோட்டரி மூலம் இந்த உலகைப் பாருங்கள் என்ற தலைப்பிலான இந்த மாபெரும் மணல் கண் சிற்பம், 100 டன் எடையுடன் 100 அடி நீளம் மற்றும் 20 அடி அகலத்தில், கருவிழியில் ரோட்டரி லோகோவைக் கொண்டு வடிவமைக்கப்பட்டு இருந்தது.

உலக சமாதானத்தை வலியுறுத்த செதுக்க பட்ட மணல் சிற்பத்துக்கு அருகில், உலக ரோட்டரி தினத்தைக் குறிக்கும் அடையாளமாக, மரம் வளர்ப்போம் மற்றும் இரத்ததானம் என்ற இரண்டு சிற்பங்கள் சேர்க்கப் பட்டு அந்த அற்புதமான கட்ட மைப்பு நிறைவு செய்யப்பட்டி ருந்தது. பெர்ஹாம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ரமேஷ் சந்திர சௌபட் நாயக், PDG நாராயண் மிஷ்ரா, சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகத் துறையைச் சேர்த்தவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புச் சேர்த்தார்கள். அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் மணல் சிற்பத்தை பார்வையிட வந்தது, மிகப் பெரிய மக்கள் தொடர்பு நிகழ்வாக்கியது. இந்தத் தருணத்தில் உரையாற்றிய சங்கத் தலைவர் தபஸ் பானிக்ரஹி, உலக சமாதானத்திற்காக ரோட்டரியின் பங்களிப்பு பற்றியும் சங்கத்தின் செயல்பாடு களைப் பற்றியும் விளக்கினார். இந்த மாபெரும் மணல் கண், விளக்கு மற்றும் வெளிச்சத்தால் அலங்கரிக்கப்பட்டதால், இரவு நேரத்தில் கூட தொலைவில் இருந்தே மக்கள் சிற்பத்தையும் ரோட்டரி லோகோவையும் பார்க்க முடிந்ததால், இது மேலும் இந்த சங்கத்தின் மதிப்பைக் கூட்டியது. ■

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்

கிரண் ஜெஹ்ரா

ஹிமாசலப் பிரதேசத்தில் பிளாஸ்டிக், தெர்மோகோல் பொருட்களுக்கு முதலமைச்சர் ஜெய்ராம் தாக்கூர் தடை விதித்துள்ளார். ஆனால், அவரது உத்தரவுக்கு முன்பாகவே RC மண்டி (D 3070) கர்வாஸ்ரா என்ற கிராமத்தில் இது குறித்து பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியது. அத்துடன், இலைகள் போன்ற மக்கும் பொருட்களால் தட்டுகள் தயாரிக்கும் பிரிவை அந்தக் கிராமத்தில் அமைத்துத் தந்துள்ளது ரோட்டரி சங்கம். அதில் 20 பெண்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது.

இதற்கு முன் 2016ம் ஆண்டில் RC மண்டி மருத்துவ முகாம்களை நடத்தியிருக்கிறது. குடிநீர் சுத்திகரிப்பு சாதனங்களை (Water Filters) வழங்கி, குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது குறித்து பிரசாரமும், தூய்மைப் பணியும் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கிராமப் பெண்கள் முன்பே இலைகளைத் தைத்து சாப்பாட்டுக்காக விற்று வந்தனர். ஆனால், அவை ஓரிரு நாட்களில் வீணாகிவிடுகின்றன. அப்படியே அதை திடமாக்கச் செய்தாலோ நேரமும் உழைப்பும் பணமும்தான் விரயமாகின்றன. அதனால், அவர்களுக்குப் போதிய வருவாயும் கிடைப்பதில்லை. எங்களை அணுகிய பிறகு, நாங்களும் பல முயற்சிகள் எடுத்தோம் என்று ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் சுரேந்தர் மோகன் கூறினார்.

இலைகளைக் கொண்டு தட்டு தயாரிப்பு இயந்திரம் குறித்து தேடலில். இறுதியில் ஹைதராபாத் தேசிய ஊரக மேம்பாட்டு நிறுவனம் (National Institute of Rural Development) சென்று, அங்கே வடிவமைத்த இயந்திரத்தைப் பார்த்தேன் என்றார்.

ரோட்டரி ஃபவுண்டேஷன் அளித்த நிதி மூலம் இயந்திரத்தைத் வரவைத்து ஏப்ரலில் இலைத் தட்டு உற்பத்தி ஆலையை தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் சிரமப்பட்ட பெண்கள் பத்மா அக்கா உதவியுடன் மூன்று பெண்கள் நாளொன்றுக்கு எட்டுமணி நேரம் வேலை செய்து, ஆயிரம் தட்டுகளைத் தயாரிக்கிறோம் என்று கவிதா என்ற பெண் கூறினார்.

ரோட்டரி சங்கத்தின் சமுதாயப் பிரிவு (Rotary Community Corps) செயலர் பத்மா, இன்றைக்கு எங்கள் குழந்தைகளைத் தன்னம்பிக்கையோடு பள்ளிக் கூடத்துக்கு அனுப்புகிறோம். என்றார்.

இலைத்தட்டுகளைத் தயாரிப்பதற்கு தையல் இலைகளைச் சேர்த்து குச்சியால் தைக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு இயந்திரம் 12 அங்குலமுள்ள இலைத் தட்டையும் 6 அங்குலம் உள்ள தொன்னையையும் (கிண்ணம் போன்றது) தயாரிக்க முடியும். முன்பெல்லாம் 12 மணி நேரம் உழைத்தால், 900 தையல் இலைத் தட்டுகள்தான் தயாரிக்க முடியும். ஓர் இலைக்கு ஒரு ரூபாய்தான் கிடைக்கும். இப்போது இயந்திரம் மூலம் 8 மணி நேரத்தில் ஆயிரம் இலைத் தட்டுகளைத் தயாரிக்க முடிகிறது. அவற்றை மொத்தமாக ரூ. 4000 என விற்க முடிகிறது. உற்பத்திச் செலவோ ரூ.2000 தான்!

தட்டுகளும், தொன்னைகளும் திருமணம், ஆலயத் திருவிழாக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. பிளாஸ்டிக் பிளேட்களுக்குத் தடை வந்துவிட்டதால், இலைத் தட்டுகளுக்கு ஆர்டர்கள் குவிகின்றன என்றார் மோகன்.

இந்த ஆண்டு நிறைய ஆர்டர்கள் கிடைத்துவிட்டது. கூடுதலாக உற்பத்தி செய்தால், ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமா என்று கூடப் பார்க்கலாம் என்றார்.

இலைத் தட்டுகளில் உணவைச் சாப்பிடுவது உடல்நலத்துக்கும் பலன் தருவதாக ராஜஸ்தான் பன்ஸ்தாலி பல்கலைக்கழகத்தின் (Bansthali University) மருந்தியல் துறை (Department of Pharmacy) நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது.

தட்டுகளில் ரசாயனம் கலக்கப் படுவதில்லை. 28 நாட்களிலேயே மண்ணோடு மக்கிவிடுகின்றன. சுற்றுச்சூழலுக்குக் கேடுதராத இலைகளுக்கு மவுசு உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது. மேலும் நல்ல வர்த்தகம் செய்ய முடியும் என்றார் மோகன்.■

ஜலந்தர் பள்ளிகளை ஜொலிக்க வைத்த ரோட்டரி மாணியம்

வி. முத்துக்குமரன்

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் ஒரு பள்ளியை பார்க்க சென்ற போது அதிர்ச்சியடைந்தனர் ஜலந்தர் மேற்கு ரோட்டரி சங்கத்தினர் (D 3070). ஆமாம், ரோட்டரி முன்னாள் மாவட்ட ஆளுநர் டாக்டர் சுரேந்தர் பால் சிங் குரோவர் தலைமையிலான குழுவினர் மாணவர்களின் நிலைமையைப் பார்த்ததும் பதறியேபோய்விட்டனர்.

காரணம், சில சிறுவர்கள் கோணிப் பையை விரித்துப் போட்டு அமர்ந்திருந்தனர். சில குழந்தைகள் பிஞ்சு முதுகை வளைத்து எழுதிக் கொண்டிருந்தனர். போதிய கழிப்பறை வசதி இல்லாத காரணத்தால் பல சிறுமிகள் பள்ளிக்கு வருவதை நிறுத்திவிட்டனர். ஆசிரியர்களோ இருக்கிற வசதிகளை வைத்துத் தான் பாடத்தையே நடத்த முடிகிறது. இப்படி பரிதாபமான நிலையில் உள்ளது பள்ளிக்கூடம்.

இதைப் போன்ற நிலைமை பெரும்பாலான பள்ளிகளில் இருப்பதை குரோவர் தலைமையிலான குழு புரிந்துகொண்டது. உடனே, அக்குழுவினர் ஜலந்தரில் பரிதாபமாகக் காட்சி தந்த காந்தி முகாம் அரசு சீனியர் செகண்டரி பள்ளி, சோதல் நகரில் உள்ள SBT மாடல் பள்ளி, கன்னாவில் உள்ள ஹிந்தி புத்ரி சீனியர் செகண்டரி பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளையும் முற்றிலுமாக, நல்ல

இடதுபுறத்திலிருந்து: *பூஜா கபூர், கஈஎண் குககு குரோவர், குல்தீப் சிங், ஜோகிந்தர் சிங், சங்கத் தலைவர் தல்ஜித் சிங் விர்தி ஹிந்தி புத்ரி பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன்.*

வசதிகளைக் கொண்டதாக மாற்றுவது என ரோட்டரி குழுவினர் முடிவு செய்தனர்.

மிகப் பெரிய சவால் தான். ஆனால் கனடாவின் நோர்ஃபோக்ஸ் சன்ரைஸ் ரோட்டரி சங்கத்துடன் (D 7090) இணைந்து உலகளாவிய நிதியாக 10,000 டாலர் பெற்று அத்துடன் ரோட்டரி சங்கமும் கிட்டதட்ட 11,875 டாலர் திரட்டி இவற்றுடன், இரு அமைப்புகளும் தலா 4,000 டாலர் தங்களது பங்களிப்பாகச் செலுத்தின. TRF 18,500 டாலர் நிதி உதவி அளித்தது.

இந்த நிதியைக் கொண்டு மூன்று பள்ளிகளிலும் கட்டடப் பணிகள் கழிவறைகள், சுவருக்கு வெள்ளை அடிப்பது என பல வேலைகளை மேற்கொண்டனர். மாணவர்கள் வசதியாக அமர்ந்து எழுதவும் படிக்கவும் பெஞ்ச்சுகள், டெஸ்குகள் அளிக்கப்பட்டன. காந்தி முகாம் பள்ளியின் முதல்வர் குமுத் குமாரி சர்மா ரோட்டரி சங்கத்தினருக்கும் தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். பள்ளியின் வடிவமைப்பையே மாற்றி, வசதிகளை ஏற்படுத்திய தால், மாணவர்கள், ஆசிரியர்களுக்கு தெம்பும் உற்சாகமும் ஏற்படும். 3,000 மாணவர்களும் மகிழ்ச்சிப் பள்ளிகளின் (Happy Schools) பலன்களைப் பெறுகின்றனர்.

இத்துடன் நிற்காமல் ரோட்டரி சங்கத்தினர் அப்பள்ளிகளில் பணியாற்றும் 50 ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தனர். குருநானக் தேவ் பல்கலைக்கழகக் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் J.K.குலாட்டி தலைமையில் நான்கு பேராசிரியர்கள் அவர்களது திட்டத்தின் கீழ் இப்பணியை மேற்கொண்டனர்.

குலாட்டி குழுவினர் அளித்த பயிற்சி ஆசிரியர்களிடம் பெரிய பயனுள்ள விளைவை ஏற்படுத்தியுள்ளது. வகுப்பறையில் எப்படி நடந்துகொள்வது, மாணவர்களின் உளநிலையைப் புரிந்து கொண்டு எப்படிச் செயல்படுவது என்பதில் பயிற்சி பெற்றனர். இது நீண்டகாலப் பயனைத் தரும் என்றார் ஓர் ஆசிரியர் ரேஷம் கவுர்.■

கத்வாவில் தண்ணீரும் துப்புரவும்

ரோட்டரி செய்தி குழு

பொதுமக்கள் பயணத்தின் போது தாகத்தைத் தணிக்க, RC கத்வா, D 3240 ரொட்டேரியன்கள் பொது இடங்களில் குளிர்விக்கும் அமைப்புடன் கூடிய குடிநீர் வசதியை அமைத்துள்ளனர். முறைப்படி ஒரு தண்ணீர் பந்தலைத் தொடங்கி வைத்த PDG சமீர் சவுத்ரி, இந்தத் திட்டப்பணி இந்த மார்க்கெட் பகுதிகளுக்கு வரும் ஆயிரக்கணக்கான பொது

மக்களுக்கும் குழந்தைகளுக்கும் கோடை வெயிலைத் தாக்குப்பிடிக்கப் பயன்படும் என்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

மற்றொரு திட்டப்பணியில், இந்தச் சங்கம் பர்தமான் மாவட்டத்தில் பர்பாவில் உள்ள ஆர்யா பங்கா FP பள்ளியில் குடிநீர் வசதி அளித்து, கைகழுவும் நிலையங்கள் மற்றும் கழிவறை வளாகங்கள் கட்டியுள்ளது. சங்க பிரசிடென்ட் சமித் பேனர்ஜி, "இந்தப் பள்ளியில் படிக்கும் 250 மாணவர்கள் எங்கள் முயற்சியால் பயனடைவார்கள்," என்று கூறியதுடன், இந்தத் திட்டப்பணியை செயல்படுத்துவதற்கு மாவட்டத்தில் உள்ள 56 சங்கங்களும் களத்தில் இறங்கினர் என்றும் கூறினார்.■

பழங்குடி கிராமம் மெழுகுவர்த்தியிலிருந்து சூரிய விளக்குகளுக்கு மாறுகிறது

கிரண் ஜெஹ்ரா

உள்ளட்டியில் இருந்து 60 கி.மீ., தொலைவில் இருக்கும் இம்பெட் என்ற கோட்டா சமூக கிராமத்தில் இருக்கும் 39 பழங்குடியினர் வீடுகளுக்கு சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகளை, RC பெங்களூரு கோரமங்கலா (D 3190) உடன் இணைந்து ரோட்டரி பெங்களூரு டௌன்டவுன் சங்கம் நிறுவியது. இக்கிராமத்திற்கு 5 கி.மீ., தொலைவில் பள்ளிக்கூடம் உள்ளது. குழந்தைகள், அரசுப் பள்ளிகளுக்கு, ஒரு குறிப்பிட்ட தூரம் வரை நடந்து சென்று பிறகு பேருந்தில் ஏறி பயணம் செய்கிறார்கள். "ஆனால் அது எங்கள் வீடுகளில் மின்வசதி இல்லாததை விடப் பெரிய பிரச்சனை அல்ல. குழந்தைகள் சூரிய அஸ்தமனத்திற்கு முன்பே வீட்டிற்குத் திரும்பி விடுவார்கள், மின் வசதி இல்லாததால் அவர்களால் அன்றாட வீட்டுப் பாடங்களை முடிக்க முடிவதில்லை. இப்போது மின்வசதி வந்துவிட்டது, இதை ஏற்பாடு செய்த ரோட்டரிக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம்," என்று கோட்டா சமூகத்தின் தலைவரான சரஸ்வதி நீஜி கூறுகிறார்.

நீலகிரி மலையின் நிலத்துக்குரிய தொன்முதற்குடியான, 3500 மக்கள்தொகை கொண்ட கோட்டா சமூகத்தினர், நல்ல குயவர்கள், சிறந்த பாடகர்கள், இசைக்கலை ஞர்கள் மற்றும் இசைக் கருவி தயாரிப்பாளர்கள்; அவர்கள் முக்கிய வேலைகளுக்குச் செல்லக்கூடிய மற்றும் தங்கள் குழந்தைகளின் ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற முற்போக்கு சிந்தனையுள்ள பழங்குடியினர்களில் ஒரு பிரிவினராக விளங்குகிறார்கள். மற்ற மலைவாழ் சமுதாயங்களைப் போலல்லாமல், "சில ஆண்டுகளுக்கு முன்பு வரை எல்லோருமே இலவசமாகக் கல்வி பெற முடியும் என்று தெரியாது, ஆனால் இப்போது ஒவ்வொரு

RC பெங்களூரு டௌன்டவுன் தலைவர் ரகு அல்லம் மற்றும் கோரமங்களா சங்கத்தலைவர் ஜெனட் யெக்னேஸ்வரன் அவர்களுடன் இம்பட் கிராம மக்கள்.

கோட்டா குழந்தையும் பள்ளிக்கு செல்கிறார்கள். ஆண், பெண் பாகுபாடு எதுவும் இல்லை,'' என்று தெரிவிக்கிறார்.

RC பெங்களூரு டௌன்டவுன், சூரியசக்தி விளக்கு திட்டத்தைச் செயல்படுத்த பெங்களூரு அருகே கிராமங்களை தேடும் பணியில் இருந்தது. ''சில கிராம ஊராட்சித் தலைவர்களை சந்தித்தபோது, அவர்கள் 'எங்களிடம் பணம் கொடுங்கள், நாங்களே சூரியசக்தி விளக்குகளை அமைத்துக் கொள்கிறோம்' என்று சொன்னார்கள்.'' கிராமங்களைத் தேடி சில மாதங்கள் கழிந்தபோது, RC பெங்களூர் கோரமங்கலாவின் பிரசிடென்ட் ஜேனட் யெக்னெஸ் வாரன் அவர்கள் இம்பெட் கிராமத்தை அடையாளம் காட்டினார். ''அடர்ந்த வனப்பகுதிக்குள், அடைவதற்கு எந்தவொரு சரியான பாதையுமின்றி இருக்கும் ஒரு கிராமம் அது. ஒரு படுக்கை, ஒரு அலமாரி மற்றும் ஒரு சில பாத்திரங்கள் கொண்ட 70-100

சங்கத்தலைவர் ரகு அல்லம் ஒரு கிராமவாசியிடம் சூரிய சக்தி விளக்கை தருகிறார்.

சதுர அடி பரப்பில் மரம் மற்றும் மண் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டிருக்கும் வீடுகளில் வசிக்கும் மக்களைப் பார்த்தவுடன் நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்,'' என்று RC பெங்களூரு டௌன்டவுன் தலைவர் ரகு அல்லம் கூறினார்.

கிராம மக்கள் பணத்தையும் வறுமை நிலை பற்றியும் எந்த ஒரு கருத்தையும் சொல்லாதது, இரு தலைவர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அந்தக் கிராமத்தில் மின்சாரம் இல்லை. ஆனால், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மிக்ஸி மற்றும் ஒரு கிரைண்டர் இருந்ததைப் பார்க்க வினோதமாக இருந்தது. ''அதைப் பற்றி அந்தச் சமூகத் தலைவரிடம் கேட்டபோது, எங்களுக்கு வாக்களித்தால் மின்சார வசதி செய்து தருவதாகச் சொல்லி, இந்த அரசாங்கம் இதை முன்னதாகவே கொடுத்தார்கள், நாங்களும் அவர்களுக்கு வாக்களித்தோம்.''

காட்டில் வெகுதூரத்தில் இந்தக் கிராமம் இருப்பதால், மின்சாரம் மறுக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தி விளக்குகளுக்குத் தூண்களோ அல்லது கம்பங்களோ தேவையில்லை மேலும் குறைவான ஒயரிங் மட்டும் தேவைப்படுகிறது. இந்த பேனல் வீட்டின் மேற்கூரையில் பதிக்கப்பட்டிருக்கும், மேலும் அது ஒரு சிறிய LED விளக்கு மற்றும் ஒரு மொபைல் சார்ஜருக்கு சக்தி கொடுக்கும் பேட்டரியுடன் இணைக்கப்பட்டு இருக்கும்.

குழந்தைகள் தேர்வு நாட்களில் கிராமத்துக்கு அருகில் வாழும் நண்பர்கள் அல்லது பள்ளி ஆசிரியர்களின் வீடுகளில் சென்று தங்கத் தேவை இல்லை என்பது இப்போது மிகவும் நிம்மதியாக இருக்கிறது. ''எங்களது வாழ்நாள் முழுவதும் எண்ணெய் விளக்குகள் மற்றும் மெழுகுவர்த்திகளை ஏற்றி, தினமும் 7 மணிகுள்ளே வீட்டு வேலைகளை முடித்து, காட்டு விலங்குகளை விரட்டப் போராடினோம்... ஆனால் சூரிய சக்தி விளக்குகள் எல்லாவற்றையும் மாற்றிவிட்டது.

''நாங்கள் கிராமத்தை விட்டுக் கிளம்பும்போது, இந்த விளக்குகள் பழுதாகாமல் ஒளி வீசும் என்ற உத்திரவாதத்தை அவர்கள் எங்களிடம் பெற்றுக்கொண்டனர், மேலும் அவர்களின் குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடைகள் வேண்டும் என்ற கோரிக்கையும் வைத்தனர்,'' என்கிறார் அல்லம். இந்தக் கிராமவாசிகளுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தருவதற்காக திட்டமிடப்பட்டிருப்பதாகவும், அதற்கு இணைந்து செயல்பட சங்கங்களை அணுகி உள்ளோம் என்றார் அல்லம்.

Apply yourself

Would you like to contribute further to Rotary by serving on a committee? Each of Rotary's committees, made up of Rotarians and Rotaractors from around the world, works with the organisation's leadership to ensure efficiency and promote the goals and priorities laid out in the strategic plan.

The following committees are searching for qualified candidates for openings in 2019–20. All committees correspond via email, teleconference, or webinars as needed, and some also involve at least one mandatory in-person meeting per year. Most committee business is conducted in English.

To be considered for committee membership or to recommend someone for an appointment, visit **on. rotary. org/application2018.**

Applicants must be registered on *MyRotary* at **rotary. org/myrotary** and should make sure that their My Rotary profile includes current contact information.

Candidates may apply for only one committee.

The application deadline is August 11.

Committee	Function	Prerequisites	Commitment
Audit	Advises the Board of Directors on financial reports, internal and external auditing, and the system of internal control	Independence, appropriate business experience, and demonstrated financial literacy in accounting, auditing, banking, insurance, investment, risk management, executive management, or audit governance	One six-year term; two meetings per year in Evanston and two teleconference/webinar meetings per year
Communications	Advises the Board on communication with key audiences	Professional background and experience in a communications-related field	One three-year term; multiple conference calls; annual meeting in Evanston
Finance	Advises the Board on Rotary's finances, including budgets, investment policy and sustainability measures	Professional background in a finance-related field; nonprofit experience preferred. Candidates should have experience in financial matters at the club and district levels	One three-year term; two meetings per year in Evanston
Global Networking Groups	Oversees action groups, fellowships and vocational service including operations, programme enhancements and proposals	Strong candidates; have led action groups, fellowships, or club- or district-level vocational service initiatives, and are familiar with their policies	One three-year term; annual meeting in Evanston and two teleconference meetings per year
Joint Committee on Partnerships	Advises the Board and Trustees on partnership and sponsorship matters	Knowledge of Rotary grant-making and international service portfolios; extensive experience in cultivating and developing partnerships with corporations, the NGO sector and government; experience in cause marketing, sponsorship, and resource-generating relationships, as well as international strategic partnerships; and clear understanding of the capacity and club-based projects of Rotary	One three-year term; two meetings per year in Evanston



Committee	Function	Prerequisites	Commitment
Leadership Development and Training	Advises the Board on Rotary's leadership training programme for Rotarians, clubs and districts with a special emphasis on training for district governors	Must have significant training or education experience with a preference for leadership development	One three-year term; annual meeting in Evanston
Membership	Advises the Board on matters related to membership development, retention and engagement	Rotarians or Rotaractors with significant knowledge of and commitment to membership attraction and engagement activities; candidates from clubs that have diversified their membership preferred	One three-year term; two meetings per year in Evanston
Operations Review	Monitors the effectiveness, efficiency, and implementation of operations and all internal systems; advises the Executive Committee on compensation matters; and performs other oversight functions as requested by the Board	Experience in management, leadership development or financial management, and a thorough knowledge of Rotary's operations. Appointments will be limited to past RI directors	One six-year term; typically meets in Evanston twice a year
Rotaract and Interact	Advises the Board on Interact and Rotaract; develops the Rotaract Preconvention Meeting programme	**Rotarians:** Experience working with youth; direct experience as a mentor or Rotaract/Interact adviser or district chair. Youth programme alumni are strong candidates. **Rotaractors:** Leadership at the club, district or international level. Strong candidates; have served as a district Rotaract representative, organised projects, or attended a Rotaract Preconvention. Age restrictions may apply.	One three-year term; annual meeting in Evanston One one-year term; one meeting in Evanston
Starategic Planning	Reviews Rotary's strategic plan and associated measures; advises leadership on other matters of long-term significance	10+ years of experience in strategy development, monitoring and implementation, and strong understanding of RI and Foundation programmes and services	One four-year term; up to four meetings in Evanston
Youth Exchange	Advises the Board on matters related to the Rotary Youth Exchange programme and develops the programme for the Youth Exchange Officers Preconvention	Experience in administering exchanges at district or multi-district level; must be from a district that has met certification requirements	Multiple teleconference/webinar meetings per year

©The Rotarian

உங்கள் ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு

ரஷ்மீதா பகத், ஜெய்ஸ்ரீ

வித்தியாசமாக செய்வது தான் அவரது மந்திரம்

ஸ்துதி அகர்வால், மெக்கானிக்கல் இன்ஜினியர், RC அலகாபாத், D 3120

வித்தியாசமாகச் செயல்களைச் செய்ய தான் விரும்புவதாகவும், உத்திரப்பிரதேசம் போன்ற இடத்தில் ரொட்டேரியன் தரநிலையிலிருந்து பெண் ரொட்டேரியன் உயர்நிலைக்கு வருவது என்பது வேடிக்கையானதல்ல. இதைப்பற்றி அவரிடம் கேட்கும்போது "கண்டிப்பாக, உ.பி., பெண்களுக்கு சவால் நிறைந்த பகுதி, இதை பிறந்ததிலிருந்து நான் அனுபவித்திருக்கிறேன், ஆனால் ரோட்டரி எனக்கு நன்றாக இருக்கிறது, பல வருடங்களாக இந்தச் சங்கத்தில் சீனியர்கள்... பெரும் பாலோரிடமிருந்து ஆதரவைப் பெற்றிருக்கிறேன்" என்கிறார், முதல் பெண் கவர்னரான ஸ்துதி அகர்வால்.

இவர் யாரும் செய்யாததையே செய்ய விரும்புகிறார். "எங்கள் பகுதியிலிருந்து வரும் எந்தவொரு பெண்ணும் இன்ஜினியரிங் படிப்பை தேர்ந்தேடுக்கமாட்டார்கள், ஆனால் நான் எடுத்தேன். அதுவும் இன்ஜினியரிங்கில் யாரும் எடுக்காத - மெக்கானிக்கல் இன்ஜினியரிங் - அந்த நேரத்தில் எந்தவொரு பெண்ணும் எடுக்கவில்லை," என்றார்.

1996ல் ரோட்டரியில் இணைந்து, புலம்பெயர்ந்த பெண்களின் உரிமைக்காகப் பணியாற்றும் சேவை அமைப்புடன் "மற்றவர்களின் நல்வாழ்வுக்கு பணியாற்றுவதை நான் விரும்பினேன், என்னுடைய குடும்பம் ரோட்டரியுடன் ஆழமாக இணைந்திருப்பதைக் கண்டேன். அப்பா, சகோதரர்கள், மற்றும் மாமனார் என அனைவரும் ரொட்டேரியன்களாக இருந்தனர், நீ எப்போதும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களுக்காக பணிசெய்ய விரும்புவதால், ஏன் ரோட்டரியில் சேரக்கூடாது என்றனர். அதனால் நான் RC அலகாபாத்தில் சேர்ந்தேன்."

சங்கத்தில் உள்ள சீனியர்கள் ஆதரித்தாலும் கூட, DG ஆவதற்கான அவருடைய பயணம் கடினமாக இருந்தது. "எனக்கு முன்னால் DG பதவிக்கு பெண்கள் போட்டியிட்டிருக்கிறார்கள், யாரும் வெற்றி பெற்றதில்லை." யாரும் எதிர்த்து போட்டியிடாததால், தேர்வுக்குழுவால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டாலும் கூட "புகார்கள் இருந்தது, ஆனால் எனது தேர்தல் சவாலாக இல்லை."

கவர்னராக இருக்கும் காலத்தில் மகப்பேறு மற்றும் குழந்தை நலனில் கவனம் செலுத்துவதும்... "எனது கணவர் குழந்தை நல மருத்துவர் என்பதால் இந்தப் பிரச்சனை பற்றிய ஆழ்ந்த அக்கறை எனக்கு இருக்கிறது" அத்துடன் அதிகமானப் பெண்களை ரோட்டரிக்குக் கொண்டுவருவதும் ஸ்துதியின் முக்கிய முன்னுரிமைகளாக இருந்தது.

"என்னுடைய முயற்சியும் சவாலும் வெறும் பெண் உறுப்பினர்களை கொண்டுவரவேண்டும் என்பதற்காக மட்டும் பெண்களை அழைத்துவரவில்லை, அவர்கள் பணி செய்வதையும் எங்கள் சேவை திட்டப்பணிகளில் முழுமூச்சாக களமிறங்கி பங்கேற்பதையும் உறுதி செய்ய விரும்புகிறேன்" என்றார்.

இந்தியாவில் உள்ள சங்கங்கள் பணத்தை தாராளமாகச் செலவழிகிறார்கள். இது முகம் சுளிக்கும்படியாக, ஆடம்பரமாகவும் இருப்பதைப் பற்றி அவர் என்ன நினைக்கிறார்?

வாய்விட்டுச் சிரித்து, சொல்கிறார்: தான் அதிகமானப் பெண்களை கொண்டுவர நினைக்கிறேன். பெண்கள் பண விஷயத்தில் கவனமாக இருப்பார்கள், அத்துடன் தேவையில்லாத செலவுகளைக் குறைப்பார்கள்."

ரொட்டேரியன்களுக்கு ரோட்டரியை மறுஅறிமுகம் செய்தல்

ராஜீவ் சர்மா,
பார்மாசூட்டிகல்ஸ், RC புசாவல் தப்தி வேலி, D 3030

ரொட்டேரியன்கள் முக்கிய நோக்கத்தைய மறந்தவர்களுக்கு புத்துணர்வு ஊட்டும் பயிற்சி கொடுப்பது, தான் கவர்னராக இருக்கும் காலத்தில் எனது முன்னுரிமையாக இருக்கும்," என்கிறார்.

ரொட்டேரியன்களின் பயிற்சியும், கல்வியும் தான் ரோட்டரியைப் பற்றி நன்றாக அறிய முடியும். அடுத்த முன்னுரிமை பெண் உறுப்பினர்கள் மீது தான், "அதிர்ஷ்டவசமாக எங்கள் மாவட்டத்தின் பெண் உறுப்பினர்கள் 12 சதவீதத்திற்கு அதிகமாகவோ இருக்கிறார்கள், நான் அதிகப்படுத்த முயற்சி செய்வேன் என்கிறார் சர்மா, 1994ல் ரோட்டரியில் சேர்ந்த இவர் அப்பாவும் ஒரு ரொட்டேரியனாக இருந்தார், "அவர் தான் என்னை இந்த அமைப்பிற்கு அறிமுகப்படுத்தினார்."

இயல்பாகவே மாவட்டம் 3030 மகப்பேறு நலனில் கவனம் செலுத்துகிறது, "எங்கள் மாவட்டம் உலகளாவிய மானியத்தின் மூலம் மூன்று மார்பகப் புற்றுநோய் சோதனை செய்யும் பேருந்துகளைப் பெற்றுள்ளது மற்றும் நாங்கள் கவனம் செலுத்தும் மற்றொரு விஷயம் எழுதப்படிக்க கற்றுக்கொடுப்பது ஆகும். நான் குறிப்பாக எப்படி வங்கி கணக்கைத் தொடங்கி பயன்படுத்துவது போன்றவற்றை மக்களுக்குக் கற்றுக்கொடுக்க விரும்புகிறேன், ஏனென்றால் இது தான் மகாராஷ்டிராவில் நமக்குத் தேவையானவற்றில் ஒன்று" என்கிறார்.

அவருடைய முக்கிய கவனம் மகப்பேறு நலனில் தான் இருக்கிறது, மேலும் பெண் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு சானிடரி நேப்கின்களை வழங்குவது அவருடைய காலத்தில் செய்ய வேண்டிய மிகப்பெரும் பணி. 93 சங்கங்கள் மற்றும் சுமார் 5,500 உறுப்பினர்கள் மூலம் இந்த மாவட்டம் பவுண்டேஷன் கொடுத்ததை விட அதிகமாகச் செய்திருக்கிறது. "ஏற்கனவே ஒரு சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் $1 மில்லியன் இலக்கைத் தொட்டிருக்கிறோம், அந்த இலக்கை மறுபடியும் அடைவோம் என நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். ஆனால் வருடாந்திர நிதி எங்கள் கவனத்தில் இருந்தாலும் நிரந்தரமான நிதி மீது தான் கவனம் செலுத்தப் போகிறோம்" என்கிறார் சர்மா.



பெண் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்க விரும்புகிறார்

விஷ்ணு எஸ் மோந்தே
ஆட்டோமொபைல் டீலர்,
RC துல்ஜாபூர், D 3132

ரோட்டராக்டராக இருந்து ரொட்டேரியனாக மாறிய விஷ்ணு மோந்தே, "1988ம் ஆண்டு LML நிறுவனத்தில் இன்ஜினியராக பணிபுரிய சோலாபூருக்கு வந்தேன், ரோட்டராக்ட் கூட்டத்திற்கு வரும்படி அழைப்பு வந்தது, அதுவரை நண்பர்கள் கிடையாது" அந்தக் கூட்டம் அவரை ஈர்த்ததால் ஒரு ரோட்டராக்டராக தன்னைப் பதிவு செய்ய ஒப்புக்கொண்டார். "ரோட்டரி மூலமாக நிறைய பேருக்கு உதவிகள் செய்ததை நினைத்துப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றும் 1994ம் ஆண்டு முதல் ஒரு ரொட்டேரியனாக இருந்த நாட்கள் சுவாரஸ்யமாக இருந்ததைச் சுருக்கமாகச் சொல்கிறார்.

சந்திப்பு நேரம், கூட்டம் நடைபெறும் இடம் ஆகியவற்றை வசதியாக அமைப்பதன் மூலம் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த விரும்புகிறார் மோந்தே. "பெண்கள் எளிதில் வந்து செல்லக்கூடிய இடமாகவும், சந்திப்பை விரைவாகவும் ஆரம்பிக்க சங்கங்களுக்கு நான் பரிந்துரைத்திருக்கிறேன்." வேலைக்குச் செல்லும் பெண்களை ரோட்டரியில் சேர அழைக்க வேண்டும் என அவரது குழுவினரை ஊக்குவிக்கிறார், புதிய பிணைப்புகளை உருவாக்க ரோட்டரி சிறந்த தளம் என்பதை கண்டறிவார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பெற்ற உறுப்பினர் சேர்க்கையில் நம்பர் 1 மாவட்டம் என்ற அந்தஸ்தை மீண்டும் அடைய விரும்புகிறார். "உறுப்பினர்களைத் தக்கவைப்பது பெரிய சவால், அதை எதிர் கொள்வதற்கு திட்டங்களை வகுத்து வருகிறேன்" என்கிறார் மாவட்ட ஆளுநர்.

TRFக்காக $300,000 நிதி திரட்ட இலக்கு வைத்திருக்கிறார்; ரூ1.25 லட்சம் நன்கொடைக் கொடுத்து, ஜோடி கமால் R என்ற பட்டத்தைப் பெற ரொட்டேரியன் கணவன் - மனைவிகளை ஊக்கப்படுத்துவதன் மூலம் இதைச் செய்ய அவர் திட்டமிடுகிறார். மேலும் பவுண்டேஷனுக்கு நன்கொடையளிக்க அனைவரையும் ஊக்கபடுத்துங்கள் என்று பிரெசிடென்ட்டுகளை வலியுறுத்துகிறார்.

அவரது சேவைத் திட்டப்பணிகளில் முக்கியமானது அகல்கோட் மற்றும் உஸ்மனபாத் நகரங்களில் நடத்தும் மாபெரும் மருத்துவ முகாம்கள். "உத்கிர் மற்றும் உதம்பூரில் நடைபெற்ற சர்வதேச மருத்துவச் சேவைகள் மற்றும் மாபெரும் மருத்துவ முகாம்களில் எங்களது பங்களிப்பு பிரபலமானது" என்கிறார் மோந்தே. 100,000 பள்ளி மாணவர்களுக்கு ஒரு மாபெரும் பல் மருத்துவ முகாம், ரோட்டரியின் போலியோ ஒழிப்புத்திட்டதைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த கூட்டங்கள் மற்றும் "பெண் குழந்தையை காப்பாற்றும் திட்டம்" போன்றவை தனது செயல்திட்டங்களில் இருக்கும் சில திட்டங்கள் என்கிறார்.



ரோட்டரியை "எட்டும் கனியாக" மாற்ற அவர் விரும்புகிறார்

நிக்லேஷ் திரிவேதி,
மருத்துவர், RC பலகாட் டைகர்ஸ், D 3261

RIலிருந்து ரோட்டரி நிகழ்ச்சிகளை மாவட்டத்திற்கு வெளியிலோ அல்லது ஆடம்பரமாகவோ நடத்தக்கூடாது என்ற செய்தி, நான் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து என்னுடைய எண்ணமாகவும் கொள்கையாகவும் இருக்கிறது. "சாதாரண ரொட்டேரியன்களுக்கு ரோட்டேரியை ஆர்வம் கொடுப்பதாக மாற்றி, அவர்களின் முழு பங்களிப்பைப் பெற விரும்புகிறேன். ஒரு நிகழ்ச்சி ரொம்ப ஆடம்பரமாக வெளியிடத்தில் நடத்தப்பட்டால், இது நிறைய ரொட் டேரியன்களுக்கு பங்கெடுப்பதற்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது. ''அதனால் என்னுடைய முன்னுரிமை ரோட்டரியை எட்டும் கனியாக மாற்றுவதே" என்றார் நிகிலேஷ் திரிவேதி.

1998 ஆம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார்; 1987 ஆம் ஆண்டில் GSE குழு உறுப்பினராக ஆஸ்திரேலியாவிற்குச் சென்று, திரும்பி வந்த பின்பு ரோட்டரியில் இணைவதற்கான வாய்ப்புகளைத் தேடினார், "துரதிர்ஷ்டவசமாக நான் இருந்த பகுதியில் ரோட்டரியோ அல்லது ரோட்டரிக்கான பகுதியோ இல்லை.

மத்திய பிரதேசத்தில் ஜபல்பூர் அருகில் உள்ள அவரது சொந்த ஊரான பலகாத்தில் ஒரு சங்கம் அமைப்பதாக திட்டமிட்டிருந்த போது, அதை ஆரம்பித்தது மட்டுமல்லாது சார்ட்டர் செக்ரட்டரியாகவும் இருந்தார். கவர்னராக தனது காலத்தில் திரிவேதியின் கவனம் ஆடம்பரத்தைத் தவிர்ப்பதைத் தாண்டி பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் இருந்தது. "இந்த விஷயத்தில் என்னுடைய மாவட்டம் பின்தங்கி இருக்கிறது மற்றும் எங்கள் பகுதியில் உள்ள பெண்களின் சதவீதம் உலக சராசரியான 20 சதவீதத்தை விட மிக குறைவாக இருக்கும் இந்தியாவை விட மிக குறைவு." பெண் உறுப்பினர்கள் சேர்ப்பதில், 20 சதவீத இலக்கை அடையவதற்கோ அல்லது அதற்கு அருகிலாவது வருவதற்கோ கடினமாக உழைக்க வேண்டும் என்பதே அவருடைய உறுதிமொழி.

"மூன்றாவதாக, நீடித்து நிற்கும் சேவைத் திட்டப்பணிகளை செய்ய விரும்புகிறேன்; சமீபத்தில் நாங்கள் செய்திருந்த கேத் லேப் திட்டப்பணியை ரோட்டரி நியூஸ் வெளியிட்டிருந்தது. இதுபோன்ற திட்டப்பணிகளை அதிகமாகச் செய்ய விரும்புகிறோம், ஏனெனில் இந்தியாவில் சமூக சேவைத் திட்டப்பணிகளின் தேவை நிறைய இருக்கிறது. அமெரிக்காவில் நாங்கள் பார்த்தவை தான் எங்கள் கண்களைத் திறந்தது. சமூக சேவை செய்ய அவர்களிடம் நிறைய பணமும் குறுகிய நோக்கமும் இருக்கிறது; ஆனால் நம்மிடமோ பணமும் நோக்கமும் என இரண்டும் இருக்கிறது, அதனால் நாம் ஏன் பணத்திற்காக எல்லா நேரமும் பவுண்டேஷனை (TRF) எதிர்பார்க்கிறோம், நமக்குத் தேவையான நிதியை நாமே திரட்டலாம்.

அவர் தன்னம்பிக்கை உள்ளவர், அதனால் "எங்கள் மாவட்டத்தைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் இருக்கிறது, அதனால் ரோட்டரி திட்டப்பணிகளுக்கு பணம் பெறுவது ஒரு பிரச்சனையாக இருக்காது."

உறுப்பினர் சேர்க்கை தான் இவரது கவனம்

நிர்மல் பிரகாஷ்,
கலர் லேப்,
RC ஆத்தூர், D 2982

"நண்பர்களையும், தொழிலையும் வளர்ப்பதற்காக நான் 2002ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தேன். உலகளாவிய சமூகங்களில் குறிப்பாக போலியோ ஒழிப்பு திட்டத்தில் ரொட்டேரியன்களின் பரந்த மாற்றங்களின் காரணமாக நான் ஈர்க்கப்பட்டேன்," என்கிறார் நிர்மல் பிரகாஷ். அவர் மாவட்டத்தில் உள்ள 68 சங்கங்களைச் சேர்ந்த 3,000 ரொட்டேரியன்களைக் கொண்ட குழுவை வழி நடத்துகிறார், உறுப்பினர் எண்ணிக்கையை 20 சதவிகிதம் அதிகரிக்கவும், 90 சதவிகிதம் தக்கவைத்துக்கொள்ளவும் இலக்கை நிர்ணயித்துள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உறுப்பினர் சேர்க்கைத் தலைவராக இருந்த அவருடைய பணிக்கு RI விருது கிடைத்தது, இது அவருடைய இலட்சியத்திற்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது. சங்கத்தில் உறுப்பினர்களைச் சேர்ப்பதில், ஒவ்வொரு சங்க பிரசிடென்டுக்கு உதவ, ஒவ்வொரு சங்கத்திலும் 10 சுறுசுறுப்பாகச் செயல்படுகிற உறுப்பினர்களை அடையாளம் கண்டு, அவர்கள் புதிய உறுப்பினர்களுக்கு வழிகாட்ட வேண்டும், அதனால் உறுப்பினரைத் தக்கவைப்பது சாத்தியமாகும்.

$300,000 இலக்காக வைத்து மாவட்டத்தின் TRF நன்கொடையை இரட்டிப்பாக்கத் திட்டமிட்டுள்ளார். "ஒவ்வொரு உறுப்பினரும் $100 நன்கொடையளிக்க வலியுறுத்தினேன், அதனால் என் இலக்கை எளிதில் அடைய முடியும், இதைத் தவிர PHF மற்றும் முக்கிய நன்கொடையாளர்களை ஊக்குவிப்பதன் முலம் இந்த இலக்கை அடைய முடியும் என்றார் பிரகாஷ்.

கிளப் சென்ட்ரலில் அனைத்துச் சங்கங்களை பதிவு செய்வது, பிரசிடென்சியல் சைடேஷனுக்கு விண்ணப்பிப்பது, ரொட்டேரியன்களை மை ரோட்டரியில் பதிவு செய்வது போன்ற தனது செயல்திட்டங்களாக வைத்திருக்கிறார், மேலும் முக்கியமாக, "ரொட்டேரியன் களுக்கு ரோட்டரி பற்றி தெரியவைப்பதன் மூலம் ஒரு கண் மருத்துவ முகாமோ அல்லது ஒரு இரத்த தான முகாமோ செய்யாமல் இந்த சமூகத்திற்குத் தேவையான சேவைத் திட்டப் பணிகளை திட்டமிட தானாகவே முன் வருவார்கள்." இரண்டு பள்ளிக்கூடங்களில் WinS திட்டத்தை செயல் படுத்த ஒவ்வொரு சங்கத்தையும் வலியுறுத்துகிறார் அத்துடன் இந்த வருடத்தில் உலகளாவிய மானியத் திட்டப்பணிகளாக தடுப்பு அணைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டிக்கொடுப்பது, வாழ்வாதாரத்தை மேம்படுத்த கால்நடை வழங்குவது போன்றவற்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

Rotary

Rotary at a glance

Rotarians	:	12,37,694
Clubs	:	35,887
Districts	:	539
Rotaractors	:	2,56,519*
Clubs	:	11,153*
Interactors	:	5,26,723*
Clubs	:	22,901*
RCC members	:	2,27,493*
RCC	:	9,891*

* As on June 1, 2018

Membership Summary

As on June 1, 2018

RI Zone	RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians	Rotaract Clubs	Interact Clubs	RCC
5	2981	112	4,662	220	61	226	170
5	2982	69	3,080	138	65	112	45
5	3000	127	5,346	460	296	664	195
4	3011	78	3,429	679	58	110	25
4	3012	87	3,446	674	70	129	56
5	3020	92	4,235	208	117	466	351
4	3030	92	5,067	632	83	313	164
4	3040	98	2,230	244	61	124	137
4	3053	75	2,836	471	18	56	95
4	3054	130	6,431	1,031	94	318	469
4	3060	101	4,355	519	62	123	136
4	3070	103	3,092	302	68	158	55
4	3080	78	3,371	226	73	216	108
4	3090	80	2,189	83	32	37	122
4	3100*	73	1,715	74	11	72	146
6	3110	115	4,031	316	51	49	104
6	3120	78	3,329	380	38	61	51
4	3131	131	5,620	1,174	113	284	90
4	3132	105	4,143	433	66	206	142
4	3141	92	5,507	1,201	120	255	82
4	3142	83	3,188	500	71	195	65
5	3150	99	3,694	371	93	229	109
5	3160	70	2,459	132	27	48	81
5	3170	127	5,667	408	61	310	161
5	3181	74	3,235	255	35	179	104
5	3182	83	3,428	264	36	274	94
5	3190	129	5,213	640	155	359	51
5	3201	140	5,279	326	101	131	47
5	3202	128	4,919	246	105	436	46
5	3211	138	4,580	280	13	89	124
5	3212	98	4,009	306	113	278	140
5	3231	71	2,981	132	56	201	239
5	3232	106	4,290	618	149	317	80
6	3240	88	3,071	355	65	148	154
6	3250	98	3,815	666	51	209	183
6	3261	70	2,585	338	16	102	42
6	3262	95	3,376	395	47	71	75
6	3291	145	3,808	709	82	131	592
India Total		**3,758**	**1,47,711**	**16,406**	**2,833**	**7,686**	**5,130**
5	3220	70	1,969	251	84	201	75
6	3271	81	1,444	245	53	16	13
6	3272	164	3,281	470	44	37	37
6	3281	205	5,911	856	234	91	186
6	3282	141	4,012	408	132	48	41
6	3292	115	4,498	682	122	117	108
S Asia Total		**4,534**	**1,68,826**	**19,318**	**3,502**	**8,196**	**5,590**

**Non-districted.*

Source: RI South Asia Office

பரதநாட்டியம்

உடல், மனம் மற்றும் ஆன்மாவின் இணைவு

சீதா ரத்னாக்கர்

கம்பீரமான தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலின் நடு முற்றத்தில் ஆயிரமாவது ஆண்டு விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு ஆயிரம் பரதநாட்டிய கலைஞர்களின் கண்கவர் நடனம் என் மனதில் நீங்காத இடத்தை பிடித்தது. என்னே ஒரு பிரகாசிக்கும் காட்சி! எந்தவித ஒத்திகைப் பயிற்சியும் இல்லாமல் உலகிலுள்ள பல்வேறு நாடுகள், மொழிகள், மதத்தை சேர்ந்த நடன கலைஞர்களின் ஒத்திசைவான ஒருமித்த நடனம் நமது உணர்வுகளுக்கு விருந்தாக இருந்தது. இந்த பிரமாண்டமான நடன நிகழ்ச்சி புகழ்பெற்ற பரத நாட்டியக் கலைஞர் டாக்டர் பத்மா சுப்ரமணியம் அவர்களால் சிந்தித்து ஒருங்கிணைக்கப்பட்டு பெரிய சக்தியால் திட்டமிடப்பட்டது. இந்த பிரமாண்டமான நிகழ்ச்சி நேரடியாக் காணக்கூடிய மற்றும் இந்தியா முழுவதும் தொலைக் காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செயல் முறையை வழிநடத்தக்கூடிய பெரும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது.

பிரகதீஸ்வரர் ஆலயம் ஆயிரம் ஆண்டுகால சரித்திரம் கொண்ட கட்டிடக்கலை அதிசயங்களில் ஒன்றாகும். இப்படிப்பட்ட புனிதமான இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கோயில் வழிபாட்டு சடங்காக பரதநாட்டியம் நிகழ்த்தப்பட்டது. இங்கு தான் நடனக் கலைஞர்கள் மற்றும் இசைக் கலைஞர்களின் பெயர்கள் கோவிலின் சுவரில் பொறிக்கப்பட்டன. இந்த ஊரில் தான் மன்னர்கள் நுண்கலைகளை பேணி ஊக்குவித்தனர்; தஞ்சை நால்வர் முறையாக நடனமாட ஒரு கச்சேரி அமைப்பை வடிவமைப்பதற்கும், இன்றளவும் பாடப்படுகின்ற பல அழியாப் பாடல்களை இயற்றுவதற்கும் உகந்த சூழலாகவும் இது விளங்கியது.

செப்டம்பர் 25, 2010, இதுவே ஆயிரக்கணக்கான அர்ப்பணிப்பு மிக்க நடன கலைஞர்களின் நடனத்தின் மூலம் ஆன்மாவை கொள்ளை கொண்ட வழிபாட்டுடன் கோவில் ஒளி வீசிய வரலாற்றுப் புகழ்பெற்ற நாளாகும். கலை மற்றும் கட்டிடக்கலை, மரபுகள், தொழில்நுட்பம் ஆகிய வற்றின் இந்த ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு இன்றைய உலகில் பரதநாட்டியத்தின் தொடர்பை சிறப்பாக விவரிக்கும்.

இலக்கிய ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் உருவான பரதநாட்டியம் இந்தியாவின் 2,000 ஆண்டுகள் பழமையான பாரம்பரிய நடனக்கலையாகும். தென்னிந்திய கோவில் நடனத்தில் இருந்து இந்த நடன பாணி வந்தமை யால் இன்றும் கூட ஆன்மீக ரீதியிலான கலை வெளிப்பாட்டை ஒருங்கிணைக்கும் பாரம்பரிய கலையாக இது விளங்குகிறது. பரதநாட்டிய தேவதாசியாகிய T பாலசரஸ்வதி, இந்த நேர்த்தியான நடன பாணியின் சாரம் பற்றி

இங்ஙனம் விவரித்தார்: "பரதநாட்டியம் என்பது ஒரு நடனக் கலைஞர் தாளத்திலும் இசையிலும் தன்னுடைய அடையாளத்தைக் கலந்து, ஆன்மாவின் அனுபவத்துக்காகவும் வெளிப்பாட்டுக்காகவும் குறைந்தபட்சம் நடனமாடும் நேரம் வரை மட்டுமாவது தன்னுடைய உடலை ஒரு கருவியாக்கிக்கொண்டு அதை இறைவனுக்கு அர்ப்பணம் செய்கின்ற ஒரு கலை ஆகும்."

பரதநாட்டியம் முன்பு சாடிர் என அழைக்கப் பட்டது, மேலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் அதற்கு புதிய பெயர் சூட்டப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கலைகளைப் பற்றி நாட்டிய சாஸ்திரா என்ற ஆய்வுக்கட்டுரை எழுதிய பரத முனிவர் பெயரில் இருந்து இதன் பெயர் பெறப்பட்டது. இதற்கான மற்றொரு விளக்கம் ப என்பது பாவத்தை குறிக்கும், ர என்பது ராகத்தை குறிப்பதாகும் தா என்பது தாளம் அல்லது சந்தம் என்பதை குறிப்பதாகும், இது நாட்டியத்துடன் சேர்க்கப்பட்டு பரதநாட்டியம் என அழைக்கப்படுகிறது.

பரதநாட்டியத்தின் உள்ளார்ந்த அழகு, பார்வையாளரை மொழி மற்றும் நுட்பத்தைப் பற்றிய அறிவுக்கு அப்பால் எடுத்துச் செல்லும் ஒரு இதமளிக்கும் அனுபவமாகக் கருதப்படுகிறது. முன்னர் இது தென்னிந்தியாவில் குறிப்பிட்ட குடும்பத்தினர் மட்டும் நிகழ்த்தக்கூடிய நடனமாக இருந்தது. மேலும் பல நூற்றாண்டுகளாக வழிவழியாக தேவதாசி நடனக் கலைஞர்களால் தலைமுறை தலைமுறையாக இந்தக் கலை கொண்டு செல்லப்பட்டுள்ளது. பாரம்பரியமாக இது பெண்களால் ஆடக்கூடிய தனி நடனமாக இருந்தது.

நடனக் கலைஞருடன் நாட்டியத்தை நிகழ்த்த குரு அல்லது நட்டுவனார், பாட்டுப் பாட ஒரு பாடகர், தாளத்திற்காக மிருதங்கம் அல்லது தவில் வித்வான் மற்றும் மெல்லிசை காற்றுக் கருவிகளான நாதஸ்வரம், வீணை புல்லாங்குழல் மற்றும் வயலின் போன்ற நரம்புக் கருவிகள் வாசிக்கக்கூடிய கலைஞர்களும் குழுவில் இடம்பெறுவார்கள். இந்த நுட்பம், கை, கால், முகம் மற்றும் உடலின் அசைவு களோடு நடன முத்திரையுடன் கூடிய விரிவான சொற்களஞ்சியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நடனம் மூன்று கூறுகளின் கலவையாகும், அதாவது தூய நடனம் அல்லது நிருட்டா, பாவனையும் தாளமும் சே ர்ந்த கலவை அல்லது நிருத்யா மற்றும் நாடக உறுப்பு அல்லது நாட்டியா ஆகியவற்றின் கலவையாகும். அபிநயம் எனப்படும் முகபாவம் சிருங்காரம் (காதல்), ஹாஸ்யம் (நகைச்சுவை), கருணை (துயரம்), ரௌத்திரம் (கோபம்),



புகைப்படம்: A பிரதாப்

பரத நாட்டியக் கலைஞர் சண்முக சுந்தர்

வீரம் (துணிவு), பயாநகம் (பயம்), பிபஸ்தா (வெறுப்பு), அத்புதா (ஆச்சர்யம்), மற்றும் சாந்தம் (அமைதி) ஆகிய நவரசம் எனப்படுகின்ற ஒன்பது வகை உலகளாவிய உணர்ச்சிகளை அடிப்படையாக கொண்டது. அபிநயத்தின் அடிப்படை பற்றி நாட்டியசாஸ்த்ரா உரையில் காணப்படுகின்றது, ரசா என்பதே நடனக் கலைஞர் மற்றும் பார்வையாளர் இருவருக்கும் மிக உயர்ந்த அழகியல் அனுபவம் என இது வரையறுக்கிறது.

புகழ்பெற்ற பரதநாட்டிய நடன கலைஞரான அலர்மேல்வள்ளி நடனத்தின் மேல் தனக்குள்ள பெரும் விருப்பத்தை நம்முடன் பகிர்கிறார்- ‘‘என்னைப் பொறுத்தவரை, பரதத்தின் பெருமை என்பது வாழ்க்கையின் உடல், அறிவு, உணர்ச்சி சார்ந்த மற்றும் ஆன்மீக பரிமாணங்களை சமநிலைப்படுத்துகின்ற உள்ளார்ந்த திறனில் உள்ளது. நடனக் கலைஞர் தன்னை ஒரு சிற்பியாக பாவித்துக் கொண்டு, நளினமான மற்றும் சக்தி வாய்ந்த வடிவங்களாக செதுக்குகிறார். ஓவியராக, வரையப்பட்ட ஒவ்வொரு வரிக்கும் வண்ணங்களை சேர்த்து, அதற்கு உயிரூட்டுகிறார். அவர் ஒரு கவிஞராக, தன்னுடைய அசைவுகள், சைகைகள் மற்றும் வெளிப்பாடுகளால் தன் பாடல்களை எழுதுகிறார். இறுதியில் ஒரு தெய்வீகமான, மாற்றத்திற்குரிய அனுபவமாக - ஒரு மிகுந்த மகிழ்ச்சியான பிரார்த்தனையாக தன் தேடலை நடனமாக்குகிறார்.’’

இன்று பரதநாட்டியம் ஒரு சக்திவாய்ந்த, துடிப்பான வாழ்க்கைப் பாரம்பரியமாக விளங்குகிறது. அது இசை, இலக்கியம், சிற்பம் மற்றும் நாடகத்தை இணைத்து கலைஞரின் படைப்பாற்றல் மிக்க ஆராய்ச்சிகளுக்கு எல்லையற்ற வாய்ப்புவளத்தை வழங்குகிறது. பரதநாட்டியத்தின் திறமையின் அழகைப் புரிந்து கொள்ளவும் பாராட்டவும், நடன நிகழ்ச்சியின் மார்க்கம் அல்லது பாதை வழியாக நாம் செல்வோம். பழம்பெரும் நடன கலைஞரான டி.பாலசரஸ்வதி - ‘‘பரதநாட்டிய பாடங்கள் ஒரு பெரிய கோயில் போல

ராகினி தேவி

கட்டமைக்கப்பட்டுள்ளது’’ என்று பயபக்தியுடன் விவரிக்கிறார். நாம் அலாரிப்பின் வெளி கோபுரம் (ஹால்) வழியே நுழைந்து, ஜதீஸ்வரத்துடன் அர்த மண்டபத்தை (ஹாலின் பாதி வழி) கடந்து, பிறகு சப்தத்தின் மண்டபத்தைக் கடந்து வர்ணத்தின் புனித பிரகாரத்தில் நுழைகிறோம்.

இந்த இடத்தில், நடனத்தின் தாளம், மனநிலை மற்றும் இசை ஆகியவற்றில் சிறந்து விளங்குவதற்கு நடனக் கலைஞர்களுக்கு விரிவான வாய்ப்புக் கொடுக்கிறது. வர்ணம் என்பது நிரந்தரமானது, அது நடனக் கலைஞருக்கு அவரது சுய படைப்பாற்றலுக்கும் கலைப் பாரம்பரியத்துக்கும் முழுமையான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், சுய நிறைவு பெறுவதற்கான மகிழ்ச்சி வழங்குவதற்கு எப்போதும் விரிவடையும் வாய்ப்புகளை வழங்குகிறது’’. பதம் என்பது ஆழ்ந்த வெளிப்பாடுகளை சித்தரிக்கும் உணர்ச்சிகள் நிறைந்த ஆத்மாவை கிளர்ந்தெழச் செய்து, அதன் பிறகு தில்லானா வாயிலாக தூய மகிழ்ச்சி வெளிப்படுத்துகின்ற நடனமாகும். நடனக் கலைஞர் எளிமையான ஆழமான ஒரு பக்திப் பாடலுக்கு உணர்வுப் பூர்வமாக ஆடி பாரம்பரிய மார்க்கத்தை நிறைவு செய்வதன் மூலம் கலைஞர்கள், பார்வையாளர்கள் மற்றும் பிரபஞ்சத்திற்கு கடவுள் தன்னுடைய ஆசீர்வாதத்தை வழங்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறார்.

சிவன் தான் இயற்கையின் மூலம், அனைத்து இயக்கம், ஒலி மற்றும் அழகு ஆகியவற்றின் உருவம், மற்றும் அவர் நடன கடவுள் நடராஜராக, பிரபஞ்சத்தின் நடனக் கடவுளாக வழிபடப்படுகிறார். இந்திய இதிகாசத்தின் படி சிவனும் அவருடைய மனைவி பார்வதியும் பிரிக்க முடியாத, ஒன்றுக்கொன்று எதிர்மறை சக்தியாகவும் நிறைவானதாகவும் விளங்குகின்ற ஆண் மற்றும் பெண் சக்திகளான யாங் சக்திகளைக் குறிக்கின்றனர். புராணக்கதைகளில் குறிப்பிட்டவாறு, பரவசம் நிறைந்த அனைத்து விண்ணவர்களுடனும் ஒரு பெரிய நடனக் குழுவில் அந்த ஜோடி பங்கேற்றது. அதில் ஒவ்வொரு அடியையும் சிவனுக்கு இணையாக பார்வதி எடுத்து வைத்து நடனமாடினார். இறுதியாக ஊர்த்தவ தாண்டவம் சிவன் ஆடுகையில் தன்னுடைய ஒரு காலை தரையிலும் மற்றொரு காலை தலைக்கு மேலும் தூக்கியபோது பார்வதி வெட்கத்தினால் செய்ய மறுத்துவிட்டார், அவ்வாறு செய்வது பொருத்தமாக இருக்காது என கருதினார். சிதம்பரத்தில் உள்ள தில்லை நடராஜர் கோயிலில் சிவனுடைய மனதை கொள்ளை கொள்ளும் நடனத்தின் 108 கரணங்கள் அல்லது நிற்கும் நிலைகள் நேர்த்தியான கல் சிற்பங்களாக பொறிக்கப்பட்டுள்ளன.

நடன இயக்குனரும் இந்திய தூர்தர்ஷனின் முன்னாள் துணை இயக்குநர் ஜெனரலுமான கமலினி தத், தனது வாழ்க்கையில் பரதநாட்டியத்தின் தாக்கம் பற்றி பகிர்கிறார். ‘‘அப்போது எனக்கு வயது 18 - ஒருவர் தன்னுடைய பாதையில் தென்படுகின்ற எல்லாவற்றைப் பற்றியும் கேள்வி கேட்கும் வயது. நான் எதை கற்றுகொண்டிருந்தேன் - பரதநாட்டியம், தத்துவம், பக்தி, சிவனின் எங்கும் நிறைந்த தன்மை அல்லது சுய உணர்தலுக்கான பாதை? நான் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலங்களை இணைக்கும் ஒரு ஊடகம் என்பதை உணர்ந்தேன்.’’

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தேவாரம் அவரது ‘மனம், உடல் மற்றும் ஆன்மா’ மூலம் உயிர்

பெற்றது. நம் வாய்வழி மரபுகள், குறிப்பாக நிகழ்த்துக் கலைகளைப் பற்றி நான் புரிந்துகொண்டேன். பரதநாட்டியம், நம் உயர்வான தமிழ் கலாச்சாரத்தின் முக்கியமான பகுதியாகும். மகான்களாக விளங்கும் கவிஞர்கள் கனவு கண்ட சமூகத்தின் மிக உயர்ந்த அழகியல் உணர்ச்சியையும், உள்ளடக்கிய சமுதாயத்தின் மதிப்புகளையும் நான் மனத்திற்கொண்டேன்.

ஆனால் 19 வயதாக இருந்த போது, மிக கொடூரமான ஒரு விபத்துக் குள்ளான பிறகு, மெதுவாக அவரது நடன வாழ்கை முடிவுக்கு வந்தது. "எனக்கு தூர்தர்ஷனில் வேலை கிடைத்தது. அது என் வாழ்க்கை முறையையே மாற்றி அமைத்தது. ஆனால் நடனம் ஒரு நொடி கூட என்னை விட்டுப் பிரியவே இல்லை. தொலைக்காட்சி தயாரிப்புகளை கலைப் படைப்புகளாக மாற்றுவதற்குரிய சக்தியை எனக்கு வழங்கியது. நடனம் எனது கடினமான வாழ்க்கையையும், மிகுந்த திறமை தேவைப்படுகின்ற வேலையையும் எதிர்கொள்ளவும், ருமட்டாய்ட் ஆர்த்ரிடிஸ் போன்ற ஒரு நாள்பட்ட நோயை சமாளிக்கவும் எனக்கு உதவியது. ஆண் ஆதிக்கம் கொண்ட வேலைச் சூழ்நிலையில் சவால்களை எதிர்கொள்கையில் நடனம் எனக்கு உதவிக்கரம் நீட்டியது. எனது உள்நோக்கிய பயணத்தில், பரதநாட்டியம் எனது மிகச் சிறந்த நண்பராக விளங்குகிறது. உடல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஊடகம் என்று தெரிந்து கொள்ள அது உதவியது, ஆனால் ஒருவரின் ஆழ்மனதை தொடுவதற்கு, அதற்கும் அப்பால் செல்ல வேண்டும்."

19ம் நூற்றாண்டு வரை பரத நாட்டியம் இந்து கோயில்களிலும் அரண்மனைகளிலும் பிரத்தியேக நடனமாக விளங்கியது. தஞ்சாவூர் மன்னர்களின் ஆட்சியில் கலைத் திறனின் உயர்வான இடத்தை எட்டியது. 20ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தேவதாசி முறை தடை செய்யப்பட்ட பின், பரதநாட்டியம் நகரங்களுக்குப் பரவியது மற்றும் இந்தியா முழுவதும் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் பிரசித்தி பெற்றது.

ருக்மிணி தேவி அருண்டேல் 1936 ஆம் ஆண்டில் சென்னை

T பாலசரஸ்வதி

மாகாணத்திலுள்ள கலாஷேத்ராவை உருவாக்கியதன் மூலம் பரதக் கலைக்கு புத்துயிரூட்டினார், இதுவே பரதநாட்டியம் கற்றுத் தரும் முதல் நடனப்பள்ளியாகவும் அமைந்தது. மிருனாலினி சாராபாய் அவர்களும் அகமதாபாதில் Darpana Academy of Performing Arts வாயிலாக பரதநாட்டியத்தை பிரபலப்படுத்தியதில் ஒரு முன்னோடியாக திகழ்ந்தார். தேவதாசி அல்லாத அமெரிக்காவைச் சேர்ந்த எஸ்தர் ஷேர்மண் என்னும் பெண் நடன கலைஞர் 1930இல் இந்தியா வந்து பாரம்பரிய பரதநாட்டிய கலையை கற்றுக்கொண்டார், அநேகமாக அவர்தான் இந்தக் கலையை உயிர்பெறச் செய்ததோடு இந்தியா மட்டுமல்லாது ஐரோப்பாவிலும் கலை நிகழ்ச்சிகளை நடத்திய, தேவதாசி அல்லாத முதல் நடனக் கலைஞராக இருந்தார். அவர் ராகினி தேவி என்றழைக்கப்பட்டார் மற்றும் அவர் நியூயார்க்கில் இந்திய பரதநாட்டியத்தைக் கற்றுத்தர ஒரு நடனப்பள்ளி தொடங்கினார்.

இந்தியாவை விட்டு வெளியே பரதநாட்டியம் ஆடிய முதல் இந்திய நடனக் கலைஞர் T பாலசரஸ்வதி ஆவார், உலக வரைபடத்தில் இந்திய கலாச்சார நடனத்தை இடம்பெறச் செய்தவரும் அவர்தான். இந்த அற்புதமான நடனக் கலைஞர்களின் நேர்மையான முயற்சிகளால் தான் இன்று நமது கலாச்சார நடனம் இந்தளவுக்கு புகழ் பெற்றுள்ளது. மதம், சமூகம் மற்றும் மொழித் தடைகளைத் தாண்டி பரதநாட்டியம் பல விதமான நடன பாணிகளாக உருவெடுத்து தனி மற்றும் குழு நடனங்களாக ஆடப்படுகிறது. அறிவாற்றல் நிறைந்த மற்றும் மாற்றமடைந்து வருகின்ற உலகளாவிய பார்வையாளர்களைக் கொள்ளை கொள்ளும் புதிய நடன முறைகளை உருவாக்குவதற்கு அறிவார்ந்த மற்றும் கலைத்திறன் சார்ந்த சவால்களை உருவாக்குவதால் நடனக்கலைஞர்கள் இதன் பக்கம் ஈர்க்கபடுகின்றனர். இன்று, பரதநாட்டியம் உலகம் முழுவதும் பரவலாக பெண் மற்றும் ஆண் நடன கலைஞர்களால் ஆடப்படுகின்ற நடனக் கலைகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

வடிவமைப்பு: S கிருஷ்ணமூர்த்தி

D 3054 பணிகளை பார்வையிட்ட TRF குழு

ரோட்டரி செய்திக் குழு

TRF மானிய உதவியில் D 3054 ஜெய்ப்பூர், அகமதாபாத் ஆகிய நகரங்களில் மேற்கொண்டு வரும் பணிகளை ரோட்டரி ஃபவுண்டேஷன் மண்டல மானியக் குழு அலுவலர் சந்திரா பாமர் (Chandra Palmer, Regional Grants Officer) ஆய்வு செய்தார். நான்கு நாட்கள் பயணம் மேற்கொண்ட அவர் உலகளாவிய நிதியுதவியைப் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும், சமுதாய மதிப்பீட்டுத் திட்டங்கள் குறித்தும் ரோட்டரி சங்கத்தினருடன் விவரித்தார்.

மாவட்ட ரோட்டரி ஃபவுண்டேஷன் கமிட்டியைச் சேர்ந்த ரமேஷ் அகர்வால் உடன் இருந்தார். அங்குள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளிக்கு மேலும் உபகரணங்களை அளிப்பதில் ரமேஷ் அகர்வால் இடம் பெற்றிருந்த தி ரோட்டரி ஃபவுண்டேஷனின் கமிட்டி பெரும் பங்காற்றியது. ரோட்டரி இன்டர்நேஷனலின் ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி (Arch Klumph Society) உறுப்பினர் சுரேஷ் போடர் மேற்கொண்ட சமூகத் திட்டத்தையும் பாமர் ஆய்வு செய்தார்.

கிராம் ஜெயத்புரா, தோட்ஸெர், போஜ்வாலா ஆகிய கிராமப் பகுதிகளில் உள்ள 11 பள்ளிக்கூடங்கள் எப்படி மிகப் பெரிய அளவில் மாற்றம் பெற்றன என்பதை அறிந்தார். ரோட்டரி ஃபவுண்டேஷன் மண்டல மானியக் குழு அலுவலர் சந்திரா பாமர் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தயாரிப்புப் பிரிவுக்குச் சென்று பார்வையிட்டார். செயற்கைக்கால் தயாரிப்புக்கு தி ரோட்டரி ஃபவுண்டேஷன் உலகளாவிய நிதியுதவி அளித்துள்ளது. பலனாளிகளைச் சந்தித்து விவாதித்த பாமர் செயற்கைக் கால் தயாரிப்பு குறித்து பணியாளர்கள் விவரித்தனர்.

இடதுபுறத்திலிருந்து: *ரொட்டேரியன் சுரேஷ் போத்தார், TRF மானிய அலுவலர் சந்திரா பாமர், கிரண் போத்தார் மற்றும் DRFC ரமேஷ் அகர்வால்.*

அகமதாபாத் நகரில், மானிய மேலாண்மை கருத்தரங்கில் சந்திரா பாமர் பேசினார். காந்திநகரில் உள்ள SMVS மருத்துவமனையை பார்வையிட்டார். விஜாப்பூர் ரோட்டரி சங்கத்தின் துணையோடு தி ரோட்டரி ஃபவுண்டேஷன் உதவியுடன் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட இருக்கிறது. ஹிம்மத் நகர் அருகில் அமைக்கப்பட்ட கழிவறைகளையும் பார்வையிட்டார்.

மாநாடு

உங்களுக்குத் தெரியாத ஜெர்மனி

ஜெர்மனிக்குப் செல்ல நினைக்கும் போது, சில காட்சிகள் மனதில் கடந்து போகும்: மியூனிக் நகரில் அக்டோபர் ஃபெஸ்ட், வியக்கத்தக்க ஆல்பைன் நிலப்பரப்புகள், அதன் பழைய நகரங்களுடன் கூடிய மனதை மயக்கும் சாலை. ஜூன் 1 முதல் 5 வரை ஹேம்பர்க்கில் நடக்க இருக்கும், 2019 ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில் பங்கேற்பவர்கள், அதே அளவுக்கு மனதை வசீகரிக்கக்கூடிய ஜெர்மனியின் மற்றொரு பக்கத்தைக் கண்டறிவார்கள்.

ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய துறைமுகத்தைக் கொண்டது ஹேம்பர்க் நகரம், காஸ்மோபொலிட்டன் தோற்றத்திற்குப் பெயர்பெற்றது. பகைநகரமான ஆம்ஸ்டர்டாம் செல்ல போதுமான சுரங்கங்களும் பாலங்களும் இந்த நகரத்தில் இருக்கிறது; நகரத்தின்

மையத்தில் கவனத்தைக் கவரும் இரண்டு ஏரிகள்; பல மைல்களுக்கு பறந்து இருக்கும் வடக்கு கடல் மற்றும் பால்டிக் கடற்கரைகளுக்கு எளிதாகச் செல்ல முடியும்.

ஹேம்பர்க்கில் லேடர்ஹோசன் தரித்த போல்கா நடனமாடுபவர்களை சந்திக்க வாய்ப்பிருக்காது, ஆனால் உலகத்தரமான கலையரங்கத்தைப் பார்க்கப் போகிறீர்கள்;சாப்பாட்டு மெனுவில் வைநெர் ஸ்க்னிட்ஜெல் இல்லாமல் போகலாம், ஆனால் கடல் உணவுகள் புதிதாகவும் ஏராளமாகவும் கிடைக்கும்; எல்பாவில் வந்திருக்கும் மிகப்பெரிய கப்பல்கள் உங்கள் கண்ணில் படும்போது, ரைனில் இருக்கும் கோட்டைகளைப் பற்றிய எண்ணங்கள் காணாமல் போகலாம்.

நிஜமாகவே, ஜெர்மனி சில மாறா உண்மை நிலைகளைக் கொண்டுள்ளது, ஹேம்பர்கிலும் கூட: உதாரணமாக, போக்குவரத்து சிறப்பாகவும், சுத்தமாகவும், பயணிக்க எளிதாகவுமிருக்கும். மாநாட்டுக்குச் செல்பவர்கள் பயன்படுத்துவதற்கும் எளிதாக இருக்கும். பதிவு செய்யும்போது அனைவற்றுக்குமான தொடர்பைக் கொண்ட போக்குவரத்துக்கான பாஸ் தான் இவற்றுக்கெல்லாம் காரணம்.

ஹேம்பர்க்கில் நடக்கும் 2019 ரோட்டரி மாநாட்டுக்கு *riconvention.org*ல் பதிவு செய்யுங்கள்!

கல்கத்தா தெற்கு சிட்டி வெள்ளி விழாக் கொண்டாட்டம்

ரோட்டரி செய்திக் குழு

RC கல்கத்தா தெற்கு சிட்டி (D 3291) வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் PRIP K R ரவீந்திரன், வானதி ரவீந்திரன் விருந்தினர்களாக பங்கேற்றனர்.

ரோட்டரி சங்கத்தின் 25 ஆண்டு சாதனைகளைப் படங்களுடன் விவரிக்கும் சிறப்பு மலரை (A Coffee Table book) PRIP K R ரவீந்திரன் வெளியிட்டு ரோட்டரி சங்கத்தின் பல் வேறு பணிகளைப் பாராட்டிப் பேசினார். அடுத்த 25 ஆண்டுகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் உங்களுக்கு நீங்களே சவால் விட்டு செயல்படுங்கள். அதன் மூலம் ஏராளமானோர் ஊக்கம் பெற்று ரோட்டரி பணிகளில் ஈடுபடுவார்கள் என்று அறிவுறுத்தினார்.

விழாவையொட்டி, நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த 25 சிறுவர்களை RC கல்கத்தா தெற்கு சிட்டி தத்தெடுத்து, கல்வி, விடுதிச் செலவுகளை ஏற்றுக் கொண்டது.

இந்தப் பணிகளுடன் சரோஜ் குப்தா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆய்வு நிறுவனத்தில் (Saroj Gupta Cancer Centre and Research Institute) ரேடியோ தெரபி இயந்திரமும், முர்ஷிதாபாத் பஹரம்பூரில் ரத்த தான மையமும் அமைக்கப்பட்டன. இந்தப் பணிகள் ரோட்டரி உலகளாவிய மானிய உதவியின் கீழ் ரூ.8 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டன.

விழாவில் PRIP KR ரவீந்திரன் பேசுகிறார். வானதி ரவீந்திரன் மற்றும் மருத்துவமனை செயலாளர் அஞ்சனா குப்தா உடன் உள்ளனர்.

மார்பகப் புற்றுநோய் சிகிச்சை நிதிக்காக ஆடை அலங்கார அணிவகுப்பு

ரோட்டரி செய்திக் குழு

RC மிதிலா (D 3250) வடக்கு பிகார் மிதிலா நகரில் ஆடை அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சியை நடத்தியது. மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஏழைப் பெண்களின் சிகிச்சைக்காக நிதி திரட்டும் நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது என்று டாக்டர் ரஞ்சனா ஆர். மிஸ்ரா தெரிவித்தார்.

'மிஸ் மிதிலாஞ்சல், திருமதி மிதிலாஞ்சல்', இந்நிகழ்ச்சி மிதிலா நகரின் கலை, பண்பாட்டு பாரம்பரியத்தைப் பிரதி பலிப்பதாக இருந்தது. பல்வேறு கட்டப் போட்டி களும் இறுதிச் சுற்று நிகழ்ச்சியும் இதர ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து மாவட்டம் முழுவதும் 45 நாட்கள் நடந்தது. மாஜிஸ்திரேட் சந்திரசேகர சிங், ரோட்டரி மாவட்ட ஆளுநர் விவேக்குமார் விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

இந்தப் பகுதி பெண் களுக்குத் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகையிலும் தங்களது மனத் தடை களை உடைத்து வெளியே வருவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக மாவட்ட ஆளுநர் விவேக் குமார் கூறினார்.

பணியிடத்தில் பூரண ஆரோக்கியம்

ஷீலா நம்பியார்

நோயில்லாமல் இருப்பது தான் ஆரோக்கியம் என்று இல்லை.

வேலைக்குச் செல்பவருக்கு ஆரோக்கியம் என்பது உடற்பயிற்சி மற்றும் ஜிம்மிற்கு செல்வது மட்டுமல்ல. வழக்கமான வேலை முறையை எப்படி திட்டமிட்டுச் செயல்படுத்துவதில் தொடங்கி சரியான உணவைச் சாப்பிடுதல், தன்னம்பிக்கையையும் திறமையையும் வளர்த்துக்கொள்வது மற்றும் மிக முக்கியமாக மன அழுத்தம், மனச்சோர்வு மற்றும் பதற்றத்தைக் கட்டுப்படுத்துவது வரை அனைத்தையும் உள்ளடக்கியது. ஆக்கப்பூர்வமானவராகவும், வெற்றிகரமானவராகவும் இருக்க நினைக்கின்ற ஒவ்வொருவருக்கும், உடற்தகுதி, உணவு மற்றும் வாழ்க்கை முறை மாற்றம் போன்றவற்றைப் பயன்படுத்தி உடல் பருமன், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் கரோனரி இதய நோய்கள் போன்ற வாழ்க்கைமுறை சார்ந்த நோய்களைத் தடுப்பது முதன்மையானதாக இருக்க வேண்டும்.

உங்கள் வேலை நேரத்தை பாதிப்பதாகவும் அந்த நேரத்தில் நீங்கள் கணக்கு வழக்கு பார்க்கவோ, கிளைன்ட்/நோயாளிகள் அல்லது ஒரு வியாபாரத்தை முடிக்கவோ பயன்படுத்தலாம் என்று நீங்கள் நம்பலாம். இது போன்ற செயல்களில் நீங்கள் திறனுடன் செயல்படவேண்டும் என்றால், உங்கள் பணியில் உடல், மனம் மற்றும் உணர்வுரீதியாகவும் நீங்கள் மேம்பட்டு இருப்பது ரொம்ப அவசியமானது. தெளிவான சிந்தனை, திறமை, சுறுசுறுப்பு, நேர்மறை எண்ணம், மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் திறன் போன்றவை சிறப்பான வேலையைச் செய்வதற்கும் தொழில் வளர்ச்சிக்கும் முக்கியமாகும்.

உணவுத் திட்டம்

ஆரோக்கியமாக உண்ணுவது என்பது ஒரு இனம் மற்றும் சமூகம் சார்ந்த விவகாரம். சில நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு வளாக உணவகத்தில் உணவுகளை வழங்குகிறது. இந்த மாதிரி சூழலில், ஆரோக்கியமான உணவுகளை கிடைக்கச்செய்வது அந்த நிறுவனத்தின் பொறுப்பாகும்.

இந்த மாதிரியான வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்றாலோ அல்லது ஒருவருடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்றபடி இல்லையென்றாலோ, நம்மால் செய்ய முடிந்தது வீட்டிலிருந்து உணவை எடுத்துவருவது தான். வெளியூர் செல்லும்போது ஆரோக்கியமான உணவு சாப்பிடுவது தான் முக்கிய நோக்கம் என்றால் நம்முடைய உணவில் நாம் ஒரு மாற்றம் செய்ய வேண்டும், அதாவது மாறுபட்ட வடிவில் (முழு கோதுமையில் தயாரித்தது மற்றும் காய்கறிகள்/ பன்னீர், டோஃபு அல்லது பீன்ஸ்/லேகும்ஸ் சேர்க்கப்பட்ட சாய் ரொட்டிகள்), பழங்கள் அல்லது கொட்டைகளை நொறுக்குத் தீனியாகவும், ஒரு நிறுவனம் சார்பாக வெளியில் செல்லும் போது, சிப்ஸ், இனிப்பான தேநீர் மற்றும் காஃபி போன்றவற்றைத் தவிர்த்து, ஒரு மாவுப் பண்டத்துடன் சிக்கன் / சூரை மீன், ஹம்மஸ் / டோஃபு அல்லது ஒரு கோப்பை சூப்போ தேர்வு செய்யலாம். சரியான உணவுகளைத் தேர்ந்தெடுப்பதில் ஒருவர் அலட்சியம் காட்டினால் மாவினால் செய்த துரித உணவு மற்றும் வீட்டு/ஆபிஸ் டெலிவரி சிஸ்டம் கலோரி அதிகமுள்ளதையும் ஊட்டச் சத்து குறைவாக இருக்கும் உணவையும் சாப்பிடுவதற்கு ஊக்கப்படுத்துகிறது. இதற்காக, ஒவ்வொருவரும் ஆரோக்கியமாக சாப்பிடுவதைப் பற்றிய அடிப்படையைத் தெரிந்துகொள்ள வேண்டும், அதன்பின்பு வீட்டை விட்டு வெளியே தங்கியிருந்தாலும் கூட அவர் எண்ணற்ற வாய்ப்புகளைத் தெரிந்து கொள்வார்.

உடல்திடம்

ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் பொருத்தமான உடல்திடத்தைக் கொண்டிருப்பதால் அவருடைய கவனம், ஆற்றல் நிலைகள் மற்றும் பணித் திறன் ஆகியவை அதிகரிக்கிறது; அத்துடன் நம்மை இன்று அதிகம் பாதிக்கின்ற தூக்கமின்மை, மனச் சோர்வு, நாள் பட்ட அசதி, உடற்பருமன் மற்றும் பல்வேறு கோளாறுகளை எதிர்கொண்டு போராடவும் உதவுகிறது என்று ஆராய்ச்சி முடிவுகள் நிரூபித்துள்ளன.

உடற்பயிற்சி செய்வதற்கான வசதிகள் மேல்நாடுகளிலும் இந்தியாவிலும் உள்ள கார்ப்பரேட் நிறுவனங்களின் உள்ளேயே அமைக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு நிறுவனங்களில்

நடத்தப்பட்ட ஆய்விற்குப் பின்பு, உடல்திடத்துக்கான செயல்பாடுகளில் தினமும் பங்கேடுப்பவர்கள் வேலைக்கு விடுப்பு எடுப்பது குறைவாக இருக்கிறது என்பதும், சிறந்த தூக்கம், சிறந்த மன அழுத்த நிர்வகிப்பு இவற்றுடன் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும் ஊழியர்களின் மருத்துவ செலவுகள் மிக குறைந்திருப்பதும் மற்றும் அவர்களுடைய சுறுசுறுப்பும் பணியின் தரமும் அதிகரிக்கிறது என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. பெங்களூரு இன்ஃபோசிஸ் நிறுவனம் 10,000 சதுர அடி பரப்பளவு கொண்ட ஜிம்னாஸியம் வைத்திருக்கிறது, ஹுண்டாய் மோட்டார் இந்தியா, டெல்லியில் உள்ள LG தொழிற் சாலை போன்ற இந்திய நிறுவனங்கள் தங்களுடைய பணியிடத்திலே வசதியான உடற்பயிற்சி மையங்களை வைத்திருக்கிறது

சில கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களுக்கு உபரிச் சலுகைகளில் ஒன்றாக, உடற்பயிற்சி மையத்தைப் பயன்படுத்துவதையும் சேர்க்கிறது. இது முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பாக இருப்பதால், மருத்துவ காப்பீட்டை விடவோ அல்லது உடல்நலச் சோதனையை விடவோ இது மிகச் சிறந்ததாக இருக்கிறது இல்லையா? அவ்வாறு இருப்பதாக சில நிறுவனங்கள் இதை கண்டறிந்துள்ளன. குறிப்பாக பெரும்பாலும் உட்கார்ந்தே பணிசெய்பவர்கள் தங்களுடைய உடற்பயிற்சியை தங்களுடைய அன்றாடப் பழக்கங்களில் ஒன்றாகச் சேர்க்கும்போது, தேய்மான நோய்கள், உடற்பருமன், கரோனரி இதய நோய்கள், ஆழ் சிரை இரத்தக்கட்டி (இரத்தம் உறைதல்), போன்றவை வராமல் காப்பது சாத்தியம்.

எனினும் ஊழியர்களின் இணக்கக் குறைபாட்டை சரிசெய்ய ஒரு உடற்பயிற்சி மையத்தைப் பயன்படுத்துவது மட்டுமே தீர்வு ஆகாது. சரியான வழிகாட்டலும் ஊக்கமும் அவசியமானது. அனைத்து உபகரணங்களுடன் கூடிய ஜிம், நீராவி குளியல் மற்றும் நீச்சல் குளம் அல்லது டென்னிஸ் கோர்ட் போன்றவற்றை அமைப்பது இந்த பிரச்சனையின் ஒரு பாகம் தான். உடற்பயிற்சி நடைமுறைப்படுத்துவதையும் உறுதி செய்வது தான் ரொம்ப முக்கியம். ஊழியர்கள் ''பாதுகாப்பாக'' இந்த வசதிகளைப் பயன்படுத்தச் செய்வது என்பது ஒரு வல்லுனரின் சரியான வழிகாட்டலுக்கும், மேல்தட்டு நிர்வாகத்துக்கும் கிடைத்த வெற்றியே. உடற்பயிற்சிகளில் ஊழியர்களை பங்கெடுக்கச் செய்ய வளாகத்திற்குள் ஒரு தேர்ச்சி பெற்ற பயிற்சியாளரை வைத்திருப்பதோ அல்லது அடிக்கடி உடற்பயிற்சி வகுப்புகளை நடத்துவதோ தான் அவர்களை ஊக்கப்படுத்தும் வழிகள்.

தினசரி உடற்பயிற்சித் திட்டங்களில் ஊழியர்கள் பங்கெடுப்பதும் அதற்கான நேரத்தை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதும் ஆரம்பத்தில் அவசியமாக இருக்கலாம். ஏற்கனவே நெருக்கடியாக இருக்கும் நாளில் ஒரு 16 - மணிநேர பணிச்சுமையுடன் உடற்பயிற்சியை இணைப்பது சரியில்லாமல் இருக்கலாம்.

உயர்நிலை ஊழியர்கள், CEOகள் மற்றும் டைரக்டர்கள் தங்கள் உடல்நலத்தை மேம்படுத்த ஆர்வத்துடன் இருக்கும்போது, அவர்கள் தங்களின் ஊழியர்களுக்கு ஒரு ஊக்குவிப்பவர்களாக இருப்பார்கள். நீங்கள் முன்மாதிரியாக இருந்தால் மற்றவர்களும் அதைப் பின்பற்றுவார்கள்.

மகிழ்ச்சியான பணியிடத்திற்கு உங்கள் பணியை நேசிப்பது தான் முக்கிய காரணி என்பது நாம் அனைவரும் அறிந்ததே. எனினும் கேளிக்கையாகவும் மகிழ்ச்சியாகவும் எப்போதும் இருக்க முடியாது. வேலை என்பது எப்போதும் அனைத்து சவால்களும் நிறைந்த ஒரு அழுத்தமாக இருக்கும். சில நேரங்களில் இது வெறுமனே சலிப்படையச் செய்வதாகவும் இருக்கலாம்.

பணிச்சுமை தளர்வடையச் செய்யும் போது எப்படி அழுத்தத்திலிருந்து மீண்டு வருவது என்பதை கற்றுக் கொடுக்க வேண்டும். தினசரி யோகா வகுப்புகள், சிறிதுநேர மூச்சு மற்றும் தளர்வுப் பயிற்சிகள், தசை வளர்ச்சிக்கான ஓய்வு, ஆத்ம தியானம், மன அழுத்த மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்த வழக்கமான பயிற்சிப் பட்டறைகள் போன்றவை ஊழியர்களை உளவியல் ரீதியாக ஆரோக்கியமாக வைக்கும்.

பணி செய்வதற்கு இது போன்ற வசதிகளைத் தருவதால் ஏற்படும் பொருளாதார பலன்கள் மறுக்கமுடியாதவை. ஒரு ஆரோக்கியமில்லாத பணியாளர் நிறுவனத்திற்கு சொத்தாக இருப்பதை விட கடனாகத் தான் இருப்பார். இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, இதைத் தடுப்பதை நோக்கிச் செயல்படுவது தான் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பலனளிப்பதாக அமையும். ஊழியர்களுக்கு மருத்துவக் காப்பீட்டைத் தருகின்ற அதே நேரம், அந்த நோய்கள் வராமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது கூட பயனளிப்பதாக இருக்கும். இது பொருளாதார ரீதியாக பலனளிப்பது மட்டுமல்லாமல் சுறுசுறுப்புடன் கூடிய மனநிறைவான வேலையையும் உருவாக்க முடியும்.

ஒருவரின் உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற் கான இறுதி முடிவும் பொறுப்பும் சம்பந்தப்பட்டரைச் சார்ந்தே இருக்கிறது. அத்தகைய வாழ்க்கை முறையை ஊக்குவிக்கிற ஒரு தொழில்முறை வழிகாட்டியையும் ஒரு சாதகமான சூழலையும் பணியிடத்தில் கொண்டிருப்பது கூடுதல் பலனளிப்பதாகவே இருக்கும். இது போன்ற நிறுவனத்தில் வேலை செய்ய உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், இது உங்களுக்குக் கிடைத்த போனஸ் என்று நினைத்துக் கொள்ளுங்கள். பிரிட்டிஷ் அரசியல்வாதி எட்வர்ட் ஸ்டான்லி சொன்னதை மனதில் வைப்போம்: ''உடற்பயிற்சிக்கான நேரம் இல்லை என்று நினைப்பவர்கள் கூடிய விரைவிலோ அல்லது பின்னரோ நோய்க்கான நேரத்தை கண்டறிவார்கள்.''

மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவர், உடல்நிலை-வாழ்க்கைமுறை ஆலோசகரான ஆசிரியர், இரண்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளார்: கெட் சைஸ் வைஸ்; கெயின் டூ லாஸ்
www.drsheela.nambiar.com

Wordsworld

நூலகங்கள் மனத்துக்கு இதமானவை

சந்தியா ராவ்

அறிவே எல்லைகள் கடந்த ஆற்றல்,
நூலகங்கள் அறிவாற்றலின் இல்லங்கள்

எனது தாய்வழிப் பாட்டனார் ஒரு டாக்டர். அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு சென்னை ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் நடத்தி வந்த மருத்துவமனையில் பணி புரிந்து வந்தார். நான் அப்போது பள்ளி மாணவி. ஒவ்வொரு முறை விடுமுறையின்போது தாத்தா பாட்டி வீட்டுக்குச் சென்றால், தாத்தாவுடன் கிளினிக்கும் சென்றுவிடுவேன். மருத்துவமனையில் அவர் நோயாளிகளைப் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டால், நான் உடனே அங்கேயிருக்கும் நூலகத்துக்குச் சென்றுவிடுவேன்.

கிளினிக் வளாகம் மிகப் பெரிதாக எனக்குத் தெரியும், அந்த நூலகமோ ஏதோ அதல பாதாளத்தில் இருப்பதாகத் தோற்றமளிக்கும். தாத்தாவுடன் கிளினிக்குக்கு முதல் முறையாக நான் சென்றபோது, என்னை நூலகத்தில் விட்டுவிட்டு பணியில் ஈடுபடுவார். அங்கே காவி உடையணிந்த சாமியார் தான் நூலகர். மறுநாளிலிருந்து ஏதோ நூலகமே நமக்குச் சொந்தம் போல நினைத்துக் கொண்டு, நானே நேரடியாக அங்கே சென்றுவிடுவேன். அங்கே என்னைப் போல் குழந்தைகள் யாரும் இல்லை. சாமியார்கள்தான் இருந்தார்கள். நூலகத்தில் நுழைந்து

சென்னையின் கன்னிமரா பொது நூலகம்.

புத்தக அலமாரிகளையெல்லாம் ரொம்ப அமைதியாகப் பார்ப்பார்கள். அங்கே ஒரு குழந்தை புத்தகங்களை எடுத்துப் படிக்கிறதே, தரையில் படுத்துக் கொண்டிருக்கிறதே என்று யாரும் கவனிக்கவே மாட்டார்கள். அப்படியானால், பார்த்துக் கொள்ளுங்கள் அங்கே என்ன மாதிரி புத்தகங்கள் இருக்கின்றன என்பதை! தத்துவம், வேதாந்தம் பற்றியதுதான். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹாம்சர், ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் பற்றிய புத்தகங்கள்... மகான்கள், மேதைகளின் புத்தகங்கள்... எல்லாம் புரியாத மொழியில் இருக்கும். ஓரிரண்டு புத்தகங்கள் ஏதோ தெரிந்த மாதிரி இருக்கும். 11, 12 வயது குழந்தைக்கு ஏற்ற மாதிரி எதுவும் இல்லை. நான் புத்தகப் புழு என்பதால் ஏதாவது படிப்பேன். ராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோர் பற்றிய நூல்களைப் படித்தேன். நூல்களையெல்லாம் மறந்துவிட்டேன், நூலகத்தை மறக்கவில்லை!

சிறுவர்களாக நாங்கள் வளர்ந்தது மேற்கு வங்கத்தில் ஒரு சிறிய நகரில். நானும், நண்பர்களும் குருவி சேர்க்கிற மாதிரி பணம் சேர்த்து நூலகத்தைத் தொடங்கினோம். நூலகத்தைப் பற்றி எதுவும் தெரியாது. 10 காசு, 25 காசு என்று புத்தகத்தை வாடகைக்குக் கொடுத்தோம். நூலகத்தில் புத்தகம் இரவல் வாங்குவது ஏதோ சமூகத்தில் பெரிய அந்தஸ்து போல... அதிலே அப்போதெல்லாம் சிறுவர்கள் மத்தியில் பிரபலமாக இருந்த "ஃபேமஸ் ஃபைவ்ஸ்' (Famous Fives) அல்லது "பிகிள்ஸ்' (Biggles) போன்ற புத்தகங்களை யார் அதிகம் படித்தார்கள் என்று போட்டியே வரும். பக்கத்தில் குடியிருந்த ஒருவர்தான் தான் குடியிருந்த வீட்டின் ஒரு அறையை நூலகத்துக்காகக் கொடுத்திருந்தார். எங்களுக்காக பாட்மின்டன் கோர்ட் கூட தயார் செய்து கொடுத்தார்.

நூலகத்தில் புத்தகங்களை எப்படி வரிசைப்படுத்துவது, அடுக்குவது என்பதற்கான ஒரு வழிமுறையை உருவாக்கியவர் அமெரிக்காவின் நூலக மேதை மெல்வில் டேவி (Melvil Dewey) என்பவர். அவரது முறைதான் உலகில் நூலகங்கள் பின்பற்றுகின்றன. அதன் வழியில் நூல்களை எங்கே

தேடுவது, எப்படி வைப்பது என்று தெரிந்துகொண்டோம். மெல்வில் டேவிக்கு முன் நூலகங்களில் எந்தப் புத்தகம் முதல் கிடைக்கிறதோ அதை முதலில் வைப்பார்கள். சப்ஜெக்ட் முறையெல்லாம் கிடையாது. இதனால், குழப்பமே மிஞ்சியது. 1876ம் ஆண்டு மெல்வில் டேவி நூலகம் நடத்த ஒழுங்குமுறையைக் கொண்டுவந்த பிறகுதான் எல்லாம் மாறியது.

ஆனால், நூலகம் நடத்துவதை ஒழுங்குபடுத்தியது டேவி மட்டுமல்ல, எஸ்.ஆர். ரங்கநாதனைச் சொல்ல வேண்டும். சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1923ம் ஆண்டு கணிதப் பேராசிரியராக இருந்த அவர்தான் முறையில் இருந்த குறைபாடுகளையும் களைந்தார். பல்கலைக்கழகத்தில் நூலகராகவும் இருந்தார். ஆரம்பத்தில் புத்தகங்களை ஒழுங்குபடுத்துவது அலுப்பாக இருந்தது. பேசாமல் கணிதப் பாடம் நடத்தும் ஆசிரியராகப் போய்விடலாம் என்று பார்த்தார்.

அப்போது, பல்கலைக்கழகம் அவருக்கு ஒரு வழி சொன்னது. லண்டனில் உள்ள பல்கலைக்கழகக் கல்லூரியின் நூலகத்துக்குச் சென்று பார்த்து, அதன் நடைமுறையை இங்கே அமல்படுத்த முடியுமா என்று பாருங்கள், இல்லாவிட்டால், கணிதப் பேராசிரியராகப் பணி செய்யலாம்.. என்ற யோசனை கூறப்பட்டது. ஏற்றுக் கொண்டார் ரங்கநாதன். அதைப் பிடித்துக் கொண்டார்.

லண்டன் சென்ற அவர் தனது கணித மூளையையும் பயன்படுத்தினார். டேவி முறையில் இருந்த குறைபாடுகளையெல்லாம் நீக்கி புத்தகங்களை வகைப்படுத்துவது, அடுக்கி வைப்பது, அட்டவணை தயாரிப்பது எல்லாவற்றுக்கும் புதிய வழிகளைக் கண்டறிந்து இந்தியா திரும்பினார். கப்பலில் திரும்பிக் கொண்டிருந்தபோது, அதில் இருந்த நூலகத்தையும் ஒழுங்குபடுத்தினார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் 20 ஆண்டுகள் நூலகராக பணியை அளித்தார். எஸ்.ஆர். ரங்கநாதன் இந்தியாவின் நூலகத் தந்தை என்று போற்றப்படுகிறார்.

இன்றைக்கும் பல பள்ளிகளில் நூலகங்களே இல்லை. பழைய முறைப்படி பைண்ட் செய்யப்பட்டு ஒரே நிறத்தில் அடுக்கி வைக்கப்படும் நூல்கள் பல இடங்களில் உள்ளன. அலமாரியைப் பார்த்தால் என்ன புத்தகம் என்று தெரியாது.

சென்னையில் உள்ள கன்னிமரா நூலகத்தில் அலமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் நூல்களைப் பார்த்தால், வசீகரிக்கிற மாதிரியே இருக்காது. ஆனால், அத்தனையும் பொக்கிஷங்கள்! பொறுமையாகத் தேடிப் பார்த்தால், நல்ல புத்தகங்களைத் தேடலாம். 1896ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நூலகத்தில் இந்தியாவில் வெளியாகும் எல்லா புத்தகங்களின் பிரதிகளும், பத்திரிகைகள், இதழ்கள், ஏடுகளும் கிடைக்கின்றன.

ஜேனட் வின்டர் (Jeanette Winter) என்பவர் தி லைப்ரேரியன் ஆஃப் பாஸ்ரா (The Librarian of Basra) நூலகங்களின் அறிவியல் மதிப்பீட்டை ஓவியங்களுடன் விளக்கியுள்ளார். அது ஓர் உண்மைக் கதை. இராக் நாட்டில் பாஸ்ரா நகரில் இருந்த ஆலியா முகமது பக்கர் (Alia Muhammad Baker) என்ற நூலகரைப் பற்றியது. போர் நடைபெற்றபோது, கொள்ளைக்காரர்கள் சூறையாடுவதற்கு முன்பே, அவர் அந்த நூலகத்தில் இருந்த புத்தகங்களை மிகவும் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டார்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஆசியாவின் மிகப் பெரிய நூலகமாகப் போற்றப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகம் 1981ம் ஆண்டு ஜூன் 1ம் தேதி தீக்கிரையாக்கப்பட்டது. அதில் 97 ஆயிரம் புத்தகங்கள் எரிந்து சாம்பலாயின. இது போரில் நடக்கும்

நூலக மேதை மெல்வில் டேவி

மிகக் கோரமான வன்முறைதான்! தற்போது அந்த நூலகம் கட்டி எழுப்பப்பட்டுவிட்டாலும், அரிய வகை நூல்கள், ஓலைச் சுவடிகள் நாசமாகிவிட்டது சோகம்தான்!

நூலகங்களுக்கு மனத்தில் இடம் உண்டு. அதுவும் அமைதியான மனத்தில் அதற்குத் தனி இடம் உண்டு. நூலகங்கள் பல நூற்றாண்டுகளாக இருக்கும் மனிதர்களின் சிந்தனைகள் கொண்ட கருவூலங்கள். அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் நூல்களைப் படிப்பது உற்சாகமும் சக்தியும் தரும்.

அதனால்தான் சர்வாதிகாரிகள், ஆக்கிரமிப்பாளர்கள், வெறியர்கள் புத்தகங்களையும், நூல்களையும் கண்டு அழிக்கிறார்கள். காரணம், அவற்றின் அறிவு மக்களிடையே விழிப்பு ஏற்படுத்தும் என்ற அச்சம்தான். அதனால்தான் நூலகங்களையும் புத்தகங்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அதற்குச் வழி நூலகங்களுக்குச் சென்று புத்தகங்களைப் படிக்குமாறு தூண்டவேண்டும்.

ஆம்! ஒருமுறை விவாதத்தில் நான் பங்கேற்றபோது, ஒரு பள்ளி ஆசிரியர் துணை முதல்வர் குழந்தைகளிடம் புத்தகங்களைக் கொடுக்கக் கூடாது, அவர்கள் கிழித்துவிடுகிறார்கள் என்று கூறினார். அதை மறுக்கும் வகையில் இன்னொருவர், அப்படி புத்தகங்களைக் கையாண்டு கிழிப்பதை வைத்துத்தான் நூலகங்களை மதிப்பிட வேண்டும். அதிகமான புத்தகம் கையாண்டால்தான் அது சிறந்த நூலகம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் குழந்தைகள் புத்தகம் படிப்பதற்கு அடையாளம்! என்று பதிலடி கொடுத்தார்.

Subscribe NOW!

Annual Subscription
India
Rs.420

for Rotary News Print Version & e- Version

For the Rotary year 2018 – 2019

Print version ☐ **e- Version** ☐

No. of copies

Rotary News (English) ☐

Rotary Samachar (Hindi) ☐

For every new member the pro-rata is Rs 35 a month.

As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.

Please attach the TYPED list of individual members with their complete address and PIN Code. Intimate language preference (English / Hindi) against each member's name. Please do not send the Semi-annual Report for address list.

Rotary Club of ..... RI District .....

Name of the President/Secretary .....

Address .....

.....

.....

City ..... State ..... PIN ☐☐☐☐☐☐

STD Code ..... Phone: Off. ..... Res. .....

Mobile .....E-mail .....

Cheque/DD No. ..... Dated ..... for Rs. .....

Drawn on .....

in favour of "**ROTARY NEWS TRUST**" payable at CHENNAI is enclosed.

Date: President/Secretary

Mail this form to:
Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

Subscription norms

1. Subscription is for the Rotary year (July to June).
2. **It is mandatory for every Rotarian to subscribe to a Rotary magazine.**
3. The annual subscription for the magazine is Rs 420 per member.
4. Subscription for the full year must be sent in July, in the prescribed form.
5. Those joining after July can pay only for the remaining Rotary year at Rs 35 an issue.
6. Subscription account of the club with *Rotary News* is a running account and does not cease at the end of June every year.
7. Names of all members, with their complete postal address with **PIN CODE** must be typed and sent along with the form and DD/cheques payable at par.
8. Copies of Semi Annual Report **SHOULD NOT** be sent as address list.
9. Language preference (English or Hindi) should be stated alongside member's name.
10. **Members, please ensure that your name is included in the Subcribers' list that your club sends us. Often, names of members who have paid their subscription, are left out from the club list.**
11. Clubs must inform *Rotary News* about reduction in number of members, if any, before or in May. Please help reduce wastage of copies.
12. Clubs are liable to pay for the number of magazines we despatch according to the list available at Rotary News Trust.
13. Unpaid dues of the club will be shown as outstanding against the club. Any payment received subsequently will be adjusted against earlier dues.
14. **Clubs with subscription arrears will be notified to RI and may face possible suspension.**
15. We are in the process of tallying our subscriber list with RI membership from India.
16. If you want to switch to *The Rotarian*, please do so. But inform us **immediately** to avoid receipt of *Rotary News*. Or else your club will have to pay for it.

ஒடிசாவில் கழிவறைகள் பற்றிய விழிப்புணர்வு

ஜி சிங்

அக்ஷய் குமார் மற்றும் புமி பட்நேகர் நடித்த டாய்லெட்-ஏக் பிரேம் கதா என்ற பாலிவுட் படம், திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் அபாயத்தைக் காட்டியது, மேலும் தங்களின் பகுதியில் மக்கள் கழிவறைகளைக் கட்டுவதற்கும் அவற்றைப் பயன்படுத்துவதற்குமான உணர்வைக் கொடுக்கவும் முயன்றது.

நகரத்தின் ஜொலிப்பை அறியாத ஒடிசாவின் டியோகார்க் மாவட்டத்தில் உள்ள பார்கோடே என்ற குக்கிராமத்தில் பெண்கள் குழு தங்களுடைய வீடுகளுக்கு நிரந்தர கழிவறைகள் அமைப்பதற்கான முயற்சியை எடுத்துள்ளனர். மூன்றுவருட கடுமையான உழைப்பிற்கு பின்னர், கிட்டத்தட்ட அனைத்து குடும்பங்களுக்கும் கழிவறை கிடைத்துள்ளது. மேலும் ஒடிசா அரசாங்கம் டியோகார்க்கை, மாநிலத்தில் திறந்தவெளி மலம் கழிக்காத (ODF) முதல் மாவட்டம் என்று அறிவிக்கவும் அவர்களின் முயற்சி உதவியது.

திறந்தவெளியில் மலம் கழிப்பதற்கு எதிராக விழிப்புணர்வை உருவாக்கக் கடுமையாக உழைத்திருக்கிறார் ஆர்த்தி பிஸ்வால். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, இவர் விதைத்த விதையால் அவரின் செயலுக்கு ஆதரவாக நிறைய பெண்கள் வந்துள்ளனர். எனினும் மக்கள் இவரின் பேச்சை கேட்க மறுத்ததால், ஆரம்பத்தில் இது முடியாத செயலாக இருந்ததாக அவர் தெரிவித்தார். "திறந்த வெளி மலம் கழிப்பதால் ஏற்படும் தீங்குகளைப் பற்றி கேட்க மறுத்த கிராம மக்கள், என்னை வார்த்தைகளால் அவமானப்படுத்திய நாட்கள் இப்போதும் என் ஞாபகத்திற்கு வருகிறது. சில கிராமப்புறப் பெண்கள் குறிப்பாக புதிதாக திருமணமாகி வந்தவர்கள் திறந்தவெளிக்குச் செல்ல கூச்சப்பட்டு இருந்தது தான் ஒரு நம்பிக்கை கொடுத்த விஷயமாக இருந்தது. பிறகு நான் திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் உடல்நலத் தீங்குகளைப் பற்றி கேட்பதில் ஆர்வமாக இருந்த பெண்களை அணுகினேன்," என்றார்.

ஒரு அங்கன்வாடிப் பணியாளராக இருப்பதால், அரசாங்க அதிகாரிகள் இவரிடம் பார்கோடே கிராமத்தில் திறந்த வெளி மலம் கழிப்பதற்கு எதிரான ஒரு விழிப்புணர்வை உருவாக்கமாறு கேட்டுக் கொண்டனர். இவரின்

கிராமப்புறப் பெண்கள் வீடுகளில் கழிவறைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆண்களை சம்மதிக்க வைப்பதில் வெற்றி பெறும் வரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

முயற்சிக்கு JEETA அறக்கட்டளையின் தன்னார்வலர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

இயற்கை உபாதையைக் கழிக்க திறந்த வெளியில் செல்வதால் ஏற்படும் ஆபத்துக்களை அதிகளவு பெண்கள் புரிந்துகொண்டதால், 2014 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்வச் பாரத் திட்டத்தின் (SBM) கீழ் அரசாங்கம் வழங்கிய 12,000 ரூபாய் பணத்தைக்கொண்டு, பொதுக் கழிவறையைக் கட்ட குடும்பத்தில் உள்ள ஆண்களுக்கு அழுத்தம் தர ஆரம்பித்தனர் என்று ஆர்த்தி கூறுகிறார். கழிவறை கட்டுவதற்கு மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்கீடு 60:40 ஆகும்.

விரைவில் திறந்த வெளி மலம் கழித்தலுக்கு எதிரான பிரசார பீரங்கியாக இந்த கிராமப்புற பெண்கள் மாறினார்கள். 2014 ஆம் ஆண்டில், இந்த மாவட்டத்தில் 698 கிராமங்களில் உள்ள 71,000 குடும்பங்களில் வெறும் 11 சதவீதம் பேரிடம் மட்டுமே கழிவறைகள் இருந்தன. அடுத்த இரண்டரை வருடத்தில், டியோகார்க் மாநகராட்சி (DMC), 67,061 கழிவறைகளைக் கட்டிக்கொடுத்து ஒடிசாவில் திறந்தவெளி மலம் கழிக்காத (ODF) முதல் மாவட்டமாக மாற்றியது. இதற்கான முறையான அறிவிப்பு ஆகஸ்ட் 2, 2017 அன்று மாநில அரசால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பரகோடேவில் வசிக்கும் ரீனா குமார் சஹூ (37) என்ற குடும்பத் தலைவி, இரண்டு வருடங்களுக்கு முன்பு அவரும் அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களும் திறந்தவெளியில் மலம் கழித்ததாகவும், ஆனால் கழிவறைகள் கட்டியபின்பு இயற்கை உபாதையை கழிக்க நினைக்கும் போதெல்லாம், பயன்படுத்தவதால் தங்கள் வாழ்க்கையே மாறியிருப்ப தாகவும் சொல்கிறார். "முன்பெல்லாம் காலைக்கடனைக் கழிக்க அதிகாலையிலேயே எழுவோம். கள்ளத்தனமாகப் பார்ப்பவர்கள் தவிர, வயல்களில் ஊர்வன மற்றும் பாம்புகள் சுதந்திரமாக உலவுவதால் ஆபத்து இருக்கும், சில சமயம் எங்கள் வீடுகளுக்குள் வந்துவிடும். கழிவறை கட்டியபின்பு ஒரு நாளில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும் என்பதால் எங்களுக்கு நிம்மதி வந்திருக்கிறது" என்று சிரிப்புடன் சொல்கிறார்.

மூத்த குடிமக்கள் மற்றும் புதிதாக திருமணம் ஆனவர்களும் கழிவறை கட்டுவதை வரவேற்கின்றனர், இது முன்னமே கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் சொல்கின்றனர். "நான் திருமணம் ஆகி, இங்கே வந்த போது என் வயது வெறும் 20 தான். அந்த நாட்களில் கழிவறைக்காக பேசுவதைக் கூட நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. வழக்கமாக அதிகாலை நேரத்தில் ஆண்கள் தூங்கிக்கொண்டிருக்கும் போது நாங்கள் வெளியே செல்லவேண்டும். ஆனால் எங்களை ஒரு பாம்பு கடிப்பதோ அல்லது ஒரு காட்டு விலங்கு தாக்கும் என்ற அபாயமோ தான் எங்கள் மனதில் ஓடிக்கொண்டே இருக்கும். கிராமப்புறப் பெண்கள் அடிப்படைத் தேவைகளுக்காக போராட முடிவெடுத்து, வீடுகளில் கழிவறைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆண்களைச் சம்மதிக்க வைப்பதில் வெற்றி பெறும் வரை, இது ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கொண்டுதான் இருந்தது," என்கிறார் 70 வயதான குடும்பத் தலைவி நிலோத்மா சஹூ.

கடந்த வருடம் திருமணமான பஜ்ஞந்தினி பிஸ்வாஸ் (22), இந்த கிராமத்தில் கழிவறையே இல்லை எனத் தெரிய வந்த போது அதிர்ச்சியானதாகவும், அதன் பின்பு அவரின் புகுந்த வீட்டு பெற்றோர் இதைக் கட்ட முடிவெடுத்த போது நிம்மதியடைந்ததாகவும், "என்னுடைய கணவரும் அவரின் பெற்றோர்களும் என்னுடைய கவலையைப் புரிந்து கொண்டு கழிவறையை கட்டியதால் சந்தோசமாக இருக்கிறது" என்றார்.

உண்மையிலேயே பெண்கள் ஆரோக்கிய சீர்கேட்டிலிருந்து தங்கள் கிராமத்தைச் சுத்தமாக வைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். 2019ம் ஆண்டில் ஒடிசாவை திறந்த வெளி மலம் கழிக்காத மாநிலமாக உருவாக்க மாநில அரசாங்கம் முனைகிறது.■

வேதாரண்யம் ரோட்டரி சங்கம் (D 2981)

எலும்பு சம்பந்தமான நோய்களைக் கண்டறிவதற்கான இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. காரைக்காலில் உள்ள கே.எஸ். ஆர்த்தோபீடிக் சென்டர் மற்றும் சில அமைப்புகளுடன் இணைந்து இந்த முகாம் நடத்தப்பட்டது. முகாமில் கலந்து கொண்ட 500க்கும் மேற்பட்டோர்களுக்கு மருத்துவ குழு இலவசமாக சிகிச்சை அளித்தது.

கரூர் ரோட்டரி சங்கம் (D 3000)

நெடுங்கனூர் கிராம மக்களுக்காக சூரிய சக்தியில் இயங்கும் மூன்று விளக்குகளை ரூ.50 ஆயிரம் செலவில் RID C பாஸ்கர் அவர்கள் கரூர் ரோட்டரி அங்கத்தின் சார்பாக வழங்கினார். குடிநீர் இன்றித் தவிக்கும் உள்ளூர் மக்களின் கோரிக்கை களை ஏற்று, ரூ.1.50 லட்சம் செலவில் குடிநீர் வடிகட்டும் இயந்திரமும், தெருவிளக்குகளும் அமைத்துத் தரப்பட்டன. உப்புநீரைச் சுத்திகரிக்கும் இயந்திரத்தை மகளிர் சுய உதவிக் குழுவினரே பராமரிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குண்டலி ரோட்டரி சங்கம் (D 3012)

ஹரியானா மாநிலம் குண்டலி அருகில் உள்ள அட்டெரினா கிராம அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முப்பதுக்கு மேற்பட்ட சைக்கிள்கள் வழங்கப்பட்டன. மனோலி கிராமத்தில் ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனியாக கழிவறைகள் கட்டித் தரப்பட்டன. நன்கல் கிராம அரசு உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்காக சானிடரி நேப்கின் இயந்திரம் நிறுவப்பட்டது.

ரேவாரி மெயின் ரோட்டரி சங்கம் (D 3011)

ஹரியானா மாநிலம் ரேவாரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் குளிரூட்டு இயந்திரங்கள் அமைக்கப்பட்டன. தினமும் சிகிச்சைக் காக வரும் சுமார் 200 பேர் பயனடைவர். இவற்றுக்காக மொத்தம் ரூ.40 ஆயிரம் செலவிடப்பட்டது.

சங்க சேவைகள்

பிகானீர் மிட் டவுண் ரோட்டரி சங்கம் (D 3053)

ராஜஸ்தான் மாநிலம் இட்காக் பாரி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நான்கு கருப்பு பலகைகள் வழங்கப்பட்டன. ரோட்டரி சங்கத் தலைவர் குலாப் சோனி, செயலாளர் கிரிராஜ் ஜோஷி மற்றும் சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர். பள்ளி முதல்வர் முன்னி தேவி ரோட்டரி சங்கத்துக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பலன்பூர் சிட்டி ரோட்டரி சங்கம் (D 3054)

குஜராத் மாநிலம் பலன்பூர் சிட்டி ரோட்டரி உறுப்பினர் டாக்டர் பிரகாஷ் ஷாவின் நன்கொடையில் ஏழைப் பெண்கள் 250 பேருக்கு கோதுமை, பருப்பு, சர்க்கரை வழங்கப்பட்டன. இதன் காரணமாக இப்பகுதி மக்கள் ரோட்டரி சங்கத்தின் மீது நன்மதிப்பையும் அன்பையும் கொண்டுள்ளனர்.

உம்பேர்கான் ரோட்டரி சங்கம் (D 3060)

இங்குள்ள ரயில் நிலையத்தில் பயணிகளின் தாகத்தைத் தணிப்பதற்காக தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டது. இங்கு குடிநீர் சுத்தகரித்து, குளிரூட்டும் இயந்திரமும் வைக்கப்பட்டுள்ளது. இதை ரோட்டரி சங்கமே பராமரிக்கிறது.

வடக்கு அமிர்தசரஸ் ரோட்டரி சங்கம் (D 3070)

பஞ்சாப் மாநிலம் வடக்கு அமிர்தரசரஸ் ரோட்டரி சங்கம் சார்பில் ஏழைப் பெண்களின் வாழ்வாதாரத்துக்காக தையல் பயிற்சி அளித்து இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

கர்னல் மிட் டவுண் ரோட்டரி சங்கம் (D 3080)

ஹரியானா மாநிலம் கர்னல் மிட் டவுண் ரோட்டரி சங்கம் நிலோகரியில் உள்ள தபன் மறுவாழ்வு மையத்தின் 10 குழந்தைகளுக்குக் காது கேட்கும் கருவிகள் அளிக்கப்பட்டன. அலுவல் பயணம் மேற்கொண்டிருந்த மாவட்ட ஆளுநர் டி.கே. ரூபி இத்திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

வடக்கு அலகாபாத் ரோட்டரி சங்கம் (D 3120)

பூனா டவுண்டவுன் ரோட்டரி சங்கமும் சேர்ந்து வாத்சல்ய சபா நகரில் செயற்கைக் கை பொருத்தும் மருத்துவ முகாமில், (LN&4 prosthetic hand fitment camp) 300 பேருக்கு செயற்கைக் கை, கால்கள் பொருத்தப்பட்டன. இந்தப் பணியின் மூலம் ரோட்டரி அமைப்புக்கு சமுதாயத்தில் புகழ் அதிகரித்தது.

புனே மகர்பட்டா சிட்டி ரோட்டரி சங்கம் (D 3131)

RC மகர்பட்டா சிட்டி சார்பில் மகளிர், பெண்கள் தினம் பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெற்றன. அசெஞ்சர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் டாக்டர் மாதவி வாஸ், சமூக சேவகர்கள் ஷோபனா கவாஸ், ஷில்பா வெங்கட், சஞ்சீவினி பால்குடே ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர்; தொடர்ந்து ஃபெலோஷிப் நிகழ்வும் இடம்பெற்றன.

மும்பை கட்கோபர் ரோட்டரி சங்கம் (D 3141)

குர்லா என்ற இடத்தில் உள்ள சந்த் கட்கே மகராஜ் பள்ளி கூரையில் ரூ.4 லட்சம் செலவில் சூரிய ஒளித் தகடுகள் பொருத்தப்பட்டன. அத்துடன், ரோட்டரி சங்கம் சார்பில் மாணவர்களுக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்கள், உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நிஜாமாபாத் ரோட்டரி சங்கம் (D 3150)

தெலுங்கானா மாநிலம் நிஜாமாபாத் குப்பன்பள்ளி கிராமத்தில் உள்ள ஜில்லா பரிஷத் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. சூரிய ஒளியால் பாதிக்கப்படும் சன் ஸ்ட்ரோக் நோய் தவிர்ப்பு விழிப்புணர்வுக் கூட்டமும் நடைபெற்றது. 90 மாணவர்கள் பங்கேற்றனர்.

கொள்ளேகல் மிட் டவுண் ரோட்டரி சங்கம் (D 3181)

கர்நாடக மாநிலம் RC கொள்ளேகல் சார்பில் இலவசக் கல்வி அளித்துவரும் ஸ்ரீ சாலூர் கிருபா உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மேசைகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் மாவட்ட ஆளுநர் சுரேஷ் செங்கப்பா, தமயந்தி செங்கப்பா, துணை ஆளுநர் பிரவீண்குமார், சங்கத் தலைவர் பிரதீப் ஃபெர்னாண்டஸ் பங்கேற்றனர்.

சங்க சேவைகள்

பல்லடம் வானவில் ரோட்டரி சங்கம் (D 3202)

RC பல்லடம் வானவில் சார்பில் மாற்றுத் திறனாளிப் பெண்களின் வாழ்வாதாரத்துக்காக ரூ.60ஆயிரம் செலவில் தேநீர்க் கடை அமைத்துத் தரப்பட்டது. அதற்கான உபகரணங்கள், மளிகைப் பொருட்களை ரோட்டரி சங்கத் தலைவர் எஸ். கவிதா ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து வழங்கினார்.

ஆலப்பி கிழக்கு ரோட்டரி சங்கம் (D 3211)

RC ஆலப்பி கிழக்கு சார்பில் ரூ.40 லட்சம் செலவில் மார்பக ஊடுகதிர்ப் பட மையம் (Rotary Mammogram Centre) அமைக்கப்பட்டது. மையத்தை ரோட்டரி மாவட்ட ஆளுநர் சுரேஷ் மேத்யு திறந்துவைத்தார். ஆலப்பி, குட்டநாடு பகுதி பெண்கள் சோதனை செய்து கொள்ளலாம். குட்டநாடு பகுதிகளில் பல பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

காரைக்குடி ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம் (D 3212)

காரைக்குடி ஆலங்குடியூர் நகராட்சித் தொடக்கப் பள்ளியில் பொது மருத்துவ முகாமும், பெண்களுக்கு மார்பகப் புற்று நோய் பரிசோதனையும் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மார்பகப் புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு உரையை டாக்டர் கார்த்திகேயன் நிகழ்த்தினார்.

ரூர்க்கேலா மிட் டவுண் ரோட்டரி சங்கம் (D 3261)

ஜார்க்கண்ட் மாநிலம் ரூர்க்கேலாவில் உள்ள உயர் தொடக்கப் பள்ளியில் கைகழுவுவதற்கான மையம் அமைக் கப்பட்டுள்ளது. கைகழுவுதைப் பிரசாரம் செய்யும் தேசிய இயக்க கமிட்டியின் (National WinS Recognition Committee) துணைத் தலைவர் ஏ.பி. மகாபத்ரா தொடங்கிவைத்தார். அதன் தலைவர் முன்னாள் ரோட்டரி மாவட்ட ஆளுநருமான வரவந்த்கர் பங்கேற்றார்.

ஜோக்கா ரோட்டரி சங்கம் (3291)

மேற்கு வங்கம் கோல்கத்தாவில் உள்ள RC ஜோக்கா சார்பில் ரோட்டரி இளம் தலைமைக்கான விருது (RYLA) நிகழ்ச்சியில் கல்கத்தா பார்வையற்றோர் பள்ளி மாணவர்கள் 36 பேர் பங்கேற்றனர். மாவட்ட ஆளுநர் ப்ரோஜோ கோபால் குண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி வேதஸ்வரூபானந்தர் சிறப்பித்தார். மாணவர்கள் விளையாட்டு முதல் பேச்சாற்றல் வரையில் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தினர். நிறைவு நிகழ்ச்சியில் PRID சேகர் மேத்தா பங்கேற்றார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன், வடிவமைப்பு: L குணசேகரன்

COLOURED STEEL THAT STANDS THE TEST OF TIME.

Coils



LATIM

COLOUR COATED STEEL

LATIM's high quality coloured / pre-painted galvanized / galvalume steel coils can be used for various Applications - Roofings, Claddings, Crimping, Warehouse, Cold Storage, Furnitures, False Ceilings, Shutter Doors, Vehicle Bodies, Decorative Container & Trunks, etc.

Ideal for Interior and Exterior Applications.

- Coloured / pre-painted sheet in various profiles available.
- Available in various thickness, sizes and colours.

Profiles



LA TIM GROUP

Corporate Office : 401, Navkar Plaza, 4th Floor, Bajaj Road, Vile Parle (West), Mumbai - 400056.
Tel : (022) 26202290, 26203399, 26203434, 26201166
Factory : Industrial Plot No. 270, 271, GIDC, Umbergaon, Valsad. Gujarat - 396171
E-mail : sales@latimsourcing.com ● Web : www.latimprofile.com

Signature

இது தலைபோற சமாசாரம்!

TCA சீனிவாச ராகவன்

எனக்கு இந்த மாத ஆரம்பத்தில் பாஸ்போர்ட் புகைப்படம் தேவைப்பட்டது. என் மனைவி, தலைமுடி வளர்ந்துவிட்டது, போட்டோ எடுப்பதற்கு முன் ஹேர் கட் செய்து கொள்ளுங்கள் என்று கூறினாள்.

திருமணம் ஆகி 37 ஆண்டுகள் மனைவியோடு வாதம் செய்வது வீண் என்பது தெரியும். சலூனைத் தேடிப் போனேன். நல்ல கூட்டம். கூட்டமில்லாத சலூனுக்குள், இரண்டு நாற்காலிகளில் சலூன் பணியாளர்கள் முடி திருத்தும் பணியைச் செய்து கொண்டிருந்ததால், சிறிது நேரம் காத்திருந்தேன்.

ஆறு வருடத்துக்கு முன் இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் டாக்டர் D. சுப்பாராவ் கேட்ட கேள்விகள் மனதில் நினைவுக்கு வந்தன. முப்பது வருஷத்துக்கு முன் முடி திருத்துவதற்கு ஆன செலவை விட இப்போது எக்கச்சக்கமாக கட்டணம் அதிகரித்தது ஏன் என்றும் கிட்டதட்ட வழுக்கைத் தலையில் இருப்பவரிடமும் புதர் போல் முடி அடர்த்தியானவரிடமும் ஒரே மாதிரி கட்டணம் வசூலிப்பது ஏன் என்றெல்லாம் கேட்டிருந்தார்.

பண வீக்கம் குறித்த கட்டுரையில் இப்படி அவர் குறிப்பிட்டிருந்தார்.

முடி திருத்துவதில் உள்ள பொருளாதாரத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தேன். பல கேள்விகளுக்கு முடி திருத்துவோரிடம் சரியான பதில் இல்லை. முடி திருத்துவதற்கு இவ்வளவு கட்டணம் என்பதை எப்படி நிர்ணயிக்கிறார்கள்? அதற்கு முடிதிருத்துவோரின் பணி எப்படி? வெட்ட வேண்டிய தலை முடி அளவு ஒரே மாதிரி இருந்தாலும், முடி திருத்தும் கட்டணம் மட்டும் அதிகமாவதேன்? இதிலே என்ன தொழில்நுட்பம் கையாளப்படுகிறது? வெவ்வேறு தரத்தில் முடி திருத்தினாலும் கட்டணம் ஒரே மாதிரி இருப்பதேன்?

ஐந்து நட்சத்திர சலூனுக்குச் சென்றால் தலைமுடி வெட்ட ரூ.1,500 கட்டணம் வசூலிக்கிறார்கள். எவ்வளவு முடியாக இருந்தாலும் ஒன்றுதான்! அதே சமயம், மரத்தடியின் கீழே முடிவெட்டுபவர் ரூ.15 கட்டணம் வாங்கிக் கொண்டு, அற்புதமாக முடியைத் திருத்தி அமைக்கிறார். முடி வெட்டுவதற்குச் செலவு இல்லை. தலைக்குப் போடும் கிரீம், ஷாம்பூ, துடைப்பதற்கான டவல் இத்தியாதி விஷயங்கள் தான் கட்டணத்துக்குக் காரணம். இத்தனைக்கும் மரத்தடி நாவிதர் காசு வாங்காமல் தலைக்கு நன்றாக மசாஜும் செய்து விடுகிறார்.

முக்கியமான கேள்விகள்

தில்லி பொருளியல் பள்ளியின் மறைந்த பொருளாதாரப் பேராசிரியர் மிருணாள்தத்தா சௌத்ரி சொல்லிக் கொடுத்தது நினைவுக்கு வந்தது.

அவர் சொல்லித் தந்தது, இடம் குறித்த கருத்தியல் (location theory). பின் புதிய வணிகம் எந்த இடத்தில் அமைந்திருக்கிறது என அறிவதில் ஆர்வம் காட்டினேன்.

முடிதிருத்தும் நிலையம் நடத்துவோர் எந்த இடத்தை தேர்ந்தெடுக்கிறார்கள்? சில சலூன்கள் மார்க்கெட்களில் இருப்பது உண்டு. சில சலூன்கள் இருப்பதில்லை. காரணம், வசதிகள். சில சலூன்களில் குளிர்சாதன வசதி இருக்கும். சிலவற்றில் இருக்காது. நாற்காலிகள் நவீனமாகவும் வசீகரமாகவும் இருக்கும், மர நாற்காலிகள், சுத்தமான டவல்கள், என பலவற்றைக் கூறலாம். எல்லோருமே ஒரே மாதிரிதான் கட்டணம் வசூலிக்கிறார்கள். சில சமயம் சாதாரண கடைகளில் கூட நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருக்கும். சில கடைகளில் அப்படியிருக்காது. ஆகையால், நல்ல நாவிதரைத்தான் தேடிப் போகிறார்களே தவிர, குளுகுளு வசதிக்காக மட்டுமல்ல என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

சில விஷயங்கள் பிடிபடுவதில்லை. உதாரணத்திற்கு பல் மருத்துவரின் கிளினிக் போல, சில மருத்துவ லேப்களைப் போல அல்லாமல், சின்னதாகவே இருக்கின்றன.. மக்கள் தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப சலூன்களின் எண்ணிக்கை உயர்வதில்லையே ஏன்...? அப்படி இருந்தால் கட்டணம் அதிகரிக்காதே...! முடி திருத்தும் பணியாளர்களுக்குப் பஞ்சமா?

இது போல பல கேள்விகள் உண்டு. சில சலூன்களில் முடிதிருத்தும் கடையின் முதலாளி இவ்வளவு நாற்காலிகள் இருக்க வேண்டும் என்று எதை வைத்து முடிவு செய்கிறார்? வார விடுமுறை நாட்களில் அதிகமாகவும் இதர அலுவல் நாட்களில் குறைவாகவும்? எப்படி? கத்தரி, சீப்பை வைத்து வெட்டுவதை மாற்றி, இயந்திரங்களைக் கொண்டு வெட்டுவது வசதியாக இருக்கிறதா? இயந்திரம் பயன்படுத்தினால் எவ்வளவு நேரம் மிச்சமாகிறது? தலை மசாஜ் செய்வதற்கும், ஷாம்பு மூலம் சுத்தப்படுத்துவதற்கும் ஆகும் கட்டணத்தை விட முடி திருத்தும் கட்டணம் குறைவாக இருப்பது ஏன்? முடி திருத்த ஆகும் அதே கட்டணம் லேசாக முடியைச் செதுக்கி ட்ரிம் செய்வதற்கும் ஆவது ஏன்?

இப்படி ஏராளமாகச் சொல்லிக் கொண்டே போகலாம்... அதெல்லாம் இருக்கட்டும், தலைமுடி திருத்தும் தலைக்குத்தான் இந்தப்பிரச்சினையெல்லாம்!■

முடி வெட்டுவதற்குச் செலவு இல்லை. தலைக்குப் போடும் கிரீம், ஷாம்பூ, துடைப்பதற்கான டவல் இத்தியாதி விஷயங்கள் தான் கட்டணத்துக்குக் காரணம்.

With Best Compliments

BE THE INSPIRATION

Rotary
District 3012

Subhash Jain
District Governor 2018-19

Assistant Governor Training Seminar

3rd - 4th March 2018, ITC Mugal, Agra

Rtn. Arun Jain - AKS Declarant
Honored by Gold Pin at PETS-2018

President Elect & Secretary Elect Training Seminar

6th - 8th April 2018, Hayatt Regency, Manesar, Gurugram

District Training Assembly & DTTS

20th May 2018, Radisson Blu, Kaushambi, Gzb.

Grant Management Seminar

10th June 2018, Radisson Blu, Kaushambi, Gzb